# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்



ஜனவரி–மார்ச் 2019

விலை : 100/=



# மீண்டெழுவாய்

த. ஜெயசீலன்

கண்களில் நீர்த்துளி கண்டு துடைத்துக்
கசிந்து உருகுகிறேன் -உந்தன்
கால் கையில் காய்ந்து உறைந்த குருதியை
கழுவி அகற்றுகிறேன் -உடற்
புண்களின் சீழினை ஒற்றிப் புதுத்துணி
போட்டு மருந்திடுவேன் -சிறு
புன்னகை மொட்டு அரும்பி மலர் முகம்
பூக்க.... வருடுகிறேன்.

உன்மனக் காயம் வடுக்கள் உறுத்தும்
உளச் சிகிச்சை தருவேன் - அட
உள் மனைந்துள்ள கண்டல்கள், புற்றை...அறுத்
துள் வலி போக்கிடுவேன் -எதும்
மென்று விழுங்கத் தடுக்கும் வாய்க் கச்சலை
வீழ்த்த.... இரசம் அருள்வேன் -நிதம்
வேதி பிடித்து... தலைச் சளி, குத்திடி,
வேக உதவிடுவேன்.

"என் எழில் நாடே எழுந்திடு!" பத்தியம்
இப்போ அருந்திடுவாய்! -எடு
எட்டுக் குளிசைகள் தண்ணி மருந்திவை
கைக்கும் குடித்திடுவாய்! -உடன்
உன் பிணி போக்கவே நேர்ந்து வந்தேன்...பிர
சாதம், நூல் ஏற்றணிவாய்! -உள்ள
உன் முக 'நாமுறு' போக்கிடச் ...சுற்றியே
போடுவேன்....நீ உயிர்ப்பாய்!

இப்படியே பிணியோடிருந்தால் எவர்
என்று உனைமதிப்பார்? -வலு
ஏது மிலாது நலிந்திருந்தால் இனி
எப்படி நீ நிமிர்வாய்? -உனைச்
சப்பும் கிருமிகள், நோய் நொடி, மேவிடில்
சாவில் விழுந்தழிவாய்! -எழு
சாப்பிடு சத்துக்கள்; நான்தருவேன் துணை
சக்திகொள்... மீண்டு வெல்வாய்!

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாடு

# தாயகம்

**கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்**

**இதழ் 95**

**ஜனவரி-மார்ச், 2019**

பிரதம ஆசிரியர் :

***க. தணிகாசலம்***

***தொலைபேசி : +94765283003***

நிர்வாக ஆசிரியர்:

***ச. சத்தியதேவன்***

ஆசிரியர் குழு :

***சி. சிவசேகரம்***
***குழந்தை ம சண்முகலிங்கம்***
***சோ. தேவராஜா***
***அழ. பகீரதன்***
***தெ. ஞா. மீநிலங்கோ***
***வே. தினகரன்***
***லோ. நிலா***
***க ஆதித்தன்***

இதழ் வடிவமைப்பு :

***சிவ பரதன்***

அட்டை படம் :

***முகிலனின் ஓவியம்***

ஓவியங்கள் :

***நன்றியுடன் இணையத்திலிருந்து***

படங்கள்:

***எஸ். சி. அனுஜன்***

தொடர்பு :

***ஆசிரியர்,***
***ஆடியபாதம் வீதி,***
***கொக்குவில்***

மின்னஞ்சல் :

*thajaham@gmail.com*

*ISSN NO : 2335-9492*

அச்சுப்பதிவு : *JS PRINTERS*
*SILLALAI ROAD*
*PANDETHERUPPU*

## உள்ளடக்கம்

### கவிதைகள்

*த. ஜெயசீலன்*
*கணேசவேல்*
*ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்*
*கிருஷ்ணப்பிரியன்*
*சி. சாரதாம்பாள்*
*சிவா*
*தம்பா*
*செம்மலர் மோகன்*
*எஸ்.மைக்கேல் ஜீவநேசன்*
*எஸ். புவனேந்திரன்*

### சிறுகதைகள்

*க. சிவகரன்*
*உடுவில் அரவிந்தன்*
*ஜனப்பிரியன்*
*அண்டனூர் சுரா*

### கட்டுரைகள்

*ஞானசீர்த்தி மீநிலங்கோ*
*தவச்செல்வன்*
*அதீதன்*
*மாதவி உமாசுதசர்மா*

### மொழியாக்கம்

*சி.சிவசேகரம்*
*மீநிலங்கோ*
*வினவு*

K. BHARANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
Kalaiaham, Alvai.

தேசிய கலை இலக்கியப் பேரவை
இல: 62, கொக்குவில் சந்தி,
கொக்குவில்

நிதி அனுப்புதல்களுக்கு :
தாயகம் ஆசிரியர் குழு
Editorial Board of Thayakam
S/A NO : 0072361444
BANK OF CEYLON, CHANKANAI
SWIFT CODE NO : BCEYLKLX

தாயகம்
கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

இதழ் 96 ஜனவரி –மார்ச் 2019

# வேதாளமும் முருங்கை மரமும்

இலங்கையில் எழுபத்திரண்டு ஆண்டுகளாகத் தொடரும் பேரின, குறுந்தேசிய இனவாத அரசியல், ஒரு பேரழிவு யுத்தத்தை ஏற்படுத்திய பின்னரும், மாறுதலின்றி அதே வழியில் செல்வதை மக்கள் எவ்வளவு காலம் ஏற்பார்கள்? 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுகிறது' என்ற விக்கிரமாதித்தன் கதைகளின் பழக்கப்பட்ட இறுதிக் கூற்றை தமிழ் மக்கள் தமக்குள் கூறுகிறார்கள். ஏவ்வாறாயினும் இனப்பிரச்சினையை மட்டுமே பேசிவந்த அரசில்வாதிகளில் ஒரு சிலராவது இன்று மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் பற்றி - அவற்றை உரிமையுடன் பெறுவது பற்றி இல்லாவிட்டாலும் - பேசவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வெகுஜனப் போராட்டங்களில் மக்களின் பங்களிப்பு அதிகரிப்பதே இவர்களில் இந்த மாற்றங்களுக்கு காரணமாகும். ஆனால் பிரதான அரசியல் நீரோட்டம் இன்னும் இனவாத அரசியல் எல்லைக்குள் மட்டுப்படுகிறது.

வெகுஜனப் போராட்டங்கள் இன்று இரு தளங்களில் நடைபெறுகின்றன. ஒன்று போராற் பாதிக்கப்பட்ட மக்கள் அவற்றில் இருந்து மீண்டு தமது வாழ்வை மீளமைத்தற்கான போராட் டங்கள். நில மீட்பு, அரசியற் கைதிகளின் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கியோரைக் கண்டடைதல், பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதார உரிமைகள், அங்கவீனமான போராளி களதும் அல்லற்பட்ட பொதுமக்களதும் புனர்வாழ்வை உறுதிப்படுத்தல், கடற் தொழிலா ளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றுக்கான போரட்டங்களாக அவை தொடர்கின்றன.

மற்றது, இலங்கையின் அனைத்து இனங்களையும் ஒன்றிணைக்கும் சாதாரண மக்க ளுக்கான போராட்டங்கள். இலவசக் கல்வி, இலவச மருத்துவம் என்பவற்றுக்கு குழிபறிக்கும் தனியார்மயத்துக்கு எதிரான போராட்டங்கள், விலைவாசி ஏற்றம், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பட்டதாரிகளின் வேலையின்மை, தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரச ஊழி யர்களின் சம்பள உயர்வு, சுற்றுச்சூழற் பாதிப்புகட்கு எதிரான போரட்டங்கள் என இப் போராட்டங்களின் பட்டியல் நீள்கிறது.

இருவகைப் போரட்டங்களும் ஆட்சியில் இருக்கும் அரசை நோக்கி அமைவதிற் பொதுமை காண்கின்றன. இரண்டும் ஒரே அரசியல் பொருளாதார அடித்தளத்திலிருந்து எழுகின்றன. ஆனால், தமிழர்கள் நடுவிலுள்ள அதிகார வர்க்கத்தினர், இவ் விரிந்த தளத்தில் நின்று முழு மக்களையும் ஒன்றுபடுத்தி உரிமைகளை வெல்லாமல், ஒடுக்கும் அரசு தன்னைப் பாதுகாக்க முன்வைக்கும் பண்பாட்டுத் தளவேறுபாடுகளை மட்டுமே முன்வைத்து உழைக்கும் மக்களை பிளக்கும் அரசின் கொள்கைக்கு உதவுகின்றனர். இதனால் சிறுசிறு பங்குபற்றல்கள் போக, இரு தளங்களிலும் எழும் மக்கள் போராட்டங்கள் ஒன்றிணைய முடிவவதில்லை. இது பேரினவாதத்தை தொடர்ந்தும் பலப்படுத்துகிறது.

இலங்கை அரசாலும் அது பாதுகாக்கும் சமூக பொருளாதார அமைப்பாலும் பல் வகைகளிற் பாதிக்கப்படும், ஒடுக்கப்படும் மக்கள் யாவரும் ஒன்றிணைந்தால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் காரணமாயுள்ள அதிகார வர்க்க அமைப்புத் தகரும். அது முன்வைக்கும் பேரினவாதமும் குறுந்தேசிய இனவாதமும் பொருளற்றுப் போகும். இதைப் புரிந்து கொண்டே மீண்டும் மீண்டும் பேரினவாதத்தையும் குறுந்தேசிய இனவாதத்தையும் எதிரெதிராக முன்வைத்து எழுபத்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இனப் பிரச்சினைக்கு தீர்வை எட்டாமல் அதிகார வர்க்கத்தினர் ஆட்சியின் நலன்களை சுகித்து வருகின்றனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பளத்துக்கான போராட்டம் மலையக எல்லைக்கு வரைப்படாமல் நாடளாவ முன்னெடுக்கப்பட்டமை இன்று மக்கள்

மத்தியில் சமூக பொருளாதார ஒடுக்குதலுக்கு எதிராக உருவாகும் விழிப்புணர்வின் அடையாளங்களில் ஒன்றாயுள்ளது. அதிலும் இவற்றில் இளைஞர்களதும் மாணவர்களதும் அக்கறையும் பங்குபற்றலும் வரவேற்கத் தக்கன. ஆனால் அவர்களது கடின உழைப்புக்கு கிடைக்க வேண்டிய நியாயமான கோரிக்கை என்ற ஆதரவு உணர்வுடன் இப் பங்களிப்புகள் நிற்கக் கூடாது.

இன்றைய நவகொலனிய தாராளமய பொருளாதார அமைப்பின் கீழ் மக்களின் வாழ்க்கையைப் பல்தேசியக் கம்பனிகளும் கூட்டிணைவு நிறுவனங்களும் நவீன இலத்திரனியல் ஊடகங்களின் உதவியுடன் வடிவமைக்கின்றன என்ற உண்மையை ஏற்கச் சிலர் பின்னிற்பர். ஆனால் நேரடியான கொலனி ஆட்சியின் கீழ் வெளிப்படையாக இரு நூற்றாண்டு கால எல்லைக்குள் வடிவமைத்த மலையக உழைக்கும் மக்களின் வாழ்வு, இன்றைய நவகொலனிய தாராளமய பொருளாதார அமைப்பிலும், அரசு கைகட்டி நிற்க கம்பனிகளால் கட்டுப்படுத்தப்படும் நிதர்சனத்தை நாம் இங்கு காண்கிறோம்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு வித்திட்டதும் கொலனியமே. முதலாளியப் பாராளுமன்ற ஜனநாயக முறையையும், சர்வசன வாக்குரிமையையும் தந்து சென்றதும் கொலனிய ஆட்சிதான். பராளுமன்ற ஆட்சி முறையுள் முனைப்படைந்த இனவாத அரசியல் 1978ல் இருந்து நவகொலனியப் பொருளாதார அமைப்பாக மாறிய பின்பே இலங்கையின் இனப் பிரச்சினை போர்முனையை நோக்கி நகர்த்தப்பட்டது. போரைக் கொடூரமாக முடிக்க இந்தியா, அமெரிக்கா, ஐ.நா. சபை யாவும் பங்களித்தன. தமிழ் மக்களுக்கு தீர்வை அவர்களே பெற்றுத் தருவர் என தமிழ்த் தலைவர்கள் மக்களை மீண்டும் நம்பவைக்கின்றனர். ஆனால் அவர்களது உதவியுடன் போருக்காகக் கட்டி எழுப்பிய படைபலத்துடன் நவகொலனிய அமைப்பு இன்று முழு இலங்கையிலும் தன்னை நன்கு நிலைநிறுத்தியுள்ளது.

இருபத்தொராம் நூற்றாண்டில் வாழும் நாம், வெறும் இலாப வேட்டையையே குறியாகக் கொண்டு உலகமயமாகிய ஏகாதிபத்திய நவகொலனிய நுகர்வுப் போட்டிப் பொருளாதார அமைப்புள் வாழ்கிறோம். இதனால் மனித உறவுகள் சிதைகின்றன. இன, மத, சாதி, பால் வேறுபாட்டுணர்வுகளும் ஒடுக்குதல்களும் மீண்டும் தூண்டப்படுகின்றன. நுகர்வுக் கழிவுகளை குப்பைகளை வேறெவரதும் வாழ்விடத்திற் கொட்டும் நிகழ்வுகள் நடக்கின்றன. நாம் காலூன்றும் நிலமும் காற்றும் நீரும் உணவும் நஞ்சாகி நமக்காக இல்லாமற் போகின்றன. காலநிலை மாற்றத்தால் நாம் வாழும் பூமி எமது எதிர்காலச் சந்ததிகளின் வாழ்விடமாக இல்லாமற் போகும் என விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர்.

எனவே ஒரு விஞ்ஞானபூர்வமான விரிந்த மனிதநேய அரசிலை மட்டுமன்றிப் பூவுலகையும் நேசிக்கும் அரசியலை நோக்கியும் மக்கள் மாற வேண்டும். சிங்களவரைச் சிங்களவர் ஆள்வதாலோ, தமிழரைத் தமிழர் ஆள்வதாலோ மட்டும் மக்கள் எதிர்நோக்கும் இது போன்ற பிரச்சினைகளுக்கு 'விடிவு கிட்டாது. எத்தகைய ஆட்சிமுறை நிலவும் என்பதிலேயே எதிர்காலம் தங்கியுள்ளது. இன, மத, சாதி, பால், வர்க்க ஒடுக்குதல்களுக்கு உள்ளாகும் அனைத்து மக்களும் அரசியல், சமூக, பண்பாட்டு விழிப்புணர்வுடன், வெகுஜனப் போராட்டங்களில் ஒன்றிணைய வேண்டும். அதுவே மக்களின் விடுதலைக்கான மாற்று அரசியலின் அடிப்படைக் களமாகும். அதுவரை, எழுபத்திரண்டு ஆண்டுகளாக நடந்தது போல வேதாளம் முருங்கை மரத்தில் மீண்டும் மீண்டும் ஏறும் கதை தொடரும்.


**தேசிய கலை இலக்கியப் பேரவையின்**

## 3வது அனைத்திலங்கை மாநாடு

மே மாதம் 18,19 ந்திகதிகளில் ஹற்றன் நகரில் நடைபெறும்.

கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

தேசிய மாநாட்டுச் சிறப்பிதழாக 'தாயகம்' அடுத்த இதழ் வெளிவர உள்ளது.

படைப்பாளிகளிகளிடமிருந்து

சிறுகதை, கவிதை, கட்டுரை என்பவற்றை மே 3ந்திகதிக்குள் அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

# பாராளுமன்றக் கேலிக்கூத்தின் அவலம்

ஜனாதிபதி சிறிசேன 26.10.2018 அன்று விக்ரமசிங்ஹவைப் பதவிநீக்கியது சட்ட விரோதமென உயர் நீதிமன்றம் 15.12.2018 தீர்க்கும் வரை, நாட்டின் முதலாவது அரசியல் யாப்புச் சதிப் புரட்சி 51 நாட்கள் நீடித்தது. ஜனாதிபதியின் கண்டிக்கத்தக்க பொறுப்பீனம் தொடர்கிறது. ராஜபக்சவிடம் இல்லாத பெரும்பான்மையை உள்ளதாக அறிவித்த அவருடைய நோக்கமும் அப் பெரும்பான்மையை உருவாக்க நடந்த நெறிகேடான செயல்களும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் நம்பகத்தை முற்றாகச் சீரழித்தன.

த.தே.கூ. பாராளுமன்ற ஜனநாயக விழுமியங்களைப் பேணியதை மெச்சலாமெனினும், த.தே.கூ. வேறு சூழல்களிற் அவ் விழுமியங்களைப் பேணியிருக்குமா என்பது ஐயமானது. அதன் ஐ.தே.க. விசுவாசம் நாடறிந்தது. பிரதான எதிர்க் கட்சி போலன்றி ஐ.தே.மு. அரசாங்கத்தின் மறைமுகப் பங்காளி போல நடந்து அதை மேலும் உறுதிப்படுத்தியது.

1994க்குப் பின் எக் கட்சிக்கும் (2010ம் ஆண்டுத் தேர்தல் போக) பாராளுமன்றப் பெரும்பான்மை கிட்டவில்லை. 2006இல் உறுதியான ஒரு பெரும்பான்மையைப் பெறுமுகமாக எதிர்க் கட்சிப் பா.உ.களை ராஜபக்ச விலைக்கு வாங்கியது முதல், கேலிக்குரிய பூதாகர அமைச்சரவைகள் நாட்டின் வழமையாகின.

ராஜபக்ச களவாகப் பிரதமராவதை ஏற்பது, தனது குடும்பத்தின் ஊழல்மிக்க ஆட்சியை நீடிக்கும் நோக்குடன் இருந்த அவரை ஜனாதிபதியாகத் தொடர ஏற்பதனளவு தவறானது. எனினும் 2015இல் ராஜபக்ச ஆட்சி போனதால், ஊழற்காரக் கூட்டமொன்றின் இடத்திற்கு இன்னொரு ஊழற்காரக் கூட்டம் வந்ததேயொழிய, நாட்டிற்கோ மக்களுக்கோ நலன் விளையவில்லை. ஜனாதிபதியின் அதிகாரம் சிறிது மட்டுப்பட்டதையும் சற்று அதிக ஊடகச் சுதந்திரத்தையும் விட்டால், சட்டத்தையும் ஒழுங்கையும் மீட்பதிலும் நிதி ஊழலையும் அதிகாரத் துர்ப்பாவனையையும் ஒழிப்பதிலும் சாதனை எதுவுமில்லை.

அலங்கோலமான பொருளாதாரத்தின் நடுவே, மக்களுக்குச் சொற்ப நன்மையுமற்ற பெருந் திட்டங்கட்காக நாடு மேலுங் கடனாளியாகிறது. தோற்ற சதிப்புரட்சிக்குப் பின்பும் ஐ.தே.மு. திருந்தவில்லை. தனது பிழைகளைத் திருத்தாமல் சதிப் புரட்சிக்கு முன்பை விடத் திமிருடன் நடக்கிறது. அமைச்சர் பதவிகளை அதிகரிக்கத் தேசிய அரசாங்கம் பற்றியும் பேசுகிறது.

ஐ.தே.மு. - ஐ.ம.சு.கூ. ஒரு வசதி கருதிய சம்பந்தம் மட்டுமே. கட்சிகளிடையே அரசியல் உள்ளடக்கத்தில் உள்ள அற்ப வேறுபாடுகள் போகத், தனிப்பட்ட விசுவாசங்களையும் ஆதரவையும் நம்பியுள்ள கட்சிக் கட்டமைப்புகள், பேராசையும் அதிகார ஆவலுங் கொண்டோரின் நலன்பேணும் இரு தரப்புகளிடையே நம்பிக்கைக்கோ ஒத்துழைப்புக்கோ உதவா. எனவே அவற்றின் பங்காண்மை கருவிலேயே மரித்துவிட்டது.

அரசாங்கக் கொள்கைகள் பலதில் கட்சி விருப்புகட்குப் பெறுமதியில்லை. பொருளாதாரத் தாராளமாக்கலும் போரும் போட்டியிடும் வல்லரசுகளிடம் நாட்டின் இறைமையை ஒப்படைத்து விட்டன. நாட்டிடம் தமது எதிர்பார்ப்புகளும் தாம் விரும்பும் அரசாங்கமும் பற்றி வலியுறுத்தும் வல்லரசுகள் நாட்டின் உள் அலுவல்களில் குறுக்கிடக் காத்துள்ளன.

1978இல் கைக்கொண்ட நாசகாரப் பொருளாதாரக் கொள்கையின் விளைவான பொருளாதாரக் குழப்பத்தினின்று நாடு மீளவியலாதுள்ளது. வேதனையான போரொன்றின் பின்பும் தேசியப் பிரச்சனையைத் தீர்க்க இயலவில்லை. ஊழலும் குற்றச் செயல்களும் ஆதிக்கஞ் செய்கின்றன. பெரிய அரசியற் கட்சிகளிடமோ கூட்டணிகளிடமோ ஜே.வி.பி. யிடமோ சிறுபான்மைத் தேசிய இனங்களின் குறுந் தேசியக் கட்சிகளிடமோ இவற்றுக்கு விடையில்லை. பாராளுமன்ற அரசியல் முறைமையின் தன்மை, குறுகிய நோக்கங்களையும் முதலாளிய நலன்களையும் மேவி எழும் அரசியற் கட்சிகளின் தோற்றத்துக்குப் தடையாயுள்ளது.

பாராளுமன்ற ஜனநாயகம் என்பது ஜனநாயகப் பெயர் சூடிய ஒரு கேலிக்கூத்து. இலங்கையில் முயன்று தோற்ற அண்மைய சதிப் புரட்சியும் அதன் தோற்கடிப்பும் தொடர்வும் அக் கேலிக்கூத்தை மேலுங் கேவலப்படுத்தின. அவை பாராளுமன்ற ஜனநாயகம் வேறும் மிரட்டல்கட்கு முகங் கொடுக்கும் வாய்ப்பையே உணர்த்துகின்றன.

பாராளுமன்ற ஜனநாயகத்தை ஃபாசிச இராணுவ மிரட்டல்கட்கெதிராகக் காப்பது முக்கிய எதிர்காலப் பணியாயமையும். எனினும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கும் வலுவான ஜனநாயகம் ஒன்று வேண்டின், இடதுசாரி, முற்போக்குச் சக்திகளே வெகுஜன அரசியல் மூலம் அதை நிறுவ இயலும்.

# விழி சுழித்த வழி

யாரெல்லாமோ சொன்னார்கள்
மெத்தென அரசு
மீளாச்சோம்பலில் புதையுண்டதென.

அரசு
சோம்பல் முறித்துக் கொள்ளும் போதெல்லாம்
அங்கங்களை இழந்தவர்களும்
அபலைகளின் அழுகுரல்களும்
வீதிகளை அடைத்து விடுகின்றன.

முண்டங்களுக்கு
கைகள் இருந்தால்
சுறுசுறுப்பாகி அடித்துக் கொள்கிறது.
கால்கள் இருந்தால்
சகபிரதிநிதிகளை உதைந்து வைக்கிறது.
வாயிருந்தால்
நல்ல வார்த்தைகளை வடித்து விழுங்கிவிட்டு
மிகுதியை காட்டுக்கத்தலாக
கொட்டித் தீர்க்கிறது.

நிதிகளின் நீதி
சதிகளில் போதையடைய
மக்கள் மன்றத்தை கபளீகரம் செய்து
உடைத்து நொறுக்கும்.
விலையில்லா குப்பைகளின் மேல்
உறங்கி போதை களைந்த வெளியில்
இறையாண்மை அரசு என்று
கைகளைக் கோர்த்துக்கொள்ளும்.

தொண்டை வறண்ட பனிக்காலத்தில்
போதன், டர்கய்ட், பர்கஸ்
எல்லோரையும் காய்ச்சி குடிக்க
"மக்கள் மீதான எல்லையற்ற அதிகாரமே இறைமை"
நிசப்தத்தைக் கரைத்த கூரைபல்லி
கத்தி கத்தி சோற்றுப்பானைக்குள்
விழுந்து உயிரை விட்டொழித்தது.

காட்டுமரங்களின் வேரின் நதிமூலம்
ரிஷிமூலம் கண்டும்
வற்றாத அன்னையரின் கண்ணீர்
வறண்ட மணலை சேறாக்க
தசைகளை மண் தின்றும்
வாஞ்சையுடன் கையுயர்த்தி
'டாப்பில்' இறப்பை பதியவைக்கும்
கடைசித்தருணம் இது.


விழிக்கும்போது அழித்துவிடுவது
பருந்தின் இறையாண்மையாகவும்,
அழிக்கும்போது விழித்துக்கொள்வது
கோழிக்குஞ்சின் இறையாண்மையாகவும்
முரண்நகையில் விரிகின்றன எல்லைகள்.

மெல்லவும் முடியாமல்
விழுங்கவும் முடியாமல்
இறையாண்மை விறுவிறுத்து
எலும்புக் கூடுகளையும்
மண்டை ஓடுகளையும் ஒழித்து
கழித்தற் கணக்கையே பாடமாக்குகிறது.

யாரெல்லாமோ சொன்னார்கள்
மெத்தென அரசு
மீளாச்சோம்பலில் புதையுண்டதென.

தம்பா

# வீழ்ந்தவள் எழுந்தால்...



அதிகாலை நேரம்
குளிர்காய்ச்சலில் நடுங்கிக்கொண்டிருக்கும் மரங்கள்.
சோம்பல் முறித்துக் கொழுந்து பறிக்கச் செல்லும் "தனம்"

சோறூட்டி, தாலாட்டி, கூடை சுமக்கையில்
பிள்ளையின் சட்டையில் வெளிதள்ளி தென்படும்
சிவப்பு எழுத்தில் சுருட்டி வைத்த ஒரு துண்டுப்பிரசுரம்..

பிரித்துப் படித்தால்...
"அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாய் வேண்டும்
ஆயிரம் இல்லையேல் அத்தியாயம் உனக்கில்லை,
மரணத்திலும் போராடுவோம்
போராட்டத்திலே உனை வெல்வோம்
"இனியும் மடியோம், எழுவோம்...
......................................................................"
ஏமாந்தோம்..............................................
......................................................................"
நீண்டு சென்று
"உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்"
காலை பத்து மணிக்கு நகர மத்தியில்
"ஆயிரம் ரூபாய் அடிப்படைச் சம்பளம் வேண்டிப் போராட்டம்"
முடியும் வாசகம்.

ஐந்தாம் நம்பர் சிந்தனைகள் திரும்பிவர
சிந்தனைக்குள் போராட்டம் எழுந்துவர

பிரட்டுகளம் சென்று வந்த கணவனிடம்
"இனியும் மடியோம், எழுவோம் வாரீர்,
உடமைகள் இல்லை, இனி உயிரும் மிஞ்சாது
வலிமைகள் கோர்த்துப் போராட வாரீர்..!
உறக்க குரலில் தனம்
அதே துண்டுப் பிரசுரத்தின் வரிகள்

"உறக்க குரலில் பேசாதேடி
ஊர் வம்பு உனக்கெதற்கு
போராட்டமாம் மண்ணாங்கட்டியாம்.
போய்வினு மலைக்கு"
அதட்டிய குரலில் நடேசன்.

தள்ளிவிட்ட கணத்தோடு
"ஏமாந்தோம் ஏமாற்றப்பட்டோம்- இனியும்
நடக்காது இந்த ஏமாற்றுப் பேர்வழி,
வெகுண்டெழுவோம்- திரண்டெழுவோம்"
துண்டுப் பிரசுரத்தின் மீதி வரிகள்
அழுத்தமாய்க் கூறி...
கூடையை இறக்கி, பிள்ளையைச் சுமந்து
நடக்கிறாள் தனம்
போராட்டக் களம் நோக்கி...

நடக்கும் வழியில்
கடப்பது அறியா- தனம்
நடக்கிறாள் வேகமாய்...
வழியில் வழிப்பறி கொள்ளையன் தோட்டத் தலைவர்
"ஏன், எதற்கு எங்கே...

யார், எவர், யாரைக்கேட்டு
சரமாரியாய் கேள்விக்கணைகள்...
"என்னைக் கடந்து சென்றால்
பறிபோகும் உன் வேலை...
உயிர்போவான் உன் கணவன்...
மிரட்டுகிறான் தலைவர்.
"உனக்கும் பதிலில்லை- உன்
அப்பனுக்கும் பதிலில்லை- என்
உரிமை என் உழைப்பு"
சாதிவெறி கொண்டவனை
எட்டி உதைத்து முன்னேறுகிறாள் தனம்.

அடுத்தவன் நிற்கிறான் அரசியல்வாதி...
காட்டிக்கொடுப்பின் மறுவடிவம்.
சமுக அக்கறையின் ஞானசூனியம்.
"எங்கு செல்கிறாய் யாரை எதிர்க்கிறாய்
நீ எங்கள் அடிமை... அடிமைகளுக்கென்ன உரிமை,
எனை மீறிச் சென்றால் உன் விதி தலைகீழாய் மாறும்"
ஆணவத்தில் அரசியல்வாதி.

தனத்தின் குரல் வெகுண்டெழ
"அஞ்சிக்கும் பத்துக்கும்- காட்டிக்
கொடுக்கும் மானங்கெட்டவனே..!
உன் பேச்சில் நடுக்கம் கண்டேன்...
உன் நாவில் உளறல் பார்த்தேன்...
என் ஒரு விரல் உரிமையில்- உன்
விதி உருமாறும்...
இனியும் மடியோம் இறந்தவரை போதும்..
வழிவிடு என்னை.. வாழவிடு என் சந்ததியை"
உடைத்தெறிந்து வந்தாள் தனம்
உமிழ்ந்துவிட்டு வந்தாள் களத்திற்கு...

போராட்டக் களம் சூடுபிடிக்க
போராட்டத்தின் மத்தியில் கோஷங்கள் எழ
"கூட்டு மேல கூட்டு வச்சு
கோடிக்கணக்கு வாங்கு...
கூட்டு ஒப்பந்த மேசையில
குப்புற படுத்து தூங்கு..."l
"ஓட்டுக் கேட்டு வராத- எங்க
வீட்டுப் பக்கம் வராத
ஆயிரம் ரூபா இல்லையா- இனி
தோட்டப் பக்கம் வராத"

"அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபா வேண்டும்
ஆயிரம் இல்லையேல் அத்தியாயம் உனக்கில்லை,
மரணத்திலும் போராடுவோம்
போராட்டத்திலே உனை வெல்வோம்"

கோஷங்கள் ஒலிக்க- தனத்தின்
குரல் சேர்ந்தொலிக்க...

**எஸ். புவனேந்திரன்**

*அக்காலத்தில் இருந்த கடுமையான நெருக்கடிகளைப்பற்றி இப்போதைய இளைஞர்களிடம் சொன்னால், "அப்படியா !" என்ற ஒற்றைச்சொல்லுடனும், ஒரு மாதிரியான ஏளனப் புன்னகையுடனும் கடந்துசெல்வார்கள்.*



# ஒரு நாள்

## உடுவில் அரவிந்தன்

இரவு மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கிறது. பெயர்தெரியாத பூச்சிகளின் ஒலிகள் விட்டுவிட்டுக் கேட்கின்றன. வெகுதூரத்தில் நாயொன்று அவலமாக ஊளையிட்டு ஓய்கிறது. மனைவியும் பிள்ளைகளும் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறார்கள். நான் இருட்டில் நுளம்புத்திரி மினுங்குவதைப் பார்த்தபடி படுத்திருக்கிறேன். என்னுடைய விழிப்புக்குக் காரணமிருக்கிறது.

நேற்று மாலை சுதா என்பவனிடமிருந்து முகநூல் நட்புக்கான கோரிக்கை வந்திருந்தது. அவன் யாரென்று அறிவதற்காகச் சுயவிபரத்தைத் தட்டிப் பார்த்தேன். அதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே படித்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், வெளிநாட்டில் எடுக்கப்பட்ட ஒளிப்படம் ஒன்றையும் பதிவேற்றியிருந்தான். அவனை என்னால் இனங்காணமுடியவில்லை. அவனைப்பற்றிய முழுமையான விபரங்களை அறிவிக்குமாறு தகவலொன்றை அனுப்பினேன். அதற்கு அவன் ஆச்சரியமான பதிலொன்றை அனுப்பியிருந்தான்.

"அந்தநாள் நினைவிருக்கிறதா நண்பனே?"

அவன் எந்த நாளைக் குறிப்பிடுகிறான் என்பதை யோசித்தே என் உறக்கம் தொலைந்தது. உயர்ந்த மனிதன் படத்தின் கதாநாயகன் கூடச் சொல்லாமல் கொள்ளாமல் மனதில் வந்து போனார்.

'அவன் யாராக இருக்கும்? நான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிப் பதினேழு வருடங்களாகின்றன. சுதா என்ற பெயரில் எவரும் என்னுடன் படிக்கவில்லையே"

கைபேசியைத் தேடியெடுத்து அழுத்துகின்றேன். அதன் நீலநிறமான ஒளி அறைக்குள்ளே கசிகிறது. நேரம் சரியாக இரண்டு பதினைந்து. விடிவதற்கு நிறைய நேரமிருக்கிறது. அயர்ச்சியுடன் புரண்டு படுக்கிறேன். பல்கலைக்கழகத்திலே படிக்கும்போது நடைபெற்ற எல்லா நிகழ்வுகளையும் என்மனம் அசைபோடத்தொடங்குகிறது.

எத்தனை சம்பவங்கள்! எவ்வளவு அனுபவங்கள்! அக்காலத்தில் இருந்த கடுமையான நெருக்கடிகளைப்பற்றி இப்போதைய இளைஞர்களிடம் சொன்னால், "அப்படியா?" என்ற ஒற்றைச்சொல்லுடனும், ஒரு மாதிரியான ஏளனப் புன்னகையுடனும் கடந்து செல்வார்கள். உயிர்வாழ்தலுக்கு அச்சுறுத்தலாயிருந்த சூழலில், இளவயதின் அசாத்திய துணிச்சலுடன் செய்த வேலைகளை நினைத்துப் பார்க்கும்போது மயிர்க் கூச்செறிகிறது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போன்ற அந்தச் சம்பவம்; இப்போதும் நினைவிலிருக்கிறது. ஐந்துபேர் கைகளைப் பின்னால் கட்டியபடி முழங்கால்களில் இருப்பதைப் போன்ற காட்சி மனத்திரையில் அசைகிறது. நான், அப்பன், காண்டீபன், பகீரதன், சுதாகரன்.

திடீரென்று எனக்குள் ஒளிபிறப்பதைப் போன்ற உணர்வு. நான் சுதாவை அடையாளம் கண்டுவிட்டேன். அவன் சுதாகரன்.

★★★

இரண்டாயிரமாம் ஆண்டின் முற்பகுதி. நான் யாழ்.பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அது ஈழப்போர் கடுமையாக நடைபெற்றுக்கொண்டிருந்த நேரம். விடுதலைப்புலிகளின் குடாரப்பு தரையிறக்கமும், அதைத் தொடர்ந்த ஆனையிறவு முகாம் முற்றுகையும் பெரிதாகப் பேசப்பட்டுக் கொண்டிருந்தன. அதே நேரம் பளைப்பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் இடையில் சிக்கியிருப்பதாக ஊடகங்கள் திரும்பத்திரும்ப அறிவித்துக் கொண்டிருந்தன. பல்வேறு தரப்புகளிடமிருந்து அழுத்தங்கள் வந்தாலும், அங்கிருந்த மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்குப் படையினர் அனுமதிக்கவில்லை.

நாங்கள் அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத்தின் சார்பாக ஏராளமான உணவுப் பொருள்களையும் உடைகளையும் சேகரித்துக் கொண்டு வெள்ளைக்கொடி கட்டிய வாகனத்தில் பளையைநோக்கிப் போயிருந்தோம். எங்களால் ஆசைப்பிள்ளை ஏத்தத்துக்கு அப்பால் போக முடியவில்லை. வேறு வழியில்லாமல் மிருசுவில்சந்தியிலிருந்த தேவாலயத்தின் அருட்தந்தையிடம் எல்லாவற்றையும் கையளித்து விட்டுத் திரும்பியிருந்தோம். அன்றைய சூழ்நிலையில் அது ஆபத்தான விடயமாகப் பலரால் விமர்சிக்கப்பட்டது. அந்தத் திட்டம் வெற்றியடை வில்லையென்பதால், குடாநாடு தழுவிய எதிர்ப்புப் போராட்டமொன்றுக்கு மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந்தது. நான் எங்களுடைய பீடத்தின் ஒன்றியச் செயலாளராக இருந்தேன். அந்த ஹர்த்தாலைப் பெரிதாகச்செய்து அரசதரப்புக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பதே எங்களுடைய நோக்கமாக இருந்தது.

அன்றையநாள் பூரணஹர்த்தாலின் காரணமாக யாழ்மாவட்டத்திலுள்ள பாடசாலைகள், அலுவலகங்கள், கடைகளெல்லாம் மூடப்பட்டு இயல்புவாழ்க்கை குழம்பியிருந்தது. நாங்கள் காலை ஏழு மணிக்கே பல்கலைக்கழகத்தின் பிரதானவாயிலுக்கு முன்னால் குழுமிவிட்டோம். எல்லாப்பீடங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் வந்திருந்தார்கள்.

அந்த இடத்தில் திடீரென்று பரபரப்புத் தொற்றிக்கொண்டது. மருதனார்மடச்சந்தியிலுள்ள கடைகள் படையினரால் வலுக் கட்டாயமாகத் திறக்கப்படுவதாகக் கிடைத்த தகவலே அந்தப் பரபரப்புக்குக் காரணம். நாங்கள் எட்டுப்பேரளவில் சைக்கிள்களில் புறப்பட்டோம். அதில் காண்டீபன் மட்டுமே என்னுடைய பீடத்தைச் சேர்ந்தவன். ஏனையோரை அறிந்திருந்தாலும், அவர்களுடன் நெருக்கமான பழக்கமில்லை.

நாங்கள் மருதனார்மடச் சந்தியை அடைந்தபோது கடைகளெல்லாம் திறந்திருந்ததைக் காணமுடிந்தது. கடைக்காரர்கள் பேயறைந்தவர்களைப்போல நின்றிருந்தார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டொரு பச்சைச்சீருடைகளும் தெரிந்தன. காண்டீபன் போன வேகத்தில் கடைக்காரர்களை ஏசத் தொடங்கினான்.

"அண்ணை! உங்களுக்குக் கொஞ்சமாவது மனச்சாட்சி இருக்கோ? அங்கால சனம் வெளியேற முடியாமல் கிடந்து சாகுதுகள். இந்தநேரத்தில உங்களுக்குக் கண்டறியாத யாவாரம்"

அங்குள்ள பெரிய பலசரக்குக்கடையின் முதலாளி அங்குமிங்கும் பார்த்தபின், தணிந்தகுரலில் சொன்னார்.

"தம்பி, நாங்கள் ஆரையெண்டு பாக்கிறது? நீங்கள் கடையைப் பூட்டச்சொல்லுறியள். அவங்கள் திறக்கச் சொல்லுறாங்கள். திறக்காட்டில் நாளைக்கு றோட்டிலைதான் கிடக்கவேணும்"

"அந்தக் கதைவேண்டாம் அண்ணை. இப்ப கடைகளை மூடுங்கோ" நானும் குரல் கொடுத்தேன்.

"நீ சிவபாதத்தின்ரை மூத்தவனெல்லே? உனக்கேன் உந்தக் கோதாரிவேலை? உன்ரை கொப்பரை ஒருக்காச் சந்திக்கத்தான் வேணும்" வாழைப்பழக்கடைக்காரர் கடையைப் பூட்டியபடி கேட்டார். நான் அதைப் பொருட்படுத்தவேயில்லை. ஊருக்குள் வந்து ஆரவாரம் செய்தால் இப்படியான சிக்கல்கள் ஏற்படுமென்று எனக்குத்தெரியும்.

"எல்லாக் கடைக்காரரும் பூட்டித்தான் வைச்சிருந்தவை. ஆமிக்காரர் ஆளனுப்பித் திறக்கச் சொல்லிப்போட்டாங்கள்"

புத்தகக்கடைக்காரர் என் காதுக்குள் முணுமுணுத்தார். நான் மறுபக்கம் திரும்பி நண்

பர்களைத் தேடினேன். அவர்களில் நான்கு பேர் சந்தைக்குப் பக்கத்திலுள்ள கடைகளுக்கு முன்னால் நின்றிருந்தார்கள். அந்தக் கடைக்காரர்கள் பொருள்களை யெடுத்து உள்ளே வைக்கத்தொடங்கினார்கள். மரக்கறி வியாபாரிகள் வீதியில் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

“கொஞ்சநேரம் நிண்டுபாப்பம். உவங்கள் திரும்பவும் கடைகளைத் திறந்துபோடுவாங்கள்” காண்டீபன் எங்களிடம் சொன்னான். நான், சுதாகரன், அப்பன், காண்டீபன், பகீரதன் ஐந்துபேரும் சந்தியிலுள்ள வைரவர் கோவிலடிக்குப் போனோம். மற்றைய மூன்று பேரும் சந்தையின் கிழக்குப்பக்க வாசலுக்குப் போனார்கள்.

நான் சிப்பாய்களைத் திரும்பிப் பார்த்தேன். அவர்கள் எங்களைப் பார்த்தபடி தமக்குள் உரையாடுவது தெரிந்தது. அவர்களில் உயரமாயிருந்தவன் பக்கத்திலிருந்த முகாமுக்கு ஓடிப்போனான். சற்று நேரத்தில் திரும்பி வந்தவன், மற்றைய இரண்டு பேரையும் அழைத்துக்கொண்டு எங்களை நெருங்கினான்.

“லொக்குமாத்தயா எண்ட கியனவா”

முகாமின் பொறுப்பதிகாரி வந்து சந்திக்கச் சொல்கிறார் என்பதைப் புரிந்து கொண்டோம்.

“நாங்கள் வரேலாது. வேணுமெண்டா கம்பசுக்கு வந்து யூனியனோட கதைக்கச் சொல்லுங்கோ”

நான் சொல்லிவிட்டுச் சைக்கிளை உருட்டினேன். உயரமானவன் என்னுடைய சைக்கிளைத் தடுத்தான். மற்றவன் அப்பனின் கழுத்துச்சட்டையை முரட்டுத்தனமாகப் பிடித்து இழுத்தான். அந்தக் கணம் என்ன நடக்கிறதென்று நிதானிப்பதற்கு முன்னரே, அப்பனின் வலதுகை அவனுடைய கீழ்த் தாடையில் வேகமாக இறங்கியது. நாங்கள் திமிறியபடி சைக்கிள்களை நகர்த்த முற்பட்டபோது, ஒருவன் மேல்நோக்கி வெடி வைத்தான். அதைத்தொடர்ந்து, முகாமிலிருந்த சிப்பாய்கள் திபுதிபுவென்று ஓடி வருவது தெரிந்தது.

அதைப் பார்த்ததும் 'தொலைந்தோம்' என்று நினைத்துக்கொண்டேன். ஓடிவந்தவர்கள் எங்களைக் கண்மண்தெரியாமல் தாக்கத் தொடங்கினார்கள். ஒருவன் துப்பாக்கியின் அடிப்பாகத்தால் என்னுடைய முகத்தில் இடித்ததில், வாயின் உட்பகுதி வெடித்து உப்புக்கரித்தது. நாங்கள் ஐந்துபேரும் மடங்கிக் கீழே அமர்ந்துவிட்டோம். பிறகு, எங்களை முகாமுக்கு நடத்திக்கொண்டு போனார்கள். அவர்கள் சந்தைவாசலில் நின்ற மூன்று நண்பர்களையும் கவனிக்கவில்லை.

நாங்கள் முகாமின் வாசலில் கைகளைப் பின்னால் கட்டியபடி முழங்கால்களில் இருத்தப்பட்டோம். இரண்டு சிப்பாய்கள் அப்பனைமட்டும் உள்ளே இழுத்துக் கொண்டு போனார்கள். அவனைத் திரும்பவும் கொண்டு வந்து விட்டபோது, தலையிலும் ஆடையிலும் செம்பாட்டுப்புழுதி படிந்திருந்தது. வலது கண்ணில் வீக்கம். மூக்கில் இரத்தக் கசிவு. ஆனால், அவன் எதையுமே வெளிக்காட்டிக்கொள்ளாமல் அமைதியாயிருந்தான்.

முகாமுக்கு எதிரேயுள்ள மகளிர் பாடசாலையின் வாசலிலும், பேருந்துத்தரிப்பிடத்துக்கு அருகிலும் சனங்கள் குவிந்திருந்தார்கள். அவர்களுக்கு நடுவே என் அத்தானின் முகமும் தெரிந்தது. வாழைப் பழக்கடைக்காரர் அத்தானிடம் ஏதோ சொல்வதையும், அதற்கு அவர் தலையைப் பலமாக ஆட்டி மறுப்பதையும் கவனித்தேன். எனக்காகப் போய்க் கதைக்கும்படி பழக்கடைக்காரர் சொல்லியிருப்பார். அத்தான் அனுராதபுரத்தில் வேலைசெய்தவர் என்பதால் தும்புபறக்கச் சிங்களம் பேசுவார். ஆனால், அவர் ஓர் ஒற்றைறோட்டு. “உவருக்கு ஏன் தேவையில்லாத வேலை?” என்று முகத்துக்கு நேராகவே சொல்லக்கூடியவர்.

அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதை ஊகிக்கமுடியவில்லை. எல்லோரும் எங்களை வினோத மாகப் பார்த்துக் கொண்டு போனார்கள், சற்றுநேரத்தில் பச்சைநிற ட்ரக்கொன்று வந்து நின்றது. சிப்பாயொருவன் எங்களை ஏறும்படி கழுத்தைப் பிடித்துத் தள்ளினான். நாங்கள் வாகனத்தின் பின்பக்கத்தில் ஏறிக்கொண்டோம். எங்களுடைய சைக்கிள்கள் ஒன்றின் பின் ஒன்றாக மேலேவந்து விழுந்தன.

“எங்களைக் கொண்டுபோய் முடிக்கப் போறாங்கள்” சுதாகரன் நடுக்கத்துடன் முணுமுணுத்தான். அவனது கண்களில் பீதி தெரிந்தது. அப்பனின் முகத்தில் எந்தச் சலனமுமில்லை.

“சத்தம்போடாமல் கிட. என்ன நடக்குதெண்டு பாப்பம்” காண்டீபன் மெல்லச் சொன்னான். வாகனம் ஓடத்தொடங்கியது.

காவலுக்கு வந்த சிப்பாய்களின் பார்வை களில் குரூரம் வழிந்தது. பகீரதன் தலையை உயர்த்தியபோது ஒருவன் பிடரியில் அடித் தான். அதற்குப்பிறகு, நாங்கள் தலைகளை நிமிர்த்தவேயில்லை. பழகிய இடமென்ப தால் வாகனம் சென்றவழியை என்னால் ஊகிக்கமுடிந்தது. சற்றுநேரம் ஓடியபின் ஓரி டத்தில் நிறுத்தப்பட்டது. எங்களுடன் வந்த சிப்பாய்கள் தொப்பென்று குதித்தார்கள்.

“கொட்டியா! கொட்டியா!” என்ற கூக் குரல்கள் கீழே கேட்டன. அதைத் தொடர்ந்து கற்கள் சரமாரியாகப் பறந்துவந்து உள்ளே விழுந்தன. காண்டீபனின் நெற்றியில் கல் லொன்று விழுந்து கிழித்தது. வாகனத்தின் பக்கவாட்டாகப் பாய்ந்து ஏறிய ஒருவன், சுதாகரனின் தலைமயிரைப் பிடித்து முரட்டுத் தனமாக ஆட்டியபடி கத்தினான்.

“ஆமியட்ட கவு, பற கொட்டியோ!”

சுதாகரன் வேதனையைத் தாங்கமுடியா மல் தலையைப் பொத்திக்கொண்டான். அந்தச் சிப்பாய் விரலைக்காட்டி எச்சரித்து விட்டு இறங்கிப்போனான்.

வாகனத்தின் உலோகத்தகடு உச்சிவெயி லில் சூடேறிக் கொதித்தது. நாங்கள் ஏறக் குறைய ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக அப்படியே கிடந்தோம். வாய் வறண்டு தண்ணீருக்காகத் தவித்தது. சற்று நேரத்தில் அந்தச் சிப்பாய்கள் யாரையோ திட்டியபடி ஓடிவந்து ஏறிக்கொண்டார்கள். மீண்டும் வாகனம் கிளம்பி வந்தவழியே செல்லத் தொடங்கியது. அது சுன்னாகச்சந்தியால் திரும்பிக் கிழக்காகப் போவதை என்னால் ஊகிக்கமுடிந்தது. ஏறக்குறைய அரைமணித் தியாலப் பயணத்தின் பின்னர் இன்னொரு முகாமில் நிறுத்தினார்கள். நான் எட்டிப் பார்த்து ஏங்கிப்போனேன். எனக்குள்ளே பதற்றம் அதிகரிக்கத்தொடங்கியது.

“எந்த இடம் மச்சான்?” சுதாகரன் மிடறு விழுங்கியவாறு கேட்டான்.

“ஊரெழுபோலக் கிடக்கு”

“எங்களை உரிக்கப்போறாங்களடா”

எல்லோரும் அச்சத்தில் உறைந்தோம். அவர்கள் எங்களை இழுத்துச் செல்வதைப் போலவும், இருளான அறைக்குள்ளே தலை கீழாகக் கட்டித் தூக்குவதைப்போலவும் காட் சிகள் எனக்குள்ளே மாறிமாறித் தோன்றின. ஆணோ பெண்ணோவென்று வேறுபிரிக்க முடி யாத ஓர் அலறல் விட்டுவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது. நான் வானத்தைப் பார்த்த படி மல்லாந்து கிடந்தேன். உயரமான இரட் டைப் பனைமரங்கள் வாகனத்துக்கு மேலா கத் தெரிந்தன. சூரியனின் ஒளிவட்டம் பனை வட்டுகளைத் தாண்டிக் கீழிறங்கி யிருந்தது.

“இப்ப என்ன செய்யிறது?” நான் கிசு கிசுத்தேன்.

“குதிச்சு ஓடுவமோ?” அப்பன் மெது வாகக் கேட்டான்.

“ஏன் பின்னாலை வெடிவாங்கிச் சாகவோ?” சுதாகரன் அந்தத் திட்டத்தைத் தடுத்துவிட்டான்.

அதற்குப்பிறகு நடந்ததெல்லாம் ஒரு கனவுபோலிருக்கிறது. அந்த முகாமின் அதி காரியொருவன் வந்து எங்களை இறங்குமாறு அரைகுறைத் தமிழிலே சொன்னான். நாங்கள் இறங்கியதும், தண்ணீர் கொடுக்கும்படி தனது சிப்பாய்களிடம் உத்தரவிட்டான். தண்ணீர்ப் போத்தலைக் கொண்டுவந்தவனின் முகம் இறுகியிருந்தது. பகீரதனும் சுதாகரனும் அதை வாங்கி மடமடவென்று குடித்தார்கள். நான் தண்ணீரைக் குடிக்கவில்லை. என்னைப் போலவே அப்பனும் காண்டீபனும் தண்ணீர் குடிக்கா மல் இருப்பதை அவதானித்தேன். நான் சுற்றும்முற்றும் பார்த் தேன். முன்னர் கேட்ட அலறல்சத்தம் இப்போது அடங்கியிருந்தது.

அந்த அதிகாரி எங்களைத் திருநெல்வேலி இராணுவமுகாமில் ஒப்படைக்கப் போவதாகச் சொன்னான். அவர்கள் எங்களைத் திரும் பவும் வாகனத்தில் ஏற்றினார்கள். அவனும் முன்னால் ஏறிக்கொண்டான். திருநெல்வேலி முகாமுக்குப் போய்ச் சேரும்வரை நாங்கள் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை. அவன் எங்களை ஒப்படைத்தபின் திரும்பிப் போய் விட்டான்.

நாங்கள் நீண்ட வாங்கொன்றில் வரிசை யாக அமர்த்தப்பட்டோம். முகாமைச் சுற்றி யுள்ள மதிலின் மேற்பக்கம் கரும் பச்சைத் தகரம் அடிக்கப்பட்டிருந்தது. முன் பக்கம் இரண்டுமூலைகளிலும் கற்களால் அமைக்கப் பட்ட காவலரண்கள் தெரிந்தன. அவற்றுள் கருமையான உருவங்கள் அசைந்தன. போய் வருகின்ற சிப்பாய்களெல்லாம் எங்களை வேடிக்கை பார்த்தார்கள். நாங்கள் குறுகிப்போய் அமர்ந் திருந்தோம்.

சில நிமிடங்களில் துணைவேந்தரின் வாக னம் வந்து நின்றது. அவர் பொறுப்பதிகாரி யிடம் கதைத்து விட்டு எங்களிடம் வந்தார். நாங்கள் மரியாதையாக எழுந்து நின்றோம்.

“கொஞ்சநேரத்திலை விட்டிடுவாங்களாம். அங்கை இங்க திரியாமல் வீட்டை போய்ச் சேருங்கோ”

என்றவர், எங்களுடைய காயங்களை உற்றுப் பார்த்தார். பிறகு, ஒன்றும்பேசாமல் போய்விட்டார். நாங்கள் திரும்பவும் அமர்ந்து கொண்டோம். ஆனாலும், எனக்குள் நம்பிக்கை பிறக்கவில்லை.

“இவங்கள் எப்ப விடப்போறாங்களோ?” சுதாகரன் சலித்துக்கொண்டான். இலேசாக இருட்டத்தொடங்கியது. நான் மணிக்கூட் டைத் திருப்பிப் பார்த்தேன். நேரம் ஐந்து நாற்பத்தைந்து. எனக்கு அம்மாவின் நினைவு எழுந்தது. என்னை எங்கெல்லாம் தேடிய லைகிறாவோ?

எனக்குத் தலை வலித்தது. நெற்றியை இறுக அழுத்திக்கொண்டேன்.

“டேய் எண்ட”

முரட்டுத்தனமான குரலைக்கேட்டு நிமிர்ந் தேன். சிப்பாயொருவன் சுதாகரனை வரு மாறு கைகாட்டினான். சுதாகரன் எழுந்து மிரட்சியுடன் பார்த்தபடி நடந்துபோனான். உள்ளே என்ன நடக்கிறதென்று தெரியாமல் நாங்கள் விறைத்துபோய் அமர்ந்திருந்தோம். சுமார் பதினைந்து நிமிடங்களில் அந்தச் சிப்பாய் திரும்பிவந்து அப்பனை அழைத் துக்கொண்டு போனான். இப்படி ஒவ்வொரு வராக அழைத்துச் செல்லப்பட, கடை சியில் நான் மட்டுமே தனித்திருந்தேன். கழிகின்ற வினாடிகள் எனக்கு மரண வேதனையைக் கொடுத்தன. உள்ளே போனவர்கள் திரும்பி வரவேயில்லை. ஏதாவது அலறல் கேட்கிறதா வென்று காதுகளைக் கூர்மையாக்கினேன்.

கடைசியாக அந்தச் சிப்பாய் என் னையும் அழைத்தான். நான் கலக்கத்துடன் அவனைப் பின்தொடர்ந்தேன். பலியிடுவதற்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டைப் போன்ற மனநிலை எனக்கு. ஒடுக்கமான வழியால் நடந்து, மாடிப்படிகளில் ஏறினோம். வழி யெங்கும் துர்நாற்றமுள்ள இருள் மண்டிக் கிடந்தது. மாடியிலுள்ள ஓர் அறைக்குள் சிறிய மேசை யொன்று போடப்பட்டிருந்தது. அதற்குப் பின் னாலுள்ள இருளில் ஒருவன் அமர்ந்திருந் தான். அவனுடைய முகம் தெளிவாகத் தெரியவில்லை. நான் அவனுக்கு எதிரேயுள்ள கதிரையில் இருத்தப் பட்டேன். என் கண்கள் அங்கு மிங்கும் அலைந்து நண்பர்களைத் தேடின. அவர்கள் எவருமே அங்கில்லை. என்னுடைய விரல்கள் நடுங்கத்தொடங்கின.

அவன் புகைப்படக்கருவியைத் தூக்கி என்னைப் படமெடுத்தான். அதற்குப்பிறகு, ஒரு படிவத்தைப் பார்த்துக் கேள்விகள் கேட்கத்தொடங்கினான். அவன் பேசிய சுத்தமான பேச்சுத்தமிழைக்கேட்டு நான் திகைத்துப்போனேன்.

“கேள்வி கேட்டால் பதில்சொல்லத் தெரியாதோ? உதைத்தானோ உன்ரை தின்ன வேலிப் பள்ளிக் கூடத்திலை சொல்லித் தாறவங்கள்?”

அதற்குப்பிறகு நான் பதிலளிக்கத் தொடங் கினேன். அவை என்னைப்பற்றிய சுய விப ரங்களாக இருந்தன. அவன் எல்லா வற்றை யும் எழுதிமுடித்தபின் நிமிர்ந்து பார்த்தான்.

“தாய்தகப்பன் உங்களைப் படிக்க அனுப் பினால் அதைமட்டும் பாக்கவேணும். அதை விட்டிட்டுத் தேவையில்லாத துளாவார மெல் லாம் பாக்கிறது. சும்மா நிக்கிற ஆமிக்குப் போய் அடிக்கிறது. பிறகு அவன் சுட்டுப் போட்டானெண்டு ஒப்பாரிவைக்கிறது. உங்க ளுக்கேன் தேவையில்லாத வேலை?”

“நாங்கள் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக் காகத்தானே..?” தயக்கத்துடன் இழுத்தேன். என்னுடைய தொண்டைக்குள் ஏதோ வொன்று அடைத்திருப்பதைப் போலிருந்தது.

“அதை நாங்கள் பாத்துக்கொள்ளுவம்”

“அப்பாவிச் சனங்கள் சாகிறதை...”

“........யாண்டிகள்!. நீங்கள் ஆருக்காக வேலை செய்யிறியளெண்டு எங்களுக்குத் தெரி யும். உங்களையெல்லாம் இங்கையிருந்து இயக்கிறவனையும் தெரியும். எல்லாரையும் துலைச்சுப்போடுவம். உங்கட வீசி மேலிடத் தைப் பிடிச்சபடியாலதான் சும்மா விட்ட னாங்கள். போய் ஒழுங்காப் படிக்கிற வேலையை மட்டும் பார்” அவன் கடுமை யான குரலில் இரைந்தான்.

நான் மௌனமாக இருந்தேன். அந்த வேளையில் வார்த்தைகளை விடுவதைப் போல மடத்தனம் வேறிருக்கமுடியாது.

அந்தச் சிப்பாய் உள்ளே வந்து என்னை உரப்பினான். நான் எழுந்து நடந்தேன். அவன்

முன்பு வந்த வழியைத் தவிர்த்து, வேறொரு வழியால் அழைத்துக்கொண்டு போனான். ஓரிரு நிமிடங்களில் நான் முகாமுக்கு வெளியே வந்துவிட்டேன். நண்பர்கள் திரும்பிவராத காரணம் எனக்கு அப்போதுதான் விளங்கியது. என்னுடைய சைக்கிள் வெளிப்புற மதிலில் சாத்தப்பட்டிருந்தது. அதை எடுக்கப் போன போது பின்பக்கத்தில் பலமான உதையொன்று விழுந்தது. நான் தடுமாறியபடி திரும்பிப் பார்த்தேன். அந்தச் சிப்பாய் எதுவும் நடக்காததுபோலத் தகரக்கதவைச் சாத்திக் கொண் டிருந்தான்.

நான் சைக்கிளை மிதிக்கத்தொடங்கினேன். தலைவலியுடன் முதுகுவலியும் சேர்ந்து கொண்டது. வீதிகள் சனநடமாட்ட மின்றி அடங்கிக்கிடந்தன. ஒருமாதிரி வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டேன். அம்மா வாசலில் காத்திருந்தாள். அவளுடைய கண்கள் கலங்கியிருந்தன. என்னை எதுவுமே கேட்க வில்லை. எனக்குத் தலைசுற்றுவது போலிருந்தது. வாந்தியெடுத்துவிட்டு அப்படியே படுத்துக் கொண்டேன். அம்மா என்னுடைய தலையை அழுத்திப் பிடிப்பதைப்போன்ற உணர்வில் அமிழ்ந்தபடி உறங்கிப் போனேன். அடுத்த நாள், வாயிலிருந்த காயம் பெரிதாகிக் காய்ச்சலால் துன்பப்பட்டதெல்லாம் தனிக்கதை.

அதற்குப்பிறகு, கொஞ்சக்காலம் பல்கலைக்கழகம் இயங்கவில்லை. நான் பிரதான வீதிகளில் பயணிப்பதைப் பெரும்பாலும் தவிர்த்துக்கொண்டேன். அவ்வப் போது காண்டீபனையும் சுதாகரனையும் காண்பதுண்டு. சுதாகரன் இலேசான தலை யசைப்புடன் வேகமாகச் சென்றுவிடுவான். காண்டீபன் என்னுடன் ஆறுதலாகக் கதைத்துவிட்டுப் போவான். அவன் எப்போதும் ஓர் இளைஞனை ஏற்றிக் கொண்டு திரிவதைக் கண்டிருக்கிறேன். எனக்கும் அந்த இளைஞனைப்பற்றி ஓரளவு தெரியும். அவனும் என்னைக் கண்டால் சிநேகமாகச் சிரிப்பான். பிறகொருநாள் அவர்களிருவரும் தலங்காவில் பிள்ளையார் கோவிலடியில் நடந்த திடீர்மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்கள்.

ஆனையிறவு முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து நிறைய மாற்றங்கள் நடந்தேறின. பல்கலைக்கழகம் பழையபடி இயங்கத் தொடங்கினாலும், நான் ஆறுமாதங்கள் கழித்தே விரிவுரைகளுக்குச் சமுகமளித்தேன். அங்கு பகீரதனைச் சந்திப்பதுண்டு. சுதாகரன் கொழும்புக்குப் போய்விட்டதாக அவன் சொன்னான். ஆனால், அப்பனைப் பற்றி எந்தத் தகவலுமே கிடைக்கவில்லை.

★★★

கைபேசியின் விழிப்பு மணியொலி என்னை அருட்டுகின்றது. சோம்பல் முறித்தவாறே எடுத்துப் பார்க்கிறேன். சரியாக ஆறுமணி. அரைகுறை உறக்கமும் ஆழ்ந்த சிந்தனையுமாக இரவைக் கழித்ததால் கண்கள் கனக்கின்றன. ஆனால், மனம் வெறுமையாகக் கிடக்கிறது. எல்லாவற்றையும் தொலைத்துவிட்டதான துயரம் அந்த வெறுமைக்குள் நிரம்பிக்கொள்கிறது.

மனைவி சமையலறைக்குள் எதையோ தட்டிக்கொட்டுகிறாள். அவள் சமைக்கும் போது சின்னச்சின்ன உதவிகளைச் செய்வதுண்டு. இன்று எல்லாமே குழம்பிவிட்டன. பிள்ளைகளிருவரும் கிணற்றடியில் ஆரவாரப்படுகிறார்கள். அவர்களைப் பாடசாலையில் இறக்கிவிட்டு வேலைக்குச் செல்லவேண்டும்.

அறைக்கு வெளியே வருகிறேன். மேசையில் தேநீர் மூடி வைக்கப்பட்டிருக்கிறது. அதை அருந்தியவாறே கைபேசியை எடுத்து முகநூலைத் திறக்கிறேன். சுதாகரனின் நட்புக் கோரிக்கைக்குச் சம்மதம் கொடுத்தபின்னர், என்னுடைய முதலாவது பதிவைப் போடுகிறேன்.

“அப்பனைப்பற்றி ஏதாவது தெரியுமா?”

★★★

## யாவர்க்கும்

வலிமை பெறு அரசமைத்து
தாமுயர்ந்து ஓரிருவர் சந்ததியே
நிலமளந்து ஆண்டனுபவித்து
மாந்தரை மிடிமை நிலைக்காளாக்கி
ஆழ்கின்ற உலகோ நீளும்...
தொழிலாளர் நலன் வேண்டி
தொய்வில்லா நெறியொன்றில்
தொழிலாளர் தலைமையுற
எழிற்சியுறு எம்மக்கள் எழுந்து
நிலைமாற்றும் கொள்கையில்
வளமெல்லாம்
பொதுமை ஆக்கிடவே
யாபேரும் யாவர்க்கும் துணையாக
ஒருவர் எல்லோருக்குமாய்
எல்லோரும் ஒருவருக்காய்
நல்நெறியில் கூடுவரேல்
செல்வமது சேருமே
மிடிமையில் வீழ்ந்தார்க்கும்!

அழ.பகீரதன்

*இல்லை நண்பா, நான் எனது மனதை மாற்றி விட்டேன். "பசுமையும் தண்ணீரும் அழகான முகங்களும் உள்ள மண்" என நீ எழுதிய மண்ணுக்கு நான் உன்னைப் பின்தொடர மாட்டேன்.*

# காஸாவிலிருந்து வந்த கடிதம்



## காசான் கனஃபானி

**தமிழில் : சிவசேகரம்**

அன்புள்ள முஸ்தஃபா

நான் சக்ரமென்ற்றோவில் உன்னுடன் தங்கத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டாய் எனக் கூறும் உன் கடிதம் கிடைத்தது. கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தின் குடிசார் பொறியியற் துறைக்கு என்னை ஏற்றுள்ளதாகவும் தகவல் கிடைத்தது. நண்பா, அனைத்துக்காகவும் உனக்கு நன்றி கூறவேண்டும். என்றாலும் நான் இச்செய்தியைக் கூறும் போது உனக்கு அது கொஞ்சம் விநோதமாயிருக்கும். ஆனால் ஐயம் வேண்டாம், எனக்கு எத் தயக்கமுமில்லை. இப்போது போல் எப்போதுமே நான் விஷயங்களை இவ்வளவு தெளிவாகக் கண்டதில்லை எனப் பெருமளவும் நிச்சயமாயிருக்கிறேன். இல்லை நண்பா, நான் எனது மனதை மாற்றி விட்டேன். "பசுமையும் தண்ணீரும் அழ கான முகங்களும் உள்ள மண்" என நீ எழுதிய மண்ணுக்கு நான் உன்னைப் பின்தொடர மாட்டேன். இல்லை, நான் இங்கேயே இருப்பேன். என்றுமே போக மாட்டேன்.

முஸ்தஃபா, நமது வாழ்க்கைகள் ஒரே பாதையில் இனித் தொடர மாட்டா என்பதையிட்டு நான் மிக வேதனையடைகிறேன். ஏனெனில் நாமிருவரும் ஒன்றாகவே பயணிப்போம் என்ற நமது உறுதிமொழியையும் "நாம் பணக்காரராவோம்!" என்று நாம் கூவும் விதத்தையும் நீ எனக்கு நினைவூட்டுவது எனக்கு ஏறத்தாழக் கேட்கிறது. ஆயினும் நண்பா, நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. கெய்ரோ விமான நிலைய மண்டபத்தில் உனது கையை அழுத்திக் கொண்டு வெறி பிடித்த இயந்திரத்தை முறைத்தபடி நின்ற நாள் இன்னும் நினை விலுள்ளது. அவ்வேளை, எல்லாமும் காதைப் பிளக்கும் இயந்திரத்துடன் காலத்திற் சுழன்று கொண்டிருந்தன. நீ என் முன் நின்றாய். உன் வட்ட முகம் மௌனமாயிருந்தது.

அந்தத் தோற் சுருக்கங்களை விட்டால், காஸாவின் ஷஜியா வட்டாரத்தில் நீ வளரும்போது இருந்தது போலவே உன் முகம் மாறாதிருந்தது. நாம் ஒருவரை ஒருவர் முழுவதும் நன்றாக விளங்கி இருவரும் இறுதிவரை ஒன்றாகவே பயணிப்போம் என்று உறுதிகூறி ஒன்றாக வளர்ந்தோம். ஆனால்....

"விமானம் கிளம்ப இன்னுங் கால் மணி நேரமே உள்ளது. வான்வெளிக்குள் பார்க்

காதே. கேள்! அடுத்த ஆண்டு நீ குவைத்துக்குப் போகிறாய். அங்கு உன்னை காஸாவிலிருந்து பெயர்த்துக் கலிஃபோர்னியாவில் நிலைநிறுத்தப் போதிய பணத்தை உன் சம்பளத்திலிருந்து சேமிப்பாய். நாம் ஒன்றாகத் தொடங்கினோம் ஒன்றாகவே தொடர வேண்டும்..."

அக்கணம், துரிதமாக அசையும் உன் உதடுகளை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அது தான் - கால் தரிப்பும் முழுத் தரிப்புமில்லாமல் - நீ கதைக்கும் விதம். ஆனால் உன் பயணத்தைப் பற்றி நீ முழு மகிழ்வுடனில்லை என, விளக்கமற்ற விதமாக, எனக்குத் தோன்றியது. மூன்று நல்ல காரணங்களைக் கூற உன்னால் முடிய வில்லை. இப் பிரிவு வேதனையால் நானும் அவதிப்பட்டேன். ஆனால் மிகத் தெளிவான ஒரே எண்ணம்: இந்த காஸாவைக் கைவிட்டு நாமேன் தப்பி ஓடமாட்டோம்? நாமேன் மாட்டோம்? எப்படியோ உன் நிலைமை திருந்தத் தொடங்கிவிட்டது. குவெய்த்தின் கல்வி அமைச்சு உனக்கு ஒரு ஒப்பந்தத்தைத் தந்தது. எனக்குத் தரவில்லை. நான் வாழ்ந்த அவலத் தொட்டிக்குள் நீ எனக்குச் சிறு தொகைகளாகப் பணம் அனுப்பினாய். நான் அவமதிக்கப்பட்டதாக உணருவேன் என நீ நினைத்ததால் அவற்றைக் கடன்களாகக் கருதும்படி சொன்னாய். உனக்கு எனது குடும்ப நிலைமை உள்ளும் புறமுமாகத் தெரியும். UNRWA* பாடசாலைகளில் எனக்குக் கிடைக்கும் அற்பச் சம்பளம் என் அம்மாவையும் என் சகோதரனின் விதவையையும் அவருடைய நான்கு குழந்தைகளையும் ஆதரிக்கப் போதாது என நீ அறிந்திருந்தாய்.

"கவனமாகக் கேள். ஒவ்வொரு நாளும்... ஒவ்வொரு மணித்தியாலமும்... ஒவ்வொரு நிமிடமும் எனக்கு எழுது! விமானம் இப்போது புறப்படுகிறது. வருகிறேன்! இல்லை, மீண்டுங் காணுவோம்!"

குளிரான உனது உதடுகள் என் கன்னத்தில் உரசின. நீ உன் கண்களை எனது முகத்திலிருந்து விலக்கி விமானத்தை நோக்கித் திருப்பினாய். நீ மீண்டும் என்னை நோக்கிய போது எனக்கு உன் கண்ணீர் தெரிந்தது.

பின்னர் குவெய்த்தின் கல்வி அமைச்சு எனக்கு ஒரு ஒப்பந்தத்தைத்த தந்தது. அங்கே என் வாழ்க்கை எப்படிப் போன தென நான் விவரமாக எழுதத் தேவையில்லை. எல்லாவற்றைப் பற்றியும் உனக்கு எப்போதும் எழுதினேன். நான், காலத்துட னான சமராக உமிழப்பட்ட, சிதைந்த வழமையொன்றுட் சிக்கி, இரவின் தொடக் கத்தைப் போன்ற ஒரு எதிர்காலத்துடன் மெதுவாகத் தடுமாறும், ஒடுக்குந் தனிமையிற் தொலைந்த ஒரு சிப்பி போல, அங்கு என்னுடைய வாழ்க்கைக்கு ஒரு பசைத் தன்மையான வெறிதான பண்பிருந்தது. எல்லாமே வெம்மையாயும் பசைத் தன்மையாயும் இருந்தன. என்னுடைய முழு வாழ்விற்கும் ஒரு நழுவற் தன்மையிருந்தது, யாவுமே மாத முடிவுக்காக ஏங்குவதைப் பற்றியது.

அவ்வருடம், வருட நடுவில் யூதர்கள் சபாவின் மத்திய மாவட்டத்துக்குக் குண்டு வீசி காஸாவை, நமது காஸாவைக், குண்டுகளாலும் சுவாலை- வீசிகளாலும் தாக்கினர். அந்நிகழ்வு எனது வழமையிற் சில மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கலாம். ஆனால் நான் அதிகங் கவனிக்கத்தக்கதாக அதில் ஏதுமில்லை. நான் இந்த காஸாவை எனக்குப் பின்னால் விட்டுச்சென்று கலிஃபோர்னியாவுக்குப் போய் எனக்காக, இவ்வளவு காலமும் துன்பப்பட்ட எனக்காக, வாழப்போகிறேன். நான் காஸாவையும் அங்கு வாழ்வோரையும் வெறுத்தேன். முடமாக்கப்பட்ட நகரத்தில் இருந்த ஒவ்வொன்றும், புத்திபேதலித்த ஒருவன் சாம்பல் நிறத்திற் தீட்டிய நிறைவுறாத சித்திரங்களை நினைவூட்டின. ஓம், அம்மாவுக்கும் என் சகோதரனின் விதவைக்கும் அவருடைய குழந்தைகட்கும் அவர்கள் வாழ உதவுமாறு ஒரு சொற்பப் பணம் அனுப்புவேன். ஆனால், அங்கே, பசுமையான கலிஃபோர்னியாவில், ஏழாண்டுகளாக எனது நாசிகளை நிறைத்த தோல்வியின் நெடியிலிருந்து வெகு தொலைவில், இந்த இறுதி உறவிலிருந்துங் கூட என்னை விடுவிப்பேன். என்னை எனது சகோதரனின் குழந்தைகளுடனும் அவர்களுடைய அம்மாவுடனும் என்னுடைய அம்மாவுடனும் பிணைத்த அனுதாபமும் நான் இந்த நேர்கீழான பாய்ச்சலை மேற்கொள்ளும் எனது துன்பத்தை நியாயப்படுத்தாது. அது என்னை இதுவரை கீழிழுத்ததற்கும் அதிகமாக மேலுங் கீழே இழுக்கலாகாது. நான் தப்பியோட வேண்டும்.

முஸ்தஃபா, உனக்கு இந்த உணர்வுகள் விளங்கும். ஏனெனில் அவற்றை நீ மெய்யாக அனுபவித்திருக்கிறாய். தப்பியோடற்கான நமது ஆர்வத்தை மழுங்கடித்த காஸாவுடன் நமது தெளிவற்ற இந்த உறவு தானென்ன? அவ் விஷயத்துக்குத் தெளிவானதொரு கருத்தைத் தருமாறு நாம் அதை ஏன் ஆராய வில்லை? இத்தோல்வியை அதன் காயங்களுடன் நமக்குப் பின்னால் விட்டுவிட்டு நமக்கு ஆழமான ஆறுதல் தரக்கூடிய ஒளி மிகும் எதிர்காலத் திடம் நாம் ஏன் போக வில்லை? ஏன்? நமக்குச் சரிவரத் தெரிய வில்லை.

நான் ஜூன் மாதம் விடுமுறையிற் சென்று, வாழ்க்கைக்கு நயமான, ஒளிமிகும் கருத்தைத் தரும் சிறுசிறு விஷயங்களை நோக்கிய தொடக்கமான இனிய புறப் பாட்டுக்கான ஏங்குதலுடன் என்னுடைய உடைமைகளையெல்லாம் ஒன்றுதிரட்டினேன். அப்போது காஸா, நானறிந்தபடி, அடிதொட்டியை** அண்டிய பிசுபிசுப்பான மணற் கடற்கரை மீது அலைகள் எறிந்த கறளேறிய நத்தை யோட்டின் உள்நோக்கிய அக உறை போல மூடுண்டு இருக்கக் கண்டேன். இந்த காஸா, புடைத்த உப்பரிகைகளைக் கொண்ட தனது ஒடுங்கிய வீதிகளுடன், அச்சுறுத்தும் பயங் கரக் கனவின் கடும் வலிக்குட்பட்ட துயில் பவனின் மனதை விட நெரிசலாக இருந்தது… இந்த காஸா. ஆனாற், மலை யாட்டுக் கூட்டமொன்றை ஒரு சுனை ஈர்ப்பது போல, ஒரு மனிதனை அவனுடைய குடும்பத்திட மும் அவனுடைய வீட்டினிடமும் அவனு டைய நினைவுகளிடமும் ஈர்க்கும் தெளிவற்ற காரணங்கள் எவை? எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த தெல்லாம் அன்று காலை நான் அம்மாவின் வீட்டுக்குப் போனேன். நான் அங்கு போனதும், அங்கே என்னைச் சந்தித்த, என் காலஞ்சென்ற சகோதரனின் மனைவி அழுதபடி, காஸா மருத்துவமனை யிலிருக்கும் தனது காயப்பட்ட மகள் நாடியா விரும்பியபடி அவளைப் போய்ப் பார்ப் பேனா என்று கேட்டார். எனது சகோதர னின் அழகான பதின்மூன்று வயது மகள் நாடியாவை உனக்குத் தெரியுமா?

அன்று மாலை நான் இரண்டு இறாத் தல் அப்பிள்கள் வாங்கி, நாடியாவைப் பார்க்க மருத்துவமனைக்குப் போனேன். என்னுடைய அம்மாவும் மைத்துனியும், அதைப் பற்றி, வாய்கள் உச்சரிக்க முடியாத எதையோ, விந்தையான எதையோ என்னிடமிருந்து மறைப்பதாக எனக்குத் தெரியும். ஆனால் ஏதென்று கூற எனக்கு இயலவில்லை. நாடியாவை நான் வழக்கத்திற் கமைய நேசித்தேன். அந்த வழக்கமே, தோல்வியிலும் இடப்பெயர்விலும் வளர்ந்த தால், மகிழ் வான வாழ்வென்பதே ஒரு வகைச் சமூக விலகல் என நினைக்கத் தொடங்கிய முழுத் தலைமுறையையும் நேசிக்கச் செய்தது.

அக் கணம் என்ன நடந்தது? எனக்குத் தெரியாது. நான் அந்த வெள்ளை அறைக் குள் மிகச் சாந்தமாக நுழைந்தேன். நோயா ளிக் குழந்தைகளுக்கு ஒருவகையான புனிதர் களின் இயல்புண்டு. குழந்தை கொடிய வேதனையான காயங்களால் நோயுண்டிருந் தால் அந்த இயல்பு எவ்வளவு மேம்பட்டி ருக்கும். நாடியா கட்டிலிற் படுத்திருந்தாள். அவளுடைய முதுகைத் தாங்கிநின்ற தலை யணையின் மேலாக அவளுடைய தலை மயிர் ஆட்டின் தடித்த கம்பளித் தோல் போல பரவியிருந்தது. அவளுடைய அகல மான கண்களில் ஆழ்ந்த மௌனம் குடி கொண்டிருந்தது. அவளுடைய கரிய கண் பாவையின் ஆழத்தில் ஒரு கண்ணீர்த் துளி எப்போதும் மின்னியபடியிருந்தது. வதைக் குட்பட்ட ஒரு தீர்க்கதரிசியின் முகம் இருந் திருக்குமாப் போல அவளுடைய முகம் அமைதியாக, அசைவற்றிருந்தது. நாடியா இன்னமும் ஒரு குழந்தை தான். ஆனால் ஒரு குழந்தையிலும் மேலாக, மிக மேலாக, ஒரு குழந்தையிலும் வயதுகூடியவளாக, மிக வயதுகூடியவளாகத் தெரிந்தாள்.

"நாடியா!"

நான் சொன்னேனா அல்லது எனக்குப் பின்னாலிருந்து வேறெவரும் சொன்னார்களா என்று எனக்கு விளக்கமில்லை. ஆனால் அவள் என்னை நோக்கித் தனது கண்களை உயர்த்தினாள். சூடான தேநீருள் விழுந்த சீனித் துண்டென அவை என்னைக் கரைப் பதாக உணர்ந்தேன்.

அவளுடைய மெலிதான முறுவலுடன் அவளுடைய குரல் எனக்குக் கேட்டது. "சித்தப்பா! இப்போது தான் குவைத்தி லிருந்து வந்தீர்களா?"

அவளுடைய குரல் அவளுடைய மிடற்றில் முறிந்தது. தன்னுடைய கைகளாற்

தன்னை உயர்த்தி என்னை நோக்கித் தனது கழுத்தை நீட்டினாள். நான் அவளுடைய முதுகிற் தட்டி, அவளருகே அமர்ந்தேன்.

"நாடியா! உனக்கு நான் குவெய்தி லிருந்து பரிசுகள் கொண்டுவந்திருக்கிறேன். நிறையப் பரிசுகள். நீ உன் கட்டிலிலிருந்து எழுந்து முற்றாகச் சுகமாகி நோய் தீர்ந்து என் வீட்டுக்கு வரும்வரை காத்திருந்து அப்போது உன்னிடம் தருவேன். நீ என்னிடம் எழுதிக் கேட்ட சிவப்புக் காற்சட்டை கொண்டு வந் திருக்கிறேன். ஓம், கொண்டு வந்திருக்கிறேன்."

அது ஒரு பொய். சங்கடமான ஒரு நிலைமையில் உருவான பொய். அதைச் சொன்னபோது முதல் முறையாக நான் உண்மை சொல்லுவது போலிருந்தது. மின் சாரம் தாக்கியது போல நடுங்கிய நாடியா ஒரு பயங்கர மௌனத்துடன் தனது தலையைத் தாழ்த்தினாள். அவளுடைய கண்ணீர் என் புறங்கையை நனைப்பதை உணர்ந்தேன்.

"எதையாவது கதை நாடியா! உனக்குச் சிவப்புக் காற்சட்டை வேண்டாமா?"

அவள் தன்னுடைய பார்வையை என்னை நோக்கி உயர்த்திப் பேசுவது போலத் தொடங்கி, அதை நிறுத்திப் பற்களை நெறு மினாள். தொலைவிலிருந்து வருவது போல அவளுடைய குரல் மீண்டுங் கேட்டது.

"சித்தப்பா!"

அவள் தன்னுடைய கையை நீட்டி, வெள்ளைப் படுக்கையுறையை விரல்களால் உயர்த்தித் தொடையின் மேற்புறத்திலிருந்து துண்டிக்கப்பட்ட தனது காலைக் காட்டினாள்.

நண்பா.... தொடையின் மேற்புறத்திலி ருந்து துண்டிக்கப்பட்ட நாடியாவின் காலை நான் என்றும் மறக்கமாட்டேன். இல்லை! அவளுடைய முகத்தை வார்த்து அதன் குணாதிசயங்களுடன் நிரந்தரமாக ஒன்றிய அந்தக் கடுந்துயரையும் மறக்கமாட்டேன். நாடியாவுக்குக் கொடுக்கக் வாங்கிச்சென்ற இரண்டு இறாத்தல்கள் மீதும் என் கைகள் பரிகாசத்துடன் இறுகப் பற்ற, நான் அன்று காஸாவின் மருத்துவமனையிலிருந்து வெளி யேறினேன். சுவாலிக்கும் சூரியன் வீதி களைச் செந்நிறத்தால் நிறைத்தது. காஸா புத்தம் புதிதானது, முஸ்தஃபா! நீயும் நானும் இவ்வாறு அதைக் கண்டதில்லை. நாம் வாழ்ந்த ஷஜியா வட்டாரத்தின் தொடக் கத்தில் குவிந்திருந்த கற்களுக்குக் கருத் துண்டு. அதை விளக்கவே அவை அங்கு இடப்பட்டது போற் தோன்றியது.

நாங்கள் வாழ்ந்த இந்த காஸாவும் ஏழாண்டுக் காலத் தோல்வியை நம்முடன் சேர்ந்து வாழ்ந்த காஸாவின் நல்ல மக்களும் கொஞ்சம் புதிதாயிருந்தனர். எனக்கு அது ஒரு தொடக்கம் மட்டுமே போலிருந்தது. அது ஒரு தொடக்கமென நான் ஏன் நினைத் தேனென்று எனக்குத் தெரியாது. வீட்டுக்குப் போகும் வழியில் நான் நடந்து சென்ற பெருந்தெரு சஃபாடுக்குக் கொண்டு செல் லும் ஒரு நீண்ட, மிக நீண்ட வீதியின் தொடக்கமெனக் கற்பனை செய்தேன். இந்த காஸாவில் எல்லாமே அழுதலுக்கு மட்டும் மட்டுப்படாத துயரத்திற் துடித்தது. அது ஒரு சவால்: அதற்கும் மேலாக அது துண் டிக்கப்பட்ட காலை மீட்பது போன்றிருந்தது.

நான் காஸாவின் வீதிகளுள், கண்ணைக் குருடாக்கும் சூரிய ஒளி நிறைந்த வீதிகளுட் போனேன். அவர்களுடைய வீட்டின் மீது தமது நகங்களைப் பதித்திருந்த குண்டுகளி னின்றும் தீச் சுவாலைகளினின்றும் தனது சிறிய தம்பி தங்கைகளைக் காப்பாற்ற அவர் கள் மேற் பாய்ந்தபோது அவள் தனது காலை இழந்தாள் என்று எனக்குச் சொன் னார்கள். நாடியா தன்னைக் காப்பாற்றி யிருக்கலாம். ஓடிப்போய்த் தன் காலைக் காப்பாற்றியிருக் கலாம். அவள் செய்யவில்லை.

ஏன்?

இல்லை நண்பா, நான் சக்ரமென்ற் றோவுக்கு வரவில்லை. அதைப்பற்றி எனக்கு ஒரு விசனமுமில்லை. இல்லை. சிறு வயதில் நாம் ஒன்றாகத் தொடங்கியதை நான் நிறைவேற்ற மாட்டேன். காஸாவை விட்டுப்போனபோது உன்னிடமிருந்த அந்தத் தெளிவீனமான உணர்வு, அந்தச் சிறிய உணர்வு, உன்னுள் ஆழமாக ஒரு பூதமாக வளரவேண்டும். அது விரிய வேண்டும். தோல்வியின் அசிங்கமான இடிபாடுகளி டையே நீ உன்னைக் காணுமாறு நீ அதைத் தேடவேண்டும்.

நான் உன்னிடம் வரமாட்டேன். ஆனால் நீ எம்மிடம் மீள வா! தொடையின் மேற்புறத்திலிருந்து துண்டிக்கப்பட்ட நாடியா

வின் காலிலிருந்து, வாழ்க்கை என்னவென்றும் இருப்பின் பெறுமதி என்னவென்றும் கற்கத் திரும்பி வா.

திரும்பி வா என் நண்பா! நாமெல்லாரும் உனக்காகக் காத்திருக்கிறோம்.

*UNRWA – பலஸ்தீன அகதிகட்;கும் அண்மிய கிழக்கிற்குமான ஐக்கிய நாடுகள் நிவாரண, பணிகள் முனவாண்மை ((United Nations Relief and Works Agency for Palestine Refugees in the Near East )

** அடிதொட்டி – இறைச்சி விலங்கு வெட்டுமிடம்

பலஸ்தீன ஊடகவியலாளரும் நூலாசிரிய ரும் ஓவியரும் பலஸ்தீன விடுலைக்கான மக்கள் முன்னணி (PFLP) அரசியற் குழு உறுப்பினருமான கசான் கனஃபானி 8 யூலை 1972 அன்று இஸ்ரேலிய முகவர்களால் பெய்ரூத்திற் கொல்லப்பட்டார்.



# கருப்பன்தயிலமும் கங்காணியும்

**கா**லைக்கதிரவனின் துணை கொண்டு
திமிராய் கடந்தான் பாதையை- கங்காணி
நேற்றிரவு சிவப்புச் சூரியன்
வார்த்தை வம்பினில் பொங்கிய கண்களை
கசக்கியபடி விரிகின்றன கால்கள்.

நீண்டு தலைவிரித்து
துன்பத்தை துன்பமாக்க
தூர இருந்து திட்டம் போடுபவனின்
ஏளனச் சிரிப்பை எண்ணியபடி- அவன்

பச்சைத் தேயிலைப் பிரசவங்களை
தடவிப்பின் தன் நிலை மறந்து
பாடிய பாடல்கள்
இன்னும் வேகப்படுத்தின
மார்பு நரம்பு புடைக்க.


தலைமுறை அழிக்க தவம் கிடக்கும்
தன் கையாலே உயிர்கொடுத்த
கறுப்பன் தயிலக் கன்றை*
கசக்கி எறிகின்றான்...

தூர தெரியும் துரைமாரின்
மோட்டார் சைக்கிள்களுக்கு
சலாம் போட்ட கைகளில்
இறந்து கிடந்தன
சலாமும் சருகாய் கன்றும்..

பிடுங்கி பின் வேர் விழுங்கும் மண்ணை
உதறுகையில் உதிர்ந்த தேயிலைவித்து
இன்னும் சில நாளில்
துளிர்விடும் என்ற இறுமாப்பில்
விரைகின்றான்
அடுத்த கன்றை நோக்கி...

*கறுப்பன் தயிலம் என்பது தேயிலைத்தறையையும் இனச்செறிவையும் அழிக்க நடப்படும் மரம். இது சூழலில் உள்ள நீரை உறிஞ்சி சூழலையும் வரட்சியாக்கும்

செம்மலர் மோகன்



# தெருவோரத்து கச்சான்காரி

கடனுக்கு வாங்கிய
கச்சான் புடைத்தெடுத்து,
வேகும் விறகோடு
நானும் வெந்து,
குட்டை அகப்பைக்கு
கட்டை பொருத்திக் கட்டி,
சட்டியில் கச்சான் கொட்டி
வறுத்தெடுக்க,
நாரியும் விண் கூவும்.
வெந்துவிட்டதா என்று
ஒரு கச்சான் எடுத்து
பதம் பார்க்க
பதறும் இதயம்.
ஒரு கச்சான் பை நிறைக்கும்,
என்றெண்ணும் மனசு.
சோளன் பொரிக்கையில்
மனசும் பொலியும்
எடுக்கலாம் போட்ட முதலேனும்.

கோயில் வீதியில்
ஒரு இடம் பிடித்து,
ஒற்றை விரலால் தூக்கும்
என் மேசையை
அங்கே நிலைநிறுத்தி,
நைந்து போன
என் இரு தட்டுச்சுளகை
தூசிதட்டி அங்கிருத்தி,
வறுத்து வைத்த கச்சானை,
"ஆண்டவனே" எனக் குவித்து,
மழலை போல் மெல்ல வருடி,
சிறு மடுவாக்கி
விற்கப் பாத்திருக்கையில்,

பிரதேசவரிக் கூலியெண்டு ஒரு கை நீளும்.
பொறுதம்பி வித்ததும் தாரேனெண்டாலும்
தட்டுச் சுளகை
பறக்கவைக்க ஆயத்தமாவான்.
மார்பில் ஒளித்துவைத்த பணத்தை
மறுபக்கம் திரும்பியெடுத்துக் கொடுக்க,
போவான் அவன்.
கொண்டுசெல்லும் அந்தப்
பணம் பின்னே
பதறி மனம் போகும்.

வறுத்ததை விற்பதற்காய்,
சகதி பூசிய செருப்புகளை
வாங்கிப் பத்திரப்படுத்தும்
என் கைகள்.

வியர்வையும், நாற்றமும்
புதைந்த தலைக்கவசங்கள்
என்னைச்சுற்றிக் குவியும்.
அதற்கெல்லாம்
கூலிப்பணம் வாங்குவதில்லை.
எனக்கெதற்கு அது?
பத்து ரூபாய்க்காயினும்
கச்சான் வாங்கினால்
போதுமையா.

ஆயினும் என்கனவு
பொய்க்கும்.
சத்தமின்றி மறைவாகச் சிலர்
"நல்ல கச்சானோ ஆச்சி?"
என்று இருபது ரூபாய் தந்து
ஐம்பது ரூபாய்க்கு
தின்று தீர்ப்பர்.
வெந்தது பார்க்க,
ஒரு கச்சான்
எடுக்க நான் துடித்தேன்.
மேசை தாண்டி
முன்புறம் எட்டிப் பார்க்கையில்
நிலத்தில் விதைத்திருக்கும்
கோதுகள்
என் உழைப்பை சிதறடிக்கும்.

காசில்லாமல் நீங்கள்
அள்ளிக் கொறிக்க
ஒரு தட்டுச் சுளகும்,
விற்பனைக்கு ஒரு தட்டும்
வைத்திருக்க
நானென்ன செட்டியார் மனிசியே...?
உழைத்து தேய்ந்து
நோயோடு போராடும்
கட்டியவன் என்னோடு...
சாமியை கும்பிட்டு
மனச்சாட்சியுடன்
கச்சான் வாங்கிப் போகாமல்
ஒரு பிடி கேட்காமல் அள்ளி
என் உழைப்பை
அநியாயம் பண்ணாதீர்.

சின்னமுதல்...
சின்னக்கடை...
சின்னக்கனவு...
அவ்வளவுதான் நான்.

ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்



# மறுபிறவி எடுத்த தாயின் ஆன்மா!

## மாக்சிம் கார்க்கியின் தாய் நாவலின் இறுதிப் பகுதி

இலக்கியம் வழியாக அரசியலை அறிமுகம் செய்வதற்கு இந்த நாவல் மிகவும் பொருத்தமான ஒன் றாகும். இந்நாவலின் மாந்தர்கள் வெறுமனே ஒரு இலக்கியத்தில் உரு வான பாத்திரங்கள் அல்ல. அவர்கள் பொதுவு டமைக் கட்சியின் வரலாற்றில், புரட்சிக்கான போராட்டத்தில் பங்கேற்ற நிஜ மனிதர்கள். ஆகவே அனை வரும் இதை அவசியம் படிக்க வேண்டும். படிக்காதோர் கண்டிப்பாகப் படிக்க வேண்டும். புதியவர்கள், இளைஞர்கள், மாணவர்களுக்கு அறிமுகம் செய்யவும் வேண்டும்

தாய் தெருவுக்கு வந்தவுடன், குளிர்ந்து விறைக்கும் வாடைக்காற்று அவளது உடம்பை இறுகப் பிணைத்து அவளது நாசியைத் துளைத்தது; ஒருகணம் மூச்சையே திணற அடித்தது. அவள் நின்றாள். சுற்று முற்றும் பார்த்தாள். பக்கத்து மூலையில் தொளதொளத்த தொப்பியோடு ஒரு வண்டிக்காரன் நின்று கொண் டிருந்தான். அதற்கு அப்பால் தெருக் கோடியில் கூனிக்குறுகி தனது தலையை உள்ளிழுத்து தோள்களுக்குள் புதைந்தவாறே ஒரு மனிதன் நடந்து சென்றான்; அவனுக்கும் அப்பால் ஒரு சிப்பாய் தன் செவிகளைத் தேய்த்து விட்ட வாறே ஓடிக்கொண்டிருந்தான்.

"அந்தச் சிப்பாயை எங்காவது கடைக்கு அனுப்பியிருப்பார்கள்" என்று அவள் எண்ணி னாள். எண்ணிக்கொண்டே, தனது காலடியில் நசுங்கி நொறுங்கும் பனிக்கட்டிகளின் சத்தத் தைக் கேட்டவாறே நடந்து போனாள். அவள் ரயில் நிலையத்துக்கு நேரங்காலத் தோடேயே வந்து சேர்ந்துவிட்டாள். அழுக்கும் அசுத்தமும் அடைந்திருந்த மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளின் அறையில் ஒரே ஜனக்கூட்டமாக இருந்தது. அங் கிருந்த தொழிலாளர்களை எல்லாம் குளிர் உள்ளே அடித்து விரட்டியிருந்தது. வண்டிக்காரர்களும், வீடு வாசலற்று கந்தல் கந்தலான உடையணிந்த அனாதைகளும் அங்கு நிறைந்திருந்தார்கள். அங் குப் பிரயாணிகளும் இருந்தார்கள். சில விவசாயிகள், மென் மயிர்க் கோட் அணிந்த கொழுத்த வியாபாரி ஒருவன், ஒரு மதகுரு, அம்மைத் தழும்பு முகங்கொண்ட அவரது மகள், ஐந்தாறு சிப்பாய்கள், நிலை கொள்ளாது தவிக்கும் சில அங்காடிக் காரர்கள். இவர்கள்தான் அங் கிருந்தார்கள்.

ஜனங்கள் தேநீர் குடித்தார்கள், புகை பிடித் தார்கள்; ஓட்கா அருந்தினார்கள், சள சளத்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். சிற்றுண்டிச்சாலை யின் அருகே யாரோ குபுக்கென்று வாய் விட்டுச் சிரித்தார்கள். அவர்களது தலைக்கு மேலாகப் புகைச் சுழல் வட்டமிட்டுச் சுழன்றது. கதவு களைத் திறக்கும்போது அவை முனகிக் கீச்சிட்டன. கதவுகளை அடைக்கும் போது ஜன்னல் கண்ணாடிகள் நடுநடுங்கி கடகடத்து ஓசை செய்தன. அந்த அறையிலே சுருட்டு நாற்றமும் கருவாட்டு நாற்றமுமே நிறைந் திருந்தன.

தாய் வாசல் பக்கத்தில் ஓர் எடுப்பான இடத்தில் உட்கார்ந்து காத்திருந்தாள். எப் போதாவது கதவு திறக்கப்பட்டால் அவளது முகத்தில் குளிர்ந்த காற்று உறைக்கும். அந் தக் குளிர் அவளுக்கு இன்பம் அளித்தது. அப்படிக் காற்று உறைக்கும் போதெல்லாம் அவள் அதை இழுத்து சுவாசித்து அனுப வித்தாள். ஜனங்கள் பெரும்பாலோர் மூட்டை முடிச்சுக ளோடும் கனத்த மாரிக் காலத் துணிமணி அணிந்து உள்ளே வந்தார்கள். அவர்கள் கதவு வழியே நுழைய முடியாமல் திண்டாடினார் கள்; திட்டிக் கொண்டார்கள். தரைமீதோ பெஞ்சின் மீதோ சாமான்களைத் தாறுமாறாகப் போட்டு விட்டு, தமது கோட்டுக் காலரிலும் கைகளிலும் தாடி மீசைகளிலும் படிந்துகிடக்கும் பனித்துகள் களைத் தட்டிவிட்டார்கள்.

ஒரு தோல் பெட்டியைக் கையில் தூக்கிக் கொண்டு ஓர் இளைஞன் உள்ளே வந்தான், சுற்றுமுற்றும் பார்த்தவாறே அவன் தாயை நோக்கி நேராக வந்தான்.

"மாஸ்கோவுக்கா?" என்று கேட்டான்.

"ஆமாம். தான்யாவைப் பார்க்கப் போகி றேன்" என்றாள் அவள்.

"ஆஹா"

அவன் அந்தத் தோல் பெட்டியை அவ ளருகிலே பெஞ்சின் மீது வைத்தான், சிக ரெட்டைப் பற்ற வைத்தான். தன் தொப்பியை

உயர்த்தி வைத்தான். அடுத்த வாசல் வழியாகச் சென்று மறைந்தான். தாய் அந்தக் குளிர்ந்து போன தோல் பெட்டியைத் தட்டிக் கொடுத்துக் கொண்டாள். பிறகு அதன் மீது முழங்கையை ஊன்றிச் சாய்த்தவாறே திருப் தியுணர்ச்சியோடு தன்னைச் சுற்றியுள்ள ஜனங்களைப் பார்த்தாள். ஒரு நிமிஷம் கழித்து அவள் அந்த இடத்தை விட்டு எழுந்து வெளி வாசல் புறத்துக்கு அரு கிலுள்ள பெஞ்சை நோக்கி நடந்தாள். அவள் தலையை நிமிர்த்தித் தன்னைக் கடந்து செல்ப வரின் முகங்களைக் கவனித்தவாறே அந்தத் தோல் பெட்டியைக் கையில் சுமந்து கொண்டே நடந்து சென்றாள். பெட்டி ஒன்றும் அவ்வளவு பெரியதாகவோ கனமாகவோ இல்லை.

ஓர் இளைஞன் தனது குட்டையான கோட் டின் காலரைத் தூக்கி விட்டவாறே தாயின் மீது மோதினான். அவன் தன் கையால் தலையைத் தடவியவாறே பேசாமல் ஒதுங்கிச் சென்றான். அவனைக் கண்ட மாத்திரத்தில் அவனை எங்கோ பார்த்த மாதிரி தோன்றியது. அவள் திரும்பிப் பார்த்தாள். அவனும் தனது வெளுத்த கண்களால் அவளையே பார்த்துக் கொண்டிருந் தான். அந்தக் கூரிய பார்வை அவளது நெஞ்சைக் கத்தி போலக் குத்தியது, தோல் பெட்டியைப் பிடித்திருந்த அவளது கரம் பலமிழந்து தள்ளாடியது. திடீரென்று அந்தப் பெட்டியின் கனம் அதிகரித்துவிட்டது போல் தோன்றியது.

"இவனை நான் இதற்கு முன்பே எங்கோ பார்த்திருக்கிறேனே" என்று யோசித்தாள் அவள். தனது இதயத்திலே தோன்றிய புழுக்க உணர்ச் சியை அவள் வெளியேற்றிவிட முனைந்தாள். தனது இதயத்தை மெதுவாக, எனினும் தவிர்க்க முடியாதபடி உறையச் செய்யும் அந்த உணர்ச் சியை அலசி ஆராய அவள் விரும்பவில்லை. அதை ஒதுக்கித் தள்ளினாள். ஆனால் அந்த உணர்ச்சியோ விம்மி வளர்ந்து அவளது தொண் டைக் குழி வரையிலும் முட்டி மோதி அவளது வாயில் ஒரு வறண்ட கசப்புணர்ச்சியை நிரப் பியது. அவள் தன்னை அறியாமலேயே அந்த மனி தனை மீண்டும் திரும்பிப் பார்க்க வேண்டும் என்ற ஆசைக்கு ஆளானாள். அவள் திரும்பினாள். அவன் அதே இடத்தில் கால் மாறி நின்று கொண்டு ஏதோ செய்ய எண்ணு வது போலவும் நின்று கொண்டிருந்தான். அவ னது வலது கை கோட்டுப் பித்தான்களுக்கிடை யில் நுழைந்து போயிருந்தது. இடது கை கோட்டுப் பைக்குள் இருந்தது. எனவே அவனது வலது தோள் இடது தோளைவிட உயர்ந்ததாகத் தோன்றியது.

அவள் பெஞ்சை நோக்கிச் சென்று மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் தன்னுள் உள்ள எதுவோ நொறுங்கிப் போய்விடும் என்ற பயத்தோடு உட்காருவது போல் ஓரிடத் தில் அமர்ந்தாள். வரும் துன்பத்தை உணர்த்தும் கூரிய முன்னுணர்வினால் கிளரப்பட்ட நினை வில், இரண்டு முறை அம்மனிதனைப் பார்த்த தாக திடுமென்று அவளுக்கு நினைவு வந்தது. ரீபின் தப்பியோடும் போது நகரின் கோடியி லுள்ள வெட்டவெளி மைதானத்தில் அவனை ஒருமுறை அவள் கண்டிருக்கிறாள். இரண்டா வது முறையாக அவனை விசாரணையின்போது பார்த்திருக்கிறாள். ரீபின் தப்பியோடும் போது தன்னை விசாரித்த போலீஸ்காரனுக்குத் தப் பான வழியைச் சுட்டிக் காட்டினாள். அந்தப் போலீஸ் காரனும் நீதிமன்றத்தில் இவன் பக் கத்தில் அப்பொழுது நின்று கொண்டிருந்தான். சரி தான். தன்னைப் பின்தொடர்ந்துதான் அவன் வருகிறான் என்பதை அவள் உணர்ந்து கொண் டாள். தெளிவாக அறிந்து கொண் டாள்.

"அகப்பட்டுவிட்டேனா?" என்று அவள் தன் னைத்தானே கேட்டுக் கொண்டாள். ஒரு நிமி ஷம் கழித்து அவள் தன்னுள் நடுங்கிக் கொண்டே அதற்குப் பதிலும் கூறிக் கொண்டாள்.

"இன்னும் அகப்படவில்லை."

ஆனால் உடனேயே அவள் பெரு முயற்சி செய்து மீண்டும் தனக்குள் உறுதியோடு சொல்லிக் கொண்டாள்:

"அகப்பட்டுவிட்டேன்!"

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்; ஆனால் எதுவும் அவள் கண்ணில் பட வில்லை. அவள் மனத்தில் எத்தனையோ எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் பளிச்சிட்டுத் தோன்றின.

"இந்தத் தோல் பெட்டியை விட்டுவிட்டு நழுவிவிடலாமா?"

இந்த எண்ணத்தை மீறி இன்னொரு எண் ணம் பளிச்சிட்டது.

"என்னது? என் மகனது வாசகங்களை நிராகரித்துவிட்டுச் செல்வதா? இவர்கள் போன்ற வர்களிடம் விட்டுவிட்டுச் செல்வதா?"

அவள் பெட்டியை இறுகப் பிடித்தாள்.

"இதையும் தூக்கிக்கொண்டே போய்விட லாமா? ஓடி விடலாமா?"

இந்த எண்ணங்கள் எல்லாம் அவளுக்கு அன்னியமாய்த் தோன்றின. யாரோ வேண்டு மென்றே இந்த எண்ணங்களைத் தன் மனத்தில் திணிப்பது போல் இருந்தது. அவை அவளது மனக்குகையிலே எரிந்து கனன்றன; ஊசி

முனைகளைப் போல் அவளது நெஞ்சைத் துளைத்தன. அந்த வேதனையுணர்ச்சியால் அவள் தன்னை மறந்தாள். தனக்கு அருமையான சகலவற்றையும், பாவெலையும்கூட மறந்தாள். ஏதோ ஒரு பகை சக்தி அவளது தோள்களையும் நெஞ்சையும் அழுத்திக் கொண்டு அவளை மரணப் பயத்துக்கு ஆளாக்குவது போலிருந்தது. அவளது நெற்றிப்பொட்டிலுள்ள ரத்தக் குழாய்கள் படபடத்துத் துடித்தன. அவளது மயிர்க்கால்களில் உஷ்ணம் பரவுவது மாதிரி இருந்தது.

திடீரென்று அவள் பெருமுயற்சி செய்து தன் எண்ணங்களையெல்லாம் கேவலமான தாக, வலுவற்றதாகக் கருதி அவற்றை மிதித்து ஒதுக்கினாள். தனக்குத் தானே கம்பீரமாகச் சொல்லிக் கொண்டாள்:

"உனக்கு வெட்கமாயில்லை?"

இந்த எண்ணம் தோன்றியவுடனேயே அவள் தெளிவடைந்தாள். அவள் மனத்தில் தைரியம் குடிபுகுந்தது. தனக்குள் பேசிக் கொண்டாள்:

"உன் மகனை இழிவுபடுத்தாதே. இதற்குப் போய் யாராவது பயப்படுவார்களா?"

அவளது கண்களில் யாரோ ஒருவனின் சோகமான மங்கிய பார்வை பட்டது. அவளது மனத்தில் ரீபினின் முகம் தோன்றியது. சில கணநேரத் தயக்கத்துக்குப் பின்னர் அவளது உள்ளமும் உடலும் நிதானத்துக்கு வந்தன, இதயத்துடிப்பு சமனப்பட்டது.

"இப்போது என்ன நடக்கும்?" என்று அவள் சுற்றுமுற்றும் பார்த்தவாறே எண்ணிக் கொண்டாள்.

அந்த உளவாளி ஸ்டேஷன் காவல் கார னைக் கூப்பிட்டு அவனிடம் அவளைக் கண் ணால் சுட்டிக்காட்டி ஏதோ ரகசியமாகக் கேட் டான். அந்தக் காவலாளி அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போனான். இன்னொரு காவலாளி வந்தான். அவனிடமும் அவன் ரகசியம் பேசினான். அதைக் கேட்டு அவன் முகத்தைச் சுழித்தான். அவன் ஒரு கிழவன், நரைத்த தலையும் சவரம் செய்யாத முகமும் கொண்டவனாகத் தோன்றினான். அவன் அந்த உளவாளியை நோக்கித் தலையை ஆட்டி விட்டு, தாய் அமர்ந்திருந்த பெஞ்சை நோக்கி வந்தான்.

அந்த உளவாளி அதற்குள் மறைந்து போய் விட்டான்.

அந்தக் காவலாளி நிதானமாக அவளிடம் வந்து அதிருப்தியுணர்ச்சியோடு தாயைப் பார்த்தான். அவள் பெஞ்சிலிருந்தவாறே குன்றிக் குறுகினாள்.

"இவர்கள் என்னை மட்டும் அடிக்காமலிருந்தால்!" என்று எண்ணினாள்.

அவன் அவள் முன் நின்றான். ஒரு நிமிஷம் பேசாது நின்றான், கடுமையாகச் சொன்னான்:

"நீ என்ன பார்க்கிறாய்?"

"ஒன்றுமில்லை."

"அப்படியா? திருடி! இந்த வயசிலுமா திருட்டுப்புத்தி?"

அந்த வார்த்தைகள் அவளது முகத்தில் ஓங்கியறைந்தன. ஒருமுறை – இருமுறை அந்தக் குரோதத் தாக்குதல் அவளது தாடையையே பெயர்த்து, கண்களைப் பிதுங்கச் செய்வது மாதிரி வேதனை அளித்தது.

"நானா? நான் ஒன்றும் திருடியில்லை. பொய் சொல்கிறாய்" என்று தன்னால் ஆன மட்டும் உரத்த குரலில் கத்தினாள் அவள். அவமானத்தின் கசப்பாலும், கோப வெறியின் சூறாவளியாலும் அவளது சர்வ நாடியுமே கதிகலங்கிப் போயின. அவள் தோல் பெட்டியை உலுக்கித் திறந்தாள்.

"பாருங்கள்; எல்லோரும் பாருங்கள்!" என்று கத்திக்கொண்டே அவள் துள்ளியெழுந்தாள். அவளது கைகளில் ஒரு கத்தைப் பிரதிகளை எடுத்துக்கொண்டு தலைக்கு மேலே உயர்த்தி ஆட்டிக் காட்டினாள்.

அவளை நோக்கி நாலா திசைகளிலிருந்தும் ஓடி வரும் ஜனங்களின் பேச்சுக்குரல் அவளது காதின் இரைச்சலையும் மீறிக் கேட்டது.

"என்ன நடந்தது?"

"அதோ அங்கே – ஓர் உளவாளி."

"என்ன அது?"

"இவளை அவர்கள் திருடியென்கிறார்கள்."

"பார்த்தாலே கண்ணியமானவளாய்த் தெரிகிறதே! இவளையா? ச்சூ! ச்சூ!"

"நான் திருடியல்ல" என்று உரத்தக் குரலில் சத்தமிட்டாள் தாய். தன்னைச் சுற்றி சூழ்ந்த ஜனக்கூட்டத்தைக் கண்டு அவளுக்கு ஓரளவு அமைதி ஏற்பட்டது.

"நேற்று அரசியல் குற்றவாளிகள் சிலரை விசாரணை செய்தார்கள். அந்தக் குற்றவாளிகளில் என் மகனும் ஒருவன். அவன் பெயர் விலாசவ். அவன் அங்கு ஒரு பிரசங்கம் செய்தான். இதுதான் அந்தப் பேச்சு அதை நான் மக்களிடம் வழங்கப் போகிறேன். அவர்கள் இதைப் படிக்கட்டும். உண்மையைத் தெரிந்து கொள்ளட்டும்..."

யாரோ மிகுந்த ஜாக்கிரதையோடு அவள் கையிலிருந்து ஒரு பிரதியை உருவிப் பிடுங்கினார்கள். அவள் அவற்றை மேலே உயர்த்தி ஆட்டிக் கொண்டே, ஜனக் கூட்டத்தில் விட்டெறிந்தாள்.

"இதற்கு உனக்குச் சரியான தண்டனை கிடைக்கும்" என்று யாரோ, கூட்டத்தி லிருந்து பயந்த குரலில் சத்தமிட்டார்கள்.

ஜனங்கள் அந்தப் பிரதிகளைப் பாய்ந்து பாய்ந்து பிடித்துத் தமது கோட்டுகளுக்குள்ளும் பாக்கெட்டுகளுக்குள்ளும் மறைத்துக் கொள்வதைக் கண்டாள். இதைக் கண்டவுடன் அவளுக்கு மீண்டும் உறுதி பிறந்தது. அசையாமல் நின்றாள். அவள் அமைதியோடு அழுத்தத்தோடு பேசினாள். அவளது இதயத்தினுள்ளே ஓங்கி வளரும் இன்பத்தையும் பெருமிதத்தையும் உணர்ந்தாள். பேசிக் கொண்டே பெட்டியிலிருந்து அந்தப் பிரதிகளை வாரியெடுத்து அங்குமிங்கும் கைகளை நீட்டிப் பிடிப்பதற்காகத் துடிதுடித்துக் கொண்டிருக்கும் ஜனக்கூட்டத்தை நோக்கி விட்டெறிந்தாள்.

"என் மகனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ஏன் விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள் தெரியுமா? நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு தாயின் இதயத்தை, என் போன்ற ஒரு கிழவியின் பேச்சை நீங்கள் நம்ப முடியும் அல்லவா? அவர்களை விசாரணைக்குக் கொண்டு வந்தது ஏன்? எல்லோருக்கும் அவர்கள் உண்மையை எடுத்துக் கூறியதற்காகத்தான். அந்த உண்மையை மறுத்துப் பேச ஒருவன்கூட இல்லை என்று நேற்று நான் உணர்ந்தேன்."

கூட்டம் அவளைச் சுற்றி அமைதியோடு பெருகியது. வட்டமிட்டுச் சூழ்ந்து நின்றது.

"வறுமை, பசி, பிணி - தங்களது உழைப்புக்கு பிரதியாக, மக்களுக்கு இவை தான் கிடைக்கின்றன. சகல விஷயங்களுமே நமக்கு எதிராக இயங்குகின்றன. நமது வாழ்நாளெல்லாம், ஒவ்வொரு நாளும், நமது கடைசி மூச்சுவரை, இறுதி பலத்தையும் நமது உழைப்புக்காக அர்ப்பணம் செய்வதால் எப்போதும் நாம் அழுக்கடைந்து அவர்களால் ஏமாற்றவும் படுகிறோம். நாம் பெற வேண்டிய இன்பத்தையும், நலன்களையும் மற்றவர்கள் அறு வடை செய்து அனுபவிக்கிறார்கள். சங்கிலி யால் கட்டிப் போடப்பட்ட நாய் மாதிரி நம்மை அவர்கள் அறியாமையில் ஆழ்த்தியுள் ளார்கள் – நமக்கு எதுவுமே தெரிவதில்லை. ஒவ்வொன்றுக்கும் பயப்படுகிறோம் – நாம் எதையும் தெரிந்து கொள் ளவே அஞ்சுகிறோம். நமது வாழ்க்கையே விடியாத இருள் நிறைந்த இரவாகப் போய்விட்டது!"

"சரிதான்" என்று ஒரு மங்கிய குரல் எதிரொலித்தது.

"அவளது வாயை மூடு!"

கூட்டத்திற்குப் பின்னால் அந்த உளவாளியும் இரண்டு போலீஸ்காரர்களும் வருவதை தாய் கண்டுவிட்டாள். அவள் அவசர அவசரமாக மிஞ்சியிருந்த பிரதிகளை விநியோகிக்க முனைந்தாள். ஆனால் அவளது கை தோல் பெட்டியைத் தொட்டபோது, அவளது கையோடு யாரோ ஒருவனின் கையும் மோதியது.

"எடுத்துக் கொள்ளுங்கள், எடுத்துக் கொள்ளுங்கள்" என்று குனிந்து கொண்டே சொன்னாள் அவள்.

"கலைந்து போங்கள்!" என்று சத்தமிட்டுக் கொண்டே போலீஸ்காரர்கள் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். அந்த ஜனங்கள் வேண்டா வெறுப்பாக வழி விட்டு, அந்தப் போலீஸ்காரர்களை முன்னேற விடாமல், தம்மையறியாமலேயே அவர்களை நெருக்கித் தள்ளினார்கள். அன்று விரித்த பிரகாசமான கண்களோடு அந்த அன்புருவான கிழவியைக் கண்டு எல்லாரும் தவிர்க்க முடியாதபடி கவர்ச்சி கொண் டார்கள். வாழ்க்கையில் புறக்கணிக்கப்பட்டு, ஒருவருக்கொருவர் ஒட்டின்றிப் பிளந்து போயிருந்த அந்த ஜனங்கள், அந்தப் பொழுதில் தாங்கள் அனைவரும் ஒரே இனமாக மாறிவிட்டது போல் உணர்ந்தார்கள். அந்த உத்வேகமான வார்த்தைகளை ஆழ்ந்த மன உணர்ச்சியோடு கேட்டார்கள். அந்த வார்த்தைகள்தான் வாழ்க்கையில் அநீதியால் துன்பத்துக்காளான எண்ணற்ற இதயங் கள் எவ்வளவோ காலமாகத் தேடித் திரிந்த வார்த்தைகளாக ஒலித்தன. தாய்க்கு அருகில் நின்ற ஜனங்கள் மௌனமாக நின்றார்கள். அவளையே விழுங்கிவிடுவதுபோல் இமை கொட்டாமல் பார்த்தார்கள். அவர்களது உஷ்ண மூச்சுக் காற்றுக் கூடத் தன் முகத்தில் உறைப்பதை அவள் உணர்ந்தாள்.

"ஏ, கிழவி, போய்விடு!"

"அவர்கள் உன்னை ஒரு நிமிஷத்தில் பிடித்துவிடுவார்கள்."

"இவளுக்குத்தான் என்ன தைரியம்!"

"போங்கள் இங்கிருந்து! கலைந்து போங்கள்!" என்று கத்திக்கொண்டே போலீஸ் காரர்கள் மேலும் நெருங்கி வந்தார்கள். தாய்க்கு எதிராக நின்ற ஜனங்கள் ஆடியசைந்து ஒருவரையொருவர் பிடித்துக்கொண் டார்கள்.

அவர்கள் தன்னை நம்பவும், தான் சொல்வதைப் புரிந்து கொள்ளவும் தயாரா யிருப்ப

தாகத் தோன்றியது. எனவே அவள் அவசர மாக, தனக்குத் தெரிந்த சகல விஷயங்களையும், தனது அனுபவத்தால் கண்டறிந்த சகல எண்ணங்களை யும் அவர்களுக்குச் சொல்லித் தீர்த்துவிட எண்ணினாள். அந்த எண்ணங்கள் அவளது இதயத்தின் அடித் தளத்திலிருந்து லாவகமாகப் பிறந்தெழுந்து, கவிதா சொரூபமாக இசைத்துக் கொண்டு வெளியேறின. ஆனால் அந்தக் கவி தையைத் தன்னால் பாடிக்காட்ட முடியவில் லையே என்று அவள் வேதனைப்பட்டாள். அவ ளது குரல் நடுநடுங்கி உடைந்து கரகரத்து ஒலித்தது.

“தனது ஆன்மாவை விற்றுவிடாத ஒரு தொழிலாளியின் நேர்மை நிறைந்த பேச்சுத் தான் என் மகனின் பேச்சு. நேர்மையான வாச கம்! அந்த வாசகத்தின் தைரியத்தைக் கொண்டே நீங்கள் அதை அறிந்து கொள்வீர்கள்?”

ஒரு இளைஞனது இரண்டு கண்களும் அவளைப் பயத்தோடும் வியப்போடும் பார்த் துக்கொண்டேயிருந்தன.

யாரோ அவளது மார்பில் தாக்கினார்கள். அவள் பெஞ்சின் மீது விழுந்தாள். ஜனக் கூட்டத்துக்கு மேலாகப் போலீஸ்காரர்களின் கைகள் தெரிந்தன. ஜனங்களைத் தோளைப் பிடித்தும் கழுத்தைப் பிடித்தும் தள்ளிக் கொண் டும் தொப்பிகளைப் பிடுங்கியெறிந்து கொண் டும் அவர்கள் முன்னேறி வந்தார்கள். தாயின் கண்களில் எல்லாமே இருண்டு மங்கித் தோன் றின. அவள் தனது ஆயாசத்தை உள்ளடக்கி வென்று கொண்டே, தனது தொண்டையில் மிஞ்சி நின்ற சக்தியோடு உரத்துக் கத்த முனைந்தாள்.

“ஜனங்களே! ஒன்று திரளுங்கள் ஓரணி யில் பலத்த மாபெருஞ் சக்தியாகத் திரண்டு நில் லுங்கள்!”

ஒரு போலீஸ்காரன் தனது கொழுத்தப் பெருங்கையினால் அவளது கழுத்தை எட்டிப் பிடித்து உலுக்கினான்:

“வாயை மூடு!”

அவளது தலை சுவரில் மோதியது. ஒரு கணநேரம் அவளது இதயத்தில் பயம் சூழ்ந்து இருண்டது. ஆனால் மறுகணமே அந்தப் பயம் நீங்கி ஒரு ஜோதி வெள்ளம் பொங்கியெழுந்து அந்த இருளை அப்பால் துரத்தியடித்தது.

“போ, போ” என்று சொன்னான் அந்தப் போலீஸ்காரன்.

“எதைக் கண்டும் நீங்கள் பயப்படாதீர்கள்! நீங்கள் இப்போது வாழ்கின்ற வாழ்க்கையை விட எதுவும் கொடுமை வாய்ந்ததாக இருக்கப் போவதில்லை ...”

“வாயை மூடு. நான் சொல்லுகிறேன், வாயை மூடு”

அந்தப் போலீஸ்காரன் அவள் கையைப் பிடித்து, வெடுக்கென்று இழுத்தான். இன் னொரு போலீஸ்காரன் அவளது மற்றொரு கையைப் பிடித்துக்கொண்டான். இருவரு மாக அவளை இழுத்துச் சென்றனர்.

“உங்களது இதயத்தையே தின்று கொண் டிருக்கும் கசப்பைவிட தினம் தினம் உங்களது நெஞ்சையே சுவைத்துக் கடிக்கும் கொடுமையை விட...”

அந்த உளவாளி அவளை நோக்கி ஓடி வந்தான். தனது முஷ்டியை அவளது முகத் துக்கு நேராக உயர்த்திக் காட்டிக் கத்தினான்:

“ஏ, நாயே! வாயை மூடு!”

அவளது கண்கள் அகன்று விரிந்து பிர காசித்தன. அவளது தாடை துடிதுடித்தது. வழுக்கலான கல் தரையின் மீது காலைப் பலமாக ஊன்றிக்கொண்டு அவள் மேலும் கத்தினாள்:

“அவர்கள் மறு பிறவி எடுத்த என் ஆத்மாவைக் கொல்லவே முடியாது.”

“ஏ நாயே!”

அந்த உளவாளி அவளது முகத்தில் அறைந் தான்.

“வேண்டும், அந்தக் கிழவிக்கு!” என்று யாரோ வெறுப்போடு கத்தினார்கள்.

ஒரே கணத்தில் சிவப்பாகவும் கறுப்பாக வும் இருந்த ஏதோ ஒன்றால் அவள் கண்கள் இருண்டன. ரத்தத்தின் உப்புக் கரிக்கும் ருசி அவள் வாயில் தட்டுப்பட்டது.

அவளைச் சுற்றிலும் எழுந்த ஆவேசக் குரல்களால் தாய் மீண்டும் உணர்ச்சி பெற்று விழிப்புற்றாள்.

“அவளைத் தொடாதே!”

“வாருங்களடா பயல்களா!”

“டே போக்கிரி, உன்னைத்தான்!”

“அவனை உதையடா!

“அவர்கள் நம் அறிவை ரத்தமயமாக்க முடியாது!”

“அவர்கள் அவளைப் பின்னாலிருந்து கழுத் தில் கைகொடுத்துத் தள்ளினார்கள்; அவளது தலையிலும் தோளிலும் அறைந்தார்கள். கூச் சலும் கும்மாளமும் அலறலும் விசில் சப்த மும் ஒன்றோடொன்று எழும்பியொலித்த குழப் பத்தில் அவள் கண் முன்னால் பளிச்சிட்டுத் தோன்றி எல்லாம் சுழல ஆரம்பித்தன; அந்தக்

கூக்குரல்கள் அவள் காதைச் செவிடுபடச் செய்தன. அவளது தொண்டை அடைத்தது, திணறியது; அவளது கால டியிலே இருந்த நிலம் நழுவி இறங்கியது. அவள் கால்கள் தள்ளாடின. உடம்பு வேதனையின் குத்தல் உணர்ச்சியால் பளுவேறி உழலாடி, ஆதரவற்றுத் தடுமாறியது. எனினும் அவளது கண்கள் மட்டும் தமது பிரகாசத்தை இழக்கவில்லை. அந்தக் கண்கள் மற்ற கண்களை நெருப்பாகக் கனன்றெறியும் கண்களை, தனக்குப் பழக்கமான துணிவாற்றலின் ஜோதியோடு ஒளி செய்யும் கண்களை, தனது இதயத்துக்கு மிகவும் அருமையாகத் தோன்றிய கண்களைக் கண்டு களித்தன.

அவர்கள் அவளை வாசற்புறமாகத் தள்ளிக் கொண்டு சென்றார்கள்.

அவள் ஒரு கையைப் பிடுங்கி விடுவித்துக்கொண்டு கதவின் கைப்பிடியை எட்டிப் பிடித்தாள்.

"இரத்த சமுத்திரமே திரண்டு வந்தாலும் சத்தியத்தை மூழ்கடிக்க முடியாது!"

அவர்கள் அவள் கையில் பட்டென்று அறைந்தார்கள்.

"ஏ, முட்டாள்களே நீங்கள் வீணாக எங்கள் பழியைத்தான் தேடிக் கொள்கிறீர்கள். உங்களது கொடுமைகளெல்லாம் ஒரு நாள் உங்கள் தலையிலேயே வந்து விடியப்போகின்றன!"

ஒரு போலீஸ்காரன் அவளது தொண்டையைப் பிடித்து அவளது குரல்வளையை நெரித்துத் திணறடித்தான்.

"அதிருஷ்டங்கெட்ட பிறவிகளே!" என்று அவள் திணறினாள்.

யாரோ ஓர் உரத்த தேம்பலால் அதற்குப் பதில் அளித்தார்கள்.

(முற்றும்)

கோடானுகோடி உழைப்பாளிகளைத் தட்டி எழுப்பி ஆர்வமும் வர்க்க உணர்வும் ஊட்டி போராட்டத்தில் தன்னையுமறியாமல் ஈடுபடுத்தவல்ல ஆற்றல் படைத்தது என லெனின் பாராட்டியது தாய் நாவலைத் தான்.

கார்க்கியின் 'தாய்' நாவல் முதன்முதலில் 1975-ம் ஆண்டு மாஸ்கோவின் முன்னேற்றப் பதிப்பகத்தால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு வெளியிடப்பட்டது. இந்நாவலை மிகச் சிறப்பாகத் தமிழில் மொழிபெயர்த்தவர் தொ.மு.சி. ரகுநாதன்.

(சோவியத் இலக்கியங்களை அறிமுகம் செய்யும் முயற்சியாகத் தாய் நாவலை 74 பாகங்களாக வினவு தளம் வெளியிட்டது. அதன் இறுதிப் பகுதி இது)

நன்றி : வினவு

# 'போ'யிலை

எஸ்.மைக்கேல் ஜீவநேசன்


*மோகலாகிரியை தூண்டும் தடைசெய்யப்பட்ட*
*வஸ்துவுக்கு*
*வாடிக்கையாளர்கள் குறைவில்லை*
*தாராளமாய் கிடைக்கிறது பெட்டிக்கடையில்*

*சன்னலோர பயணத்தில் உமிழ்ந்துவிட்ட எச்சிலால்*
*பாதசாரிகளின் வசைமொழியால்*
*நாறுகிறது மனம்(சு)*

*சிறுநீர் கழிக்க செல்லும்மிடமெல்லாம்*
*புகையிலை பை*

*கடும் உழைப்பிற்கான இயங்குசக்தி*
*இதில் கிடைப்பதாக*
*பறைசாற்றிக் கொள்ளும்(கொல்லும்)*
*சக தோழர்கள்*

*ஆயுதபூஜையின் மேசைப் பலகையில்*
*புகையிலையும் வைக்கிறேன்*
*கடிந்து கொள்ளும் இயக்குனரும்*
*வெட்கமடையும் தோழர்களும்!*



# ஆரோன் சுவாட்: இணையச் சுதந்திரத்தின் குறியீடு

அதீதன்



போராட வீதிக்கு இறங்கும்போதும் போராட்டத்தில் முழக்கங்களை எழுப்பும்போதும் யாருடைய கண்களுக்கும் புலப்படாத, யாருடைய காதுகளுக்கும் கேட்காத வலுவற்ற மனிதர்களாக எங்களை நாங்களே எண்ணிக்கொள்வது மிகவும் எளிதானது. ஆனால் நான் இன்று சொல்கிறேன் நீங்கள் மிகவும் பலமானவர்கள். வீதிக்கு இறங்கினால் உங்களால் இந்தச் சட்டத்தை தடுக்க முடியும் இணையத்தில் இடம் பெறுகின்ற காப்புரிமை மீறல்களை கட்டுப்படுத்தல் எனும் பெயரில் அமெரிக்க அரசாங்கம் கொண்டுவரவிருந்த 'இணையவழித் திருட்டை தடுக்கும் சட்டம்' என்கின்ற SOPA சட்டத்தை எதிர்த்துப் போராட மக்களை அழைக்கும் போது ஆரோன் சுவாட் கூறிய வசனங்கள் இவை. ஆம், ஆரோன் சுவாட் இணையத்தின் சொந்தப் பிள்ளை என அழைக்கப்பட்ட ஒரு போராளி. சுதந்திர இணையத்தையும் அறிவு என்னும் பொதுச் சொத்தையும் பாதுகாப்பதற்காக போராடி மடிந்த ஒரு போராளி.

இறக்கும் போது ஆரோனுக்கு 26 வயது. அந்த 26 ஆண்டுகால வாழ்நாளில் அரைவாசியை அவன் ஒரு செயற்பாட்டாளனாகக் கழித்திருக்கிறான். 14 வயதில் இருந்தே இணையத்துக்காக பங்களிக்கவும் குரல் எழுப்பவும் தொடங்கினான் ஆரோன். இணையத்துக்காக எத்தனையோ மென்பொருட்களை கூட்டாகவும் தனியாகவும் எழுதி இருக்கிறான். RSS செய்தியோடை வடிவமைப்பில் பங்களிப்பு செய்த தில் தொடங்கி படைப்பாக்கங்களை பொதுச் சொத்தாகப் பகிர உதவும் படைப்பாக்கப் பொதுமங்களின் உரிமம் என்கின்ற Creative Commons License க்குப் பின்னால் இருக்கின்ற நிரல்களை எழுத உதவியது வரை இணையத்தின் வளர்ச்சியில் பல்வேறு பங்களிப்புகளைச் செய்திருக்கிறான் ஆரோன். வலைத்தள நிரல்களை எழுதுவதற்கான Markdown எனும் கணினி மொழி உருவாக்கத்தில் பங்களிப்பு, இணையத்திற்கான நியமங்களை உருவாக்குவதில் பங்களிப்பு, இன்னும் பல இணையச் சேவைகளை வழங்குவதிலும் அவனது பங்களிப்பு எனப் பெரும் பட்டியலுக்கு சொந்தக்காரன்.

நிரல்களை எழுதுவதோடு நின்றுவிடவில்லை அவனது பங்களிப்பு. உண்மையில் சொல்லப்போனால் ஒரு நிரலாளன் என்பதைத் தாண்டி அவன் ஒரு செயற்பாட்டாளன். அவனது எழுத்துக்களும் அவனது சிந்தனையும் செயற்பாட்டுத் தளத்திலேயே அதிகம் இருந்தது. சுதந்திர இணையத்துக்கான கோட்பாட்டு உருவாக்கத்திலும் உருவாக்கிய கோட்பாடுகளை செயற்படுத்துவதிலும் அதிகம் கவனம் செலுத்தினான். இந்த உலகம் ஏன் இவ்வாறு இருக்கிறது, ஏன் இவ்வாறு இல்லை என்ற கேள்விகளை தனக்குள்ளேயே கேட்கத் தொடங்கினான். சமூக பொருளாதார அரசியல் தத்துவங்கள் இணையும் புள்ளியில் அவனுக்குரிய பதில்கள் கிடைத்தன. அவனது கேள்விகளும் அவனது தேடல்களும் அறிவு தனிச் சொத்து இல்லை, அது இந்த உலகத்தின் ஒட்டுமொத்த உழைப்பின் திரட்சி என்று முடிவுக்கு அவனை அழைத்து வருகிறது. காப் புரிமை என்ற பெயரில் சமூகப் பொது வுடைமையான அறிவு, முடக்கப்படுவதை அவன் அவதானிக் கிறான். மனிதகுல வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டிய ஆய்வுக் கட்டுரைகளும் இன்னும் பல புலமைசார் ஆவணங்களும் இலாப நோக்கில் பணத்தால் மட்டுமே திறக்கப்படக் கூடிய இணைய நூலகங்களின் கதவுகளின் பின்னால் அடைக்கப்பட்டுக் கிடக்கும் நவீன முதலாளித்துவ யதார்த்தம் அவனுக்குள் மேலும் கேள்விகளைத் தோற்றுவிக்கின்றது. அவனுக்குள் ஓர் அறச்சீற்றம் எழுகிறது.

அறிவை முடக்கும் இந்த பொறிக்கிடங்குகள் மீது உண்டான கோபம் அவனது எழுத்துக்களிலும் செயற்பாடுகளிலும் வெளிவரத் தொடங்கின. எத்தனையோ இணையப் பூட்டுகளின் பின் முடங்கியிருந்த இலட்சக் கணக்கான ஆவணங்களை, மக்களின் பயன்

பாட்டுக்காக பூட்டை உடைத்து வெளியே கொண்டு வருகிறான். அறிவை மீளவும் பொது வுடைமையாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பலருடன் சேர்ந்து இயங்குகிறான். அவனால் பொது வெளிக்கு கொண்டுவரப் பட்ட புத்தகங்களதும் ஆய்வுக் கட்டுரைகளதும் ஏனைய ஆவணங்களதும் எண்ணிக்கை பல இலட்சங்களைத் தாண்டுகிறது. 2008 இல் மாத்திரம் சுமார் 2.7 மில்லியன் அளவான, நீதிமன்றத் தீர்ப்பு சார்ந்த ஆவணங்களை பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு வரு கின்றான். சட்டப்படி பொதுமக்களின் பார் வைக்கு வைக்கப்படவேண்டிய ஆவணங்கள் அவை. அந்த ஆவணங்களின் மின்பிரதிகள் கூட இலவசமாக அல்லாமல் கட்டணம் செலுத்தினால் மட்டுமே பெற முடியும் என்று இருந்த நிலைமையால் அவன் அவ்வாறு செய்ய வேண்டிவந்தது. மக்களது பணத்தில் எழுதப்பட்ட, மக்களுக்குச் சொந்தமான தீர்ப் பின் ஆவணங்கள் பணம் என்னும் வேலி களுக்குப் பின்னால் இருந்தமைதான் ஜனநாயக விரோதமான செயலே தவிர, அதை மக்களி டம் கொண்டு செல்லும் வேலை அல்ல. அது ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான ஒரு முயற் சியே தவிர வேறில்லை.

தகவற் சுதந்திர மறுப்பும் சுதந்திர இணை யத்துக்கான கட்டுப்பாடுகளும் மனித குல வளர்ச்சிக்கு முரணானவை என்பதை அவன் தீர்க்கமாக நம்பியிருந்தான். ஆரோனின் திற மையை ஒத்த திறமை கொண்ட எத்தனையோ இளைஞர்கள் அந்தத் திறமையை கோடிகளில் பணத்தை சம்பாதிப்பதற்காக செலவிட்ட வேளையில், ஆரோன் தன் திறமைகளை இணையத்தின் விருத்திக்காக செலவிட்டான். அமெரிக்காவின் அரசியலை மிக ஆழமாக அவன் அறிந்து இருந்தான். போலி ஜனநாயகப் பாதையில் இருந்து அதனை மீட்கும் புரட்சிகர அரசியற்பாதையில் நடந்து செல்லவே அவன் விரும்பினான்.

அவனது செயற்பாடுகள் தினம் தினம் விரிவடைந்தது. 2010 இல், JSTOR என்கின்ற இணைய நூலகத்தில் இருந்து புத்தகங்களை பெருவாரியாக தரவிறக்கம் செய்தபோது MIT பொலிசாரால் கைது செய்யப்படுகிறான். பல் வேறு சட்டப் பிரிவுகளின் அடிப்படையில் பல குற்றச்சாட்டுகள் அவன் மீது சுமத்தப் படுகிறது. கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே வந்திருந்த காலத்திலும் அவனது போராட்ட குணம் மாறவே இல்லை. இணை யவழித் திருட்டைத் தடுக்கும் சட்டம் என்ற பெயரில் தகவற் சுதந்திரத்திற்கு எதிராக அமெரிக்கா கொண்டுவர இருந்த SOPA சட்டத்தை அவனும் அவன் தொடக்கிய Demand Progress என்ற அமைப்பும் எதிர்த்துப் போராடினர். மக்களைத்திரட்டி வீதியிலிறங்கிப் போராடி வென்றனர். இதன் நடுவே வழக்கும் நடந்துகொண்டுதானிருந்தது. JSTOR இடையி லேயே வழக்கிலிருந்து விலகிய போதும்கூட அரசதரப்பு, வழக்கை கைவிடாது முன்னெடுத் தனர். ஒரு மில்லியன் டாலர் தண்டப்பண மும் 35 ஆண்டுகால சிறைத்தண்டனையும் தீர்ப்பாக வர இருந்த நிலையில், குற்றத்தை ஒப்புக் கொள்ளுவதன் மூலம் தண்டனையைக் குறைப்பதற்கான பேச்சுவார்த்தையை ஆரோ னின் வழக்கறிஞர் முன்வைக்கிறார். ஆனால் ஆரம்பம் முதலே ஆரோனை கடுமையாகும் தண்டிப்பதன் மூலம் உலகுக்கு ஒரு செய்தி யைச் சொல்ல கங்கணம் கட்டிக்கொண்டிருந்த அரசதரப்பு, எந்த விட்டுக்கொடுப்பும் செய்ய முடியாது என மறுக்கிறது. உயர்ந்த பட்ச தண்டனையாக 35 ஆண்டு காலம் சிறையில் இருக்க வேண்டிய சூழ்நிலையை எதிர்கொண் டிருந்த ஆரோன் 2013 ஜனவரியில் மன அழுத்தத்தால் தற்கொலை செய்கின்றான். இன்றுவரை இணைய உலகம், கொடூர முத லாளித்துவத்தின் கொலையாகவே அதனைப் பார்க்கிறது. இணையத்தின் சொந்த மகன் சுதந்திர இணையத்திற்காக, தகவல் சுதந்திரத் திற்காக போராடி மாய்ந்தான். உலகம் முழு தும் கொண்டாடுகின்ற இணைய ஜாம்பவான் கள் அத்தனை பேரும் கொண்டாடிய ஓர் இளைஞன் அவன். இளைஞர்களை அரசியல் போராட்ட பாதையில் அழைத்து வரக்கூடிய ஓர் ஈர்ப்பு சக்தி அவனிடம் இருந்தது. அதுவே SOPAவுக்கு எதிரான போராட்டத்தில் மக்களை அதன்பால் ஈர்த்தது. தாங்கள் பல வீனமானவர்கள் என நம்பிக் கொண்டிருந்த பல்லாயிரம் இளைஞர்களை பலம் வாய்ந்த அரசுக்கு எதிராகத் திரட்ட முடிந்தது. தேர்ந்த அரசியல் ஞானமும் செயற்படும் திறனும் இருந்த எத்தனையோ ஆளுமைகளை கொல்லப் பட்ட அதே வழியில் தான் ஆரோனும் கொல்லப்பட்டிருக்கிறான். இறந்தாலும், அந்த ஆளுமைகளைப் போலவே போராட்ட உணர் வையும் சுதந்திர வேட்கையையும் பல்லா யிரம் இளைஞர்கள் மனதில் விதைத்துவிட்டுச் சென்றிருக்கிறான் ஆரோன். இணையச் சுதந் திரத்தின் குறியீடான ஆரோன்; அடங்காமை யின் குறியீடான ஆரோன்; சமூக ஒத் துழையாமையின் குறியீடான ஆரோன் எங்க ளிடம் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், எக்காரணத்திற்காகவும் சுதந்திரத்தைப் பறிக்க எவரையும் அனுமதிக்காதீர்கள் என்பதுவே அது.

***

*. கேவலம் இந்தச் சமூகத்தில் அவள் அஞ்சி, அஞ்சி ஒளித்து ஒளித்து வாழ்ந்த தெல்லாம் எனக்குத் தெரியாதா. எப்படித்தான் அவள் என்னிடம் வெளிக்காட்டாத பொழுதும் அவள் செருப்பை விட்ட மறதி எனக்குப் புரிகிறது.*



# முன்னை இட்ட தீ

க. சிவகரன்

பெரிய நாயகி. பெரிய மறதிக்காரியல்ல. இன்று ஏனோ மறந்துவிட்டாள். ஒரு சோடி பழைய செருப்பு. பூச்சாடிக்கு அருகே, மறைவில் செருகிவிட்டதாகச் சொல்லி வேதநாயகத்தை மீண்டும் அனுப்பிவிட்டாள். பெரியநாயகிக்கு வேண்டிய வேலைகளைச் செய்வது வேதநாயகத்திற்குப் பழகிப் போன விடயந்தான். ஆனால் இன்று மட்டும் அவள் மேல் அவனுக்கும் கொஞ்சம் வெறுப்பாத்தான் இருந்தது. ஐம்பது வயது தாண்டிய வேதநாயகத்தை அப்படி அலைக்கழிப்பது நல்லதல்லவத்தானே! பொழுதுசாயும் நேரம் வீட்டில் ஓய்வாகக் கால் முகம் அலசி தொலைக் காட்சிப் பெட்டி முன் ஞாயிற்றுக்கிழமை அலைவரிசைகளில் எட்டு மணிவரையும் அலைபாயும் வேதநாயகத்திற்குப் பெரியநாயகியின் ஏவல் கொஞ்சம் பிடிக்கவில்லைத் தான் என்றாலும் மீண்டும் மோட்டார் சைக்கிளில் ஓடினான்.

பெரியநாயகியின் சிறிய தந்தையின் மகள் வீட்டில், அவள் விட்ட செருப்பை மீளப் பொறுக்கி வரவேண்டும். பெரிய மறதிக்காரியல்ல. இன்று மறந்துவிட்டாள். ஏன் பெரியநாயகி மறந்தாள்? வேதநாயகம் அவள் மனக்கிடக்கையை அலசத் தொடங்கினாள். அவள் மனதில் எப்படியும் அந்தக் கவலை வரத்தானே செய்யும். அவளும் பெண் தானே! குழந்தையொன்றைத் தூக்கிக் கொஞ்சி விளையாட அவள் மனம் ஏங்காதா. பெருமாள் முருகனின் மாதொருபாகனை வாசித்த பொழுது வேதநாயகம் பெண் மனதைப் பற்றிய கற்பனையாயினும் பெரியநாயகியிடம் நேரில் கண்டது போல் ஏங்கிக் கிடந்த நாட்கள் உண்டு. என்னதான் அவள் வெளிக்காட்டாத பொழுதும் அவள் உள் மனதே ஒளித்து வைத்திருப்பதை என்னால் கண்டறிய முடியுமா. கேவலம் இந்தச் சமூகத்தில் அவள் அஞ்சி, அஞ்சி ஒளித்து ஒளித்து வாழ்வதெல்லாம் எனக்குத் தெரியாதா. எப்படித்தான் அவள் என்னிடம் வெளிக்காட்டாத பொழுதும் அவள் செருப்பை விட்ட மறதி எனக்குப் புரிகிறது. ஆம் அவள் தடுமாறிவிட்டாள். இல்லை மனம் சோர்ந்துவிட்டாள். பாவம்... அடே பாத்துப்போ... அப்பொழுதுதான் வேதநாயகத்திற்குத் தான் மோட்டார் சைக்கிளில் போவது ஞாபகம் வந்தது. குரல் கொடுத்தவன் வேறும் ஏதோ பேசிக்கொண்டு போனான். தெரியாத ஆள்போலும் வேதநாயகம் ஒரு பெரிய அதிகாரி என்பது அவனிற்கு எப்படித் தெரியும். அரச திணைக்களத்தில் பெரிய ஆளணிக்கு கட்டளையிடும்

வேதநாயகத்திற்குச் சாதாரணமாக ஒருவன் கட்டளை போட்டது ஒன்றும் பெரிதாக வேத நாயகத்தைத் தாக்கவில்லை. வேதநாயகம் மனம் மீண்டும் பெரியநாயகியின் சிறியதாய் வீட்டில் விடப்பட்ட செருப்பை எடுப்பதி லேயே குறியாய்க் கிடந்தது. பெரிய உத்தி யோகக்காரர் மனுசியின் செருப்பிற்காய் ஓடி வந்துவிட்டார் என அவர்கள் நினைக்க மாட்டார்களா என்ன. இவர்களிடம் பணம் இல்லையா. பிள்ளை குட்டி இல்லாதவர் களுக்குத்தான் பேராசையும் கூட என எண்ண மாட்டார்களா. ஆசைப்பட்டவற்றை அடையக் கூடிய பணபலம் இருந்தும் பெரிய நாயகி யின் கருவில் திரு கூடிவர வேதநாயகம் செலவிட்ட பணம் அதிகம் தான். ஆனால் பலன்மட்டும் கிடைக்கவில்லை. இப்போ பெரியநாய்கி, ஐம்பதைத் தொட்டு விட்ட பின்பு. இனியொண்டும் முயற்சி வேண்டாம் எனச் சொல்லி விட்டாள். ஆனாலும் அவள் மனதில் அந்தக் குறையிருக்கும் என்பது வேத நாயகத்தின் மனக்கணக்காகத்தான் இருந்தது.

இந்த மனக்கணக்கு, இன்று அவள் மறதி மூலம் வேதநாயகத்திற்கு நிறுவிக்காட்டப்பட் டது போற்பட்டது. அவள் சிறியதாயின் இளைய மகள் மூன்றாவது குழந்தையைப் பெற்ற தனால். அவளைப் பார்க்க போன பொழுது தான் வீட்டின் முன் பக்கத்தே, பூச்சாடி அருகே செருப்பைப் பெரியநாயகி மறந்து விட்டு வந்திருந்தாள்.

மகப்பேறு பார்க்கப் போவதற்கு வேதநாய கம் அப்படி, இப்படிச் சாட்டுக் கூறித்தான் வந்தான். ஆனாலும் இன்று ஞாயிற்றுக் கிழமை. எப்படியும் போக வேண்டும் என்ற பெரியநாயகியின் சின்னக் கட்டளையை வேதநாயகம் நிறைவேற்றிய மன அமைதி. இருப்பினும் மீண்டும் வீட்டில் இருந்து திரும்ப ஓடவேண்டி வந்துவிட்டது.

பெரியநாயகி அவள் சிறியதாயின் மகள், அவளின் தங்கை முறையானவளின் குழந் தையைத் தூக்கிக் கொஞ்சி விளையாடும் பொழுது வேதநாயகம் வெளியே தனிமை யில் இருந்தபடி பூச்செடிகளை மட்டும் இரசித்துக்கொண்டிருப்பதுபோல இருந்தாலும் உள்மனம் பெரியநாயகியின் கொஞ்சல் மொழிகளில் நனைந்துகொண்டுதான் இருந்தது.

வேதநாயகத்தின் பிரியம் முழுவதும் பெரி யநாயகிதான். சாதாரணமாகப் படித்திருந்த அவளிடம் அரியபல குணங்கள் அடங்கி யிருப்பது வேதநாயகத்திற்கு எப்பொழுதும் ஆச்சரியமாகவேபட்டது. குழந்தைமனம் என்று சொல்வது சொல்லக் கேட்பது எல்லாம் வேதநாயகத்திற்குப் பெரியநாயகியை மணம் முடித்தபின்பே தெரியவந்தது. கள்ளங்கபட மற்ற வெள்ளைமனம் எப்பொழுதும் புன் முறுவல், பிறர் பொருட்கு ஆசைப்படா மனம் அவள் படிப்பறிவு குறைவானவள் என்றாலும் பகுத்தறிவுடையவள் என்பது வேதநாயகத்திற்கு நன்கு தெரியும்

குழந்தை இல்லையென்பதற்காய், அவள் கோயில் குளம் என்று படியேறியது கிடை யாது. சாத்திரம் சம்பிரதாயம் என்று தேடிப் போனதும் கிடையாது. வைத்தியரிடம் பேசும் பொழுதும் அவள் விளக்கமாகத்தான் பேசு வாள். எல்லாம் அவன்விட்ட வழியெனச் சிலவேளை வைத்தியரிடம் கூடக் கூறிய பொழுது பெரியநாயகி மெதுவாகப் புன்ன கைப்பாள். அவளிற்குக் கடவுள் நம்பிக்கை இருக்குதோ இல்லையோ தெரியாது. ஆனால் மூடநம்பிக்கை கிடையாது என்பது வேத நாயகத்திற்கு நன்கு தெரியும். பெரியநாயகி மட்டும் சொல்வோர் பேச்சிற்குத் தாளம் போடும் ஒருத்தியாக அமைந்திருந்தால் வேதநாயகம் தூக்குக் காவடியில் தொங்கியிருக்க வேண்டி யிருந்திருக்கும். நல்லவேளையாகப் பெரிய நாயகி மட்டும் எப்பொழுதும் பெரியநாயகி யாகவே அவன் மனதில் இருந்தாள். அவள் குணங்கள் அவனிற்குப் பிடித்துப்போய் இன்று முப்பது வருடங்கள் கடந்துவிட்டன.

இன்றுமட்டும் பெரியநாயகி ஏன் பழைய செருப்பை எடுத்துவரச்சொன்னாள். அநேக மாக, அவள் குழந்தை பிறந்த வீட்டில் அந்தப் பழைய செருப்பை விட்டுவிட்டு வந்திருக்கக்கூடாது என எண்ணி இருக்கலாம் தானே. குழந்தை பிறந்து முப்பத்தொரு நாட்கள் துடக்குக் கழிவு நிகழ்வும் முடிந்த பின்புதான் அவர்கள் போனார்கள். அப்படிப் போன இடத்தில் ஏன் பழைய செருப்பை விடவேண்டும் என எண்ணியிருப்பாளா அவள். அப்படி எண்ணும் தன்மையுடை யவன் அல்லவே. எனினும் கேட்டுவிடத் தான் வேண்டும். செருப்பை எடுத்துக் கொண்டு போய்ப் போட்டுவிட்டு அவளிடம் கேட்கத்தான் வேண்டும் ஏன் உதைவிட்டிருக் கலாம் தானே. என்னைப் படுபொழுதுக்கை ஓட்டம் காட்டவேண்டுமா எனக் கேட்கத்

தான் வேண்டும் என்ற முடிவோடு வேத நாயகம் மோட்டார் சையிக்கிளின் வேகத்தைக் குறைத்தான். பொழுது கருகி இருள் கவ்விவிட்டது. அவன் கண்கட்குத் தூரத்தே பெரியநாயகியின் தங்கையின் வீட்டின் முன்னே இட்ட தீ கொழுந்துவிட்டெரிவது தெரிகின்றது.

வேதநாயகம் திடுக்கிட்டான். வீட்டின் முன்னே கண்வெக்கை நாவெக்கை போகத் துடைத்துப்போட்டுத் தீயிட்டு எரிப்பது அவனிற்குத் தெரியும். ஆம், முன்னே இட்ட தீ கொழுந்துவிட்டெரிகின்றது. இந்தப் பண்பாட்டின் அடையாளமாய் அது அவனைப் பார்த்துப் பரிகாசம் செய்கின்றது. காலம் காலமாகப் போட்டெரிக்கும் சுவாலை கண்பட்டாற் குற்றம், நாவெக்கைக் குற்றம், எல்லாம் மிளகாய், உப்பு, எனப் பொடிப் பொடியாய் கருகி மணக்கும்படி வெடித் தெரியும் தீய வெளிச்சம். மனிதர் மனிதர்க்காய் போட்டெரிக்கும் (ஈமத்) தீ. சீ..சீ.. தூ..தூ.. எனத் துப்பி எரிக்கும் துடைத்துப் போட்டு எரிக்கும் தீ. பெரியநாயகியின் சிறிய தந்தையின் வீட்டின்முன் எரிகிறது. இதில் பெரியநாயகியும் கணவரும் வந்து பார்த்து விட்டுப் போனார்கள். ஏதும் குறை வந்து விடுமோ என்று சொல்லவேண்டுமா. தீச் சுவாலை கதை சொல்லாமற் சொல்லி ஆடி அசைந்து விளையாடியது. முன்னே இட்ட தீ அவனை நில் என்றது. ஏன் வந்தாய் எனக் கேட்டு ஆடியது. திரும்பிப்போ எனத் தலையை மடக்கி மடக்கி அடித்தது. பொக் பொக் கென்று எரிந்து அவனை விரட்டியது. வேதநாயகம் நின்றான். அவன் திரும்பிப் போக ஆயத்தமானான். அவன் மனக்கண்முன் பெரியநாயகியின் கள்ளங் கபடமற்ற குழந்தை முகம் தெரிகின்றது. கொழுந்துவிட்டெரியும் தீயின் நடுவே அவள் சிரித்தபடி வாங்கோ, போதும் என அவனை அழைப்பதுபோல் இருந்தது. வேதநாயகம் செருப்பை எடுக்காமலே திரும்பிப் போகின்றான்.

★★★

# தகவிலோர்

உண்ணிகள் தமக்கென ஒரு நாய் வாங்கக் கனவு காண்கிறன. தகவிலோர் வறுமையிலிருந்து தப்ப - மாய நாளொன்றில் நல்லதிர்ஷ்டம் அவர்கள் மேல் வாளி வாளியாய்ப் பொழியும் எனக் - கனவு காண்கிறார்கள்.

ஆனால், தகவிலோர் எத்துணை வருந்தி அழைத்தாலும், அவர்களின் இடது கை அரித்தாலும்,
வலதுகாலை வைத்துப் புதிய நாளைத் தொடங்கினாலும் துடைப்பத்தை மாற்றிப்
புத்தாண்டைத் தொடங்கினாலும், நல்லதிர்ஷ்டம் தூவானமாயேனும் விழுவதில்லை.

தகவிலோர் - தகவிலோரின் குழந்தைகள், எதற்கும் உரித்தற்றோர்.
தகவிலோர் - யாருமிலிகள், தகவிலரானோர், முயல்கள் போல் ஓடி, வாழ்விலும் மரித்து,
ஒவ்வொரு வழியிலும் நிலைகுலைந்தவர்கள்.

மொழிகளைப் பேசாது திசைமொழி பேசி
மதங்களற்று மூடநம்பிக்கைகளே கொண்டு
கலையைப் படையாமல் கைவினைப் பொருட்களையே படைத்து
பண்பாடு இல்லாது நாட்டாரியலே கொண்டு
மனிதரன்றி மனித வளங்களாகி
பெயரற்று இலக்கங்களாகி
உலக வரலாற்றில் இடம்பெறாது உள்ளூர்ப் பத்திரிகையின் பொலிஸ் பதிவேட்டில்
இடம்பெறுவோரான
தகவிலோர், தம்மைக் கொல்லும் துப்பாக்கிக் குண்டுக்கும் பெறுமதியற்றோர்.



மூலம்: எடுவாடோ கலினோ
தமிழில்: மீநிலங்கோ




# வர்க்கமும் சாதியமும்

## டானியலின் பஞ்சமர் ஒரு மறு வாசிப்பு

சு.தவச்செல்வன்

**தலித் மற்றும் தலித்தியம் என்ற சொல்லாடல்கள் பிற்காலங்களிலேயே தமிழ்ச் சூழலில் அதிகம் பேசப்படுகின்றன. பஞ்சமரைப் பொருத்தவரையில் இவ்வாறான அடையாளத்துக்கு அப்பால் தாழ்த்தப்பட்டவர்கள் எதிர்கொள்கின்ற நிலம், உற்பத்தி, ஊதியம் என்ற அடிப்படை பிரச்சினையில் இருந்து கொண்டே சாதிய ஒடுக்கு முறையைப் பேசுகின்றது. இதற்கான அடிப்படைகளை நிலவுடைமை சமூகம் வழங்கியுள்ளதெனக் குறிப்பிடலாம்.**

### அறிமுகம்

இலங்கை தமிழ் படைப்பிலக்கியத் துறையில் கே.டானியலுக்கு மிக முக்கியமான இடமுண்டு. இலக்கியத் தூய்மை வாதத்திற்கப்பால் சமூக பிரச்சினைகளையே மையப்படுத்திப் படைப்பிலக்கியத்தில் பயணித்தவராக டானியலை நாம் அடையாளம் காணலாம். 1920களில் இலங்கையின் வடபகுதியில் தோன்றிய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் தோற்றத்திலிருந்தே டானியலிடம் இயக்க ரீதியான சிந்தனைகளும் செயற்பாடுகளும் தோன்றியதென குறிப்பிடலாம். டானியல் இனங்கண்ட மிக முக்கியமான சமூக பிரச்சினை தீண்டாமையும், சாதிப்பிரிவினைகளுமேயாகும். எனினும் இலங்கையில் தோன்றிய இடதுசாரி இயக்கங்களுடனான தொடர்பும் அவ்வியக்கங்களுடனான செயற்பாடுகளும் டானியலை சமூக பிரக்ஞை மிக்கப் போராளியாகவும் மாற்றியது. டானியலை இலக்கியபடைப்பாளியாகப் பார்ப்பதைவிட ஒரு எழுத்துப் போராளியாகவே பார்க்க வேண்டும்.

டானியலின் படைப்புகள் ஏராளம். 1948ல் அவர் எழுதிய "பழிக்குப்பழி" என்ற சிறுகதையினூடாக அவரது எழுத்து ஆரம்பிக்கிறது. ஆரம்பக் காலப்பகுதியில் சிறுகதைகளையே அதிகமாக டானியல் எழுதியுள்ளார். குறிப் பாக ஈழமுரசு, சரஸ்வதி, தாயகம், தாமரை முதலிய சஞ்சிகைகளிலும், ஈழகேசரி, தேசாபிமானி, வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் அவரது சிறுகதைகள் வெளியாகின. *1963ல்* 'டானியல் கதைகள்' எனும் தலைப்பிலான முதலாவது சிறுகதைத் தொகுப்பும், *1975ல்* 'உலகங்கள் வெல்லப்படுகின்றன' என்னும் இரண்டாவது தொகுதியும் வெளியாகின. டானியல் ஏறத்தாழ *120 – 150* வரையிலான சிறுகதைகள் படைத்திருப்பதாக அறிய முடிகின்றது.

பூமரங்கள் *(1984)*, கே.டானியல் குறு நாவல்கள் (முருங்கையிலைக்கஞ்சி, மையக் குறி, இருளின் கதிர்கள் - *1989*) ஆகிய குறு நாவல்களும் வெளிவந்துள்ளன. டானியல் எழுதிய முதலாவது நாவல் 'நெடுந் தூரம்' *(1961)* என்பதாகும். இதனைத் தொடர்ந்து தான் பஞ்சமர் *(1972)*, போராளிகள் காத்திருக்கின்றனர் *(1975)*, கோவிந்தன் *(1982)*, அடிமைகள் *(1984)*, கானல் *(1986)*, தண்ணீர் *(1987)*, பஞ்சகோணங்கள் *(1993)* ஆகிய நாவல்கள் வெளிவந்தன. இந்நாவல்களில் முக்கியமான நாவலாக கருதப்படுவது பஞ்சமராகும். இக்கட்டுரையானது 'பஞ்சமர்' தொடர்பான ஒரு மறுவாசிப்பாக அமைகிறது.

"பஞ்சமர் நாவலில் நுழைவதற்கு முன்" என்று ஆசிரியர் சில வாசிப்பு வரையறைகளையும் நாவல் எழுதுவதற்கான பின்னணி குறிப்புக்களையும் தருகிறார்.

"நிலவுடைமை ஆதிக்கத்தின் மேல் கட்டப்பட்ட இந்தச் சாதிமுறையை அகற்றுதல், அதைப் பாதுகாத்து நிற்கும் அரசு இயந்திரத்தை

மாற்றுதல், சகல ஆதிபத்திய சிந்தனை களையும் சாடி அழித்தல் ஆகியவைகளுக்கு இலக்கியத்தைப் பயன்படுத்தல்"

"இந்த மக்கள் எல்லோரும் வர்க்க அடிப் படையில் ஒன்றுபட்டு நிமிர்ந்து நின்று, நில ஆதிக்கக்காரர்களால் சுமத்தி வைக்கப்பட்டி ருக்கும் நுகத்தடியை உடைத்தெறிய வேண் டும் என்ற எனது வேட்கை இந்தநாவலுக் கூடாகப் பீறிட்டு நிற்கிறது என்பதை இதைப் படிக்கும் போது உணர்வீர்கள்"

'பஞ்சமர்' என்று டானியல் அடையாளப் படுத்துவது நளவர், பள்ளர், வண்ணான், அம்பட்டன், பறையர் முதலிய சாதிகளாகக் குறிப்பிடப்படுபவர்களேயாகும். இந்நாவலில் டானியல் முன்னிலைப்படுத்துவதும் இச்சாதி யினரின் விடுதலை உணர்வையே யாகும். டானியல் ஒரு "தலித் இலக்கிய வாதி" என்று அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் பஞ்சமர் நாவலை அவர் தலித் இலக்கியம் என்ற அடிப்படையில் எழுதவில்லை. அவரது குரல் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவே ஒலித்தது என்றே குறிப்பிடலாம்.

யாழ்ப்பாண சமூகத்தில் உயர்சாதி வேளா ளர்களாகக் கருதப்படுபவர்கள் நிலவுடைமை யாளர்களாக விளங்கியதோடு, அந்நிலத்தில் தமது அதிகாரத்திற்குக் கீழ் ஏனைய சாதி யினரை ஒடுக்கி அடிமைகளாக வேலை வாங்குவதையும் பிரதான செயற்பாடாகக் கொண்டிருந்தனர். உண்மையில் பஞ்சமர் என்று சொல்லப்படுபவர்கள் அனைவரும் இந்நிலச் சொந்தக்காரர்களின் நிலங்களில் அடிமைகளாக இருந்து தொழில் புரியும் கூலிகளாகவே இருந்துவந்துள்ளனர். யாழ்ப் பாணத்தில் ஆதிக்கச்சாதியினர் அடிமை - குடி மைகள் என்ற முறையில் "கோவியர்கள்" என்றழைக்கப்படுகின்ற சாதியினரை தங்களது வீடுகளில் வேலைக்காக அமர்த்தியிருந்தனர். இந்நாவலில் வருகின்ற வேலுப்பிள்ளை கமக் காரர், சண்முகம்பிள்ளை முதலாளி, சிறாப்பர் போன்றோர் தமது வீடுகளில் இச்சாதியினரை வேலைக்கு வைத்திருந்ததோடு மேற்கூறிய சாதியினரை அடிமைக் குடிமைகளாகக் கொண் டிருக்காத நிலையைத் தங்களது கௌரவ குறைச்சலாகவே கருதினர்.

"சிறைக்குட்டிகள்" என்றழைக்கப்படுகின்ற இந்த "கோவியர்கள்" உயர்சாதியினரைப் பொருத்த வரையில் பஞ்சமர் சாதியினராகக் கைக்கொள்ளப்படவில்லை. இது உயர்சாதியி னரின் அரசியல் தந்ரோபாயமாக கூட இருக் கலாம். தங்களது வீடுகளில் வேலை செய் பவர்களைப் பஞ்சமராக அல்லது தீண்டத் தகாதவர்களாகச் சொல்லிக் கொள்வது அவர் களுக்கு இன்னுமொரு கௌரவ குறைச்சலாக இருந்திருக்கும் போலும். ஆனால் உயர்சாதி யினரைப் பொருத்த வரையில் அவர்களே துரும்புச்சீட்டு. பஞ்சமர் என்றழைக்கப்படு கின்ற ஏனைய ஒடுக்கப்பட்ட மக்களை, கோவியர்களை வைத்தே வழிநடத்துவது மட்டுமல்லாமல் அவர்களுக் கெல்லாம் தலைமைச் சாதியாகக் கோவியர்களை உருவ கப்படுத்துகின்றார்கள் அவர்கள். பஞ்சமர் களுக்குத் தலைமைக் குடியாக இருந்து வழி நடத்த வேண்டும்.

இவர்களைத் தொழில் அடிப்படையிலும் வகைப்படுத்தி வழிநடத்துகின்றார்கள் ஆதிக் கச்சாதியினர். பள்ளர், பறையர், நளவர் ஆகியோர் அன்றாடம் இவர்களின் நிலங் களில் உழவுத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இழிவுச்சடங்குகளின் போது கட்டைத்தறித் தல் செயற்பாட்டில் பள்ளர்கள் ஈடுபடவேண் டும். சாம்பன்- மேளமடித்தல், பரியாரி- பொரிப்பெட்டி எடுத்துச் செல்லல், ஐயன்- கிருத்தியம் செய்தல், நளவர்- இளனி பிடுங் குதலிலும் ஈடுபடுவர், கட்டாடியர்- இழவு வீடுகளில் வெள்ளைக் கட்டுதல் போன்ற தொழில்களில் இச்சாதியினர் ஈடுபடுகின் றனர். பஞ்சமரில் டானியல் இந்தச் சாதி ரீதியான தொழில் அடுக்கமைவுகளை மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

பஞ்சமர் நாவலில் காட்டும் இன்னொரு முக்கியமான சமூகப் பின்னணிதான்; நிலவு டைமையும் அந்நிலவுடைமை ஆதிக்கமும். நிலங்கள் முழுதும் உயர்சாதி ஆதிக்கக்காரர் களிடமே இருந்துள்ளது. அவர்களது நிலத் தில் கூலிகளாக வேலைசெய்யும் ஏனைய சாதியினரை குறைந்த கூலி வழங்கியும் பல அதிகாரத்துவ முறையில் வேலைவாங்கியும் தங்களது அதிகாரத்தைத் தக்கவைத்துள்ளனர். ஆண்களை உழவுத்தொழிலில் அடக்கி யொடுக்குவது போலவே. பஞ்சமர் சாதிப் பெண்களைக் கிடுகு பின்னுதல் முதலிய தொழிலில் குறைந்த கூலிகொடுத்து வேலை வாங்குகின்றனர். ஆகவே பஞ்சமர்கள் தங் களது உழைப்புக்கேற்ற கூலியை ஒரு போதும் பெற்றவர்களாயில்லை.

பஞ்சமர்கள் இரண்டு வகையான ஒடுக்கு தலுக்குட்பட்டுள்ளனர். தொழில் ரீதியான அடக்குமுறைகளுடன், சாதிய ரீதியான ஒடுக் குமுறை இந்நாவலைப் பொருத்த வரையில் இரண்டும் சமமாகவே எடுத்துச் செல்லப்படு கின்றது. எனினும் தொழில் ரீதி யாகப் பஞ் சமர் உட்படும் ஒடுக்கு முறை களைவிடச் சாதிய ஒடுக்கு முறையை அதிகமாக அனுப விப்பதற்கான அடையாளமாகக் கைகொள்ளப் படல் ஆகும். பொருளாதார அடிப்படையில் மிகவும் தாழ்நிலையில் உள்ள மக்களை மேலும் ஒடுக்குவதற்கு அவர்களை மீள எழா மல் செய்வதற்குச் சாதிய அடையாளமே பிரதான கருவியாகக் கையாளப்படுகின்றமை மிகத் தெளிவாக வெளிப்படுகின்றது.

### (அ) ஒடுக்குமுறைகளும் எதிர்ப்புகளும்

இந்தச் சூழ்நிலையில் தான் பஞ்சமர் சாதிய ஒடுக்குமுறைகளையும் அவற்றுக்கெதிரான போராட்டங்களையும் முன்னிறுத்துகின்றது. இந் நாவலில் தாழ்த்தப்பட்டவர்களின் போராட் டத்தின் எழுச்சி எவ்வளவு தூரம் காட்டப் பட்டுள்ளதோ அதேயளவு உயர்சாதியினரின் ஒடுக்குமுறைகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சாதியம் என்ற அடையாளத்தை வைத்துக் கொண்டு அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத் திலும் ஒடுக்குவதையும் புறந்தள்ளுவதையும் வேலுப்பிள்ளை, மணியக்காரர், முதலியார் ஆகிய பாத்திரங்களுக்கூடாக வெளிப்படுகின்றது.

இந்நாவலில் வரும் வேலுப்பிள்ளை, மணியக் காரர், முதலியார் ஆகியோர் உயர் சாதியின ராக விளங்குவதோடு பொருளாதார அடிப் படையில் உயர் வர்க்கத்தினராகவும் விளங்கு கின்றனர். தமது சாதிய ஆதிக்கத்தை தக்க வைத்துக் கொள்வதற்காகப் பல்வேறு எதேச் சதிகார செயல்களில் ஈடுபடுகின்றனர். சிறி சேனா என்ற சிங்கள இளைஞன் இவர் களது சாதியில் ஒரு பெண்ணைக் காதலித் தமைக் காக அவனை கொல்கின்றனர்.

- கமலாம்பிகையின் மகள் மாம் பழத் தியை காதலித்ததாகக் கற்கண்டனை ஆள் வைத்து அடித்து கொன்றமை
- தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் தாவணி போடுவதற்குத் தடைவிதித்தல்.
- வேலுப்பிள்ளையின் மனைவியின் மர ணத்திற்குத் தாழ்த்தப்பட்ட சாதியினர் செல்லாமையினால் அவரது நிலங்களில் குடியிருந்த 300 குடும்பங்களை அந்நிலங் களிலிருந்து வெளியேற்றியமை.
- மாணிக்கத்தின் கள்ளுக்கொட்டிலை ஆள் வைத்து தீயிட்டு கொழுத்தி விடல்.
- குமாரசேனனை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றமை.
- தாழ்த்தப்பட்ட சாதியினர் பக்கமிருந்து போராடியமையால் ஐயாண்ணன் மீது தாக்குதல் நடத்தியமை.
- தாழ்த்தப்பட்டவர்களைப் பள்ளிக் கூடங்களில் அனுமதிக்காதது மட்டுமல்லாது, அவர்களுக் காக இயங்கிய பள்ளிக் கூடத்தை எரித்தனர்.
- ஒடுக்குமுறைக்கெதிராகப் போராட துணி யும் பஞ்சமர் சாதியினரை காட்டு மிராண் டித்தனமாகச் சுட்டுத் தள்ளுதல்.
- இவ்வாறு உயர்சாதியினரின் ஒடுக்கு முறை களுக்குப் பல ஆதாரங்களைக் காட்ட லாம். மணியக்காரர் தனது மகன் சண் முகம்பிள்ளை பிறந்ததும் அவனது மனை விக்குப் பால் இல்லாமையால் பள்ளர் சாதியைச் சேர்ந்த 'பொன்னி' என்ற பெண் ணைக் குழந்தைக்குப் பால் கொடுக்கும் வேலைக்கு வைத்திருந்தான்.
- அவள் வந்ததும் அவளது முலை களை நீரூற்றி கழுவிக் கொள்ள வேண்டும்.
- சம்பளமாக மரவள்ளிக்கிழங்கும், காய் பிஞ் சும், மூன்று கொத்து அரிசியும், குரக் கனும் வழங்கினான்.
- இவ்வாறு மூன்று வருடங்கள் தொடர்ந்து பால் கொடுத்தாள் பொன்னி

பொன்னியாலேயே வளர்க்கப்பட்ட சண் முகப்பிள்ளையாலேயே பொன்னியின் மகன் கந்தன் இளந்தாரி திருவிழாவில் சாதிய வெறியால் தாக்கப்பட்டுக் கொல்லப்படு கின்றான். இவ்விடம் உருக்கும் காட்சியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

ஐயாண்ணன், குமரேசன், சண்முகம் ஆகி யோருக்கிடையே இடம்பெறும் உரையாட லில் சாதியால் தாக்கப்பட்ட, கொலை செய்யப்பட்ட, எரிக்கப்பட்ட, சுடப்பட்டவர் களின் நீண்ட விபரமொன்று தரப்படு கின்றது. (பக் 174, 175)

### (ஆ) எதிர்ப்புணர்வுகள்

உயர்சாதியினரின் இவ்வாறான ஒடுக்கு முறைகளுக்கெதிராகவே பஞ்சமர் சாதியினர் தமது எதிர்ப்புகளையும், போராட்டங்களை யும் நடாத்துகின்றனர். இந்த எதிர்ப்புகள் தனிச்

சாதியினரால் மேற்கொள்ளப்படுவதல்ல. பல வகையில் இவர்கள் மேற் கொள்ளும் போராட்டங்கள் தனித்துவமுடையதாகின்றது.

உயர் சாதியினர் பஞ்சமர்களை அடக்கி யாளுவதற்கும் அவர்களைப் பிரித்தாளுவதற்கும் கோவியர்களே துருப்புச்சீட்டாகப் பயன் படுத்தப்படுகின்றனர். ஆனால் சாதிய அதி காரத்திற்கெதிராகவும் அதனை தகர்ப்பதற்கும் பஞ்சமர்களின் போராட்டத்திற்குக் கோவியர் களே முன்னிலை வகிக்கின்றனர். இது மிக முக்கியமான விடயமாகும். வேலுப் பிள்ளை யால் கரவெட்டிக்குச் சின்னான் தொண்டு, துப்பரவு பண்ண அனுப்ப பணித்த போது அவன் அதை மறுக்கின்றான். 'சவம் அள்ளும்' தொழிலை கோவியர்களைத் தலை மையாக வைத்தே பஞ்சமர்கள் செய்ய வேண்டும். ஆனால் இங்கு சின்னான் மறுப்பதைப் போலவே கிட்டிணனும் "குடிமை கோவிச்சியாக" கருதப்படும் சின்னாச்சியும் மறுத்து எதிர்க்கின்றார்கள். மேலும் இந்த அதிகார தகர்ப்புக்கான கூட்டங்கள், சந்திப்புகள் கிட்டிணன் வீட்டிலேயே நடத்தப்படுவதோடு அதி கார வர்க்கத்தின் கட்டுப்பாடுகளைத் தகர்ப் பதற்கு மிகக் கவனமான திட்டம் தீட்டப் படுவதையும் காணலாம். ஒரு முறை சின் னாச்சி கூடத் தனது எதிர்ப்பைத் தெரிவிப் பதற்காகக் கொடுவாளை எடுத்துக் கொள் வதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது அம்சம் இந்நாவலில் வரு கின்ற ஐயாண்ணன் வேளாளர் சாதியைச் சேர்ந்தவர். இவர்தான் தாழ்த்தப்பட்ட சாதியி னரின் போராட்டங்களைத் திட்டமிடுவதும், ஆலோசனை வழங்குவதும் செயற்பாடுகளில் முன்னிலை வகிப்பதுமாக விளங்குகிறார். ஐயாண்ணன் சாதிய வேறுபாடுகளைக் களைந்து வாழுகின்ற முற்போக்கான பாத்திரமாக விளங் குவதுடன் மக்களை முறையான பாதையில் வழிநடத்திச் செல்பவராகவும் விளங்குகிறார். ஐயாண்ணன் எனும் பாத்திரத்தினூடாகப் பல விடயங்களை ஆசிரியர் முன்னிறுத்துகிறார். அதில் சாதிய ஒடுக்குமுறைக்கெதிராகச் சாதி பேதம் பாராமல் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை முக்கியமானதாகும். அடுத் ததாக ஐயாண்ணனை இந்நாவலின் முக்கியப் பாத்திரமாக ஆசிரியர் முன்னிறுத்துவதனூடாக அவர் தாழ்த்தப்பட்டவர்களின் சாதிய அடை யாளாத்தை முதன்மைப்படுத் தாமல் அதனை வர்க்கப்போராட்டமாக முன் னெடுப்பது "நீர் சொல்றதும் சரிதான் கிட்டிணு! ஒரு வர்க் கத்தைத் துலைக்கிறதுக்காகக் கீழ கிடந்த இல் லாதவர்களின் வர்க்கம் சண்டை பிடிக்கத் தான் வேணும் என்ற அரசியலை உணர்ந் தால் நீர் எண்டாலும் சரி, அல்லது வேற ஆரெண்டா லுஞ் சரி, காட்டிக்குடுக்காயினம்; அதுக்காகத் தான் அரசியலைச் சரியாக உணர வேண்டு மெண்டு நாங்கள் சொல்லுறம்!" *(பக் 103)*

இந்நாவலில் வரும் இவ்வாறான அர சியல் பேசும் உரையாடல்கள் பல. இந்த இரண்டு முரண்பட்ட பிரிவினருக்கிடையில் இடம்பெறும் போராட்டங்களின் புனைவாக இந்நாவலை வாசிக்கும் போது வேளாள உயர் சாதியின் அதிகாரத்திற்கெதிராக மிகப் பெரும் எதிர்ப்பையும், தாழ்த்தப்பட்டவர்களின் அதி காரத்தை நிலைப்படுத்தவும் அவர்களை ஒன்று திரட்டும் சிந்தனையை ஆசிரியரிடம் காண முடிகிறது.

இந்நாவலில் வரும் மிகமுக்கியமான கட் டங்கள் அவர்களது போராட்டங்களும், அவர் கள் வென்றவைகளும், ஒடுக்குதல்களை மீறியும் தொடர்ந்து அவர்கள் பயணிப்பது.

- தேனீர்க் கடை பிரவேசம்.
- உயர் சாதியினரால் தடுக்கப்பட்டு வைத் திருந்த பாதையூடாக அவர்களது பிண ஊர்வலத்தை நடத்துதல்.
- பாடசாலையில் "சாதிவெறியன் பண் டிதர், சின்னத்தம்பியே நீ ஒரு வேடன்" போன்ற வசனங்களை எழுதி எதிர்ப்பை வெளியி டுதல்.
- குமரேசனின் சவ ஊர்வலத்தில் பலரைச் சுட்டுக்கொன்ற பொலிஸின் துப் பாக்கியை "மகேஸ்வரி" என்ற பெண் பிடித்து "விடடா பரதேசி" என்று பிடுங்கி எதிர்ப்பை தெரிவித்தல்.
- சின்னாச்சி வைராக்கியத்துடன் செயற்படும் நிலை.
- பல தடவைகள் பஞ்சமர்கள் தாக்கப்பட்டு, பலர் உயிரிழந்த போதும் தொடர்ந்து போராட தூண்டிய உணர்வுகள்.
- உயர் சாதியினரின் நிலங்களில் கூலி வேலைச் செய்வதைப் புறக்கணித்தல், அவர் களது வீட்டுச் சவத்தொழிலை மறுத்தல்.
- ஆலய பிரவேசம்.

இவ்வாறு பல வழிவகைகளில் முன்னேறு கின்றனர்.

உயர்சாதியினரின் செயற்பாடுகளுக்கு ஆதர வாக அவர்களின் தேசவழமைச்சட்டமும் பொலிஸாரின் ஆதரவும் உறுதுணையாய் அமைகின்றன. உயர் சாதியினர் தாழ்த்தப் பட்டவர்களுக்குள்ளே பிரித்தாளும் தந்தி ரத்தை கையாள்வதும் (கோவியர்களைப் பிரித்தாளுதல்) பஞ்சமர்களின் தொழில் எதிர்ப்பிற்கு எதிராகச் சிங்களவர்களைத் தொழிலுக்கமர்த்தி (தேங்காய் பிடுங்குதல், ஓலை வெட்டுதல், உழவு வேலை, கூலி வேலை) பின்பு அவர்களும் அதிகார வர்க் கத்திற் கெதிராக எதிர்ப்பை தெரிவித்து வராவிட்டமையால், மீண்டும் பஞ்சமர்களிடம் தமிழ் தேசியம் பேசுவதையும் அவர்களது அரசியல் தந்திரோபாயமாகக் கொண் டுள்ளனர். (எங்கட பல்லின்ர ஊத்தையை எடுத்து சிங் களவனை. மணக்க குடுக்கக் கூடாதெண்டு தான் பார்க்கிறம் - பழமொழி)

இவ்வகையான அடக்குமுறைகளையும் அதி காரத்துவத்தையும் தகர்த்தெறிவதற்கே ஆசிரியர் பஞ்சமர்களை பயன்படுத்துகிறார். ஒரு வகை யில் பார்க்கும் போது நிலமுடைய வேளா ளர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக அவர்களது நிலங்களில் தொழில் செய்யும் பல்வேறுப் பட்ட சாதியினரை வர்க்க அடிப்படையில் ஒன்று திரட்டும் பணியைச் செய்கிறார் டானியல்.

### (இ) தலித்தியமும் பஞ்சமரும்

டானியலின் அனைத்து படைப்புகளை யும் "தலித்திய படைப்புகள்" என்று அடை யாளப்படுத்துவதுண்டு. ஆனால் "பஞ்சமர்" நாவலை அந்த அடையாளத்துக்குள் வைத்துப் பார்க்க முடியுமா? என்பது ஆரா யப்பட வேண்டியது. உண்மையில் பஞ்சமர் எழுந்த காலப்பின்னணியும், அதன் அரசியல் பின் ணணியும் வேறுப்பட்டதாகவே அமைகிறது. யாழ்ப்பாணத்தில் 1960கள் தொடக்கம் எழு பதுகள் வரை நடந்த தீண்டாமையொழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டக் காலப் பகுதியே பஞ்சமர் நாவல் தோன்றிய காலப் பின்னணியாகும். டானியல் இடதுசாரி இயக் கச் சிந்தனை கொண்டவராகவும் யாழ்ப் பாணத்தில் இயங்கிய தோழர். சண்முக தாசனின் (சீனச் சார்பு) கம்யூனிஸ்ட் கட்சி யின் உறுப்பினராகவும், சாதிய ஒடுக்கு முறைக் கெதிரான போராட்டங்களை முன் னின்று நடத்திய போராளியாகவும், தலைவ ராகவும் செயற்பட்டிருக்கின்றார். இவ்வாறான பின்னணியிலேயே நாவலும் தோற்றம் பெறுகிறது.

பஞ்சமர் நாவலை டானியல் தனியே தலித் இலக்கியப்படைப்பாக மட்டும் உரு வாக்கவில்லை. அதனை நிலமுடைய வேளா ளர்களின் ஆதிக்கத்தின் கீழ் பிழைப்பு நடாத் துகின்ற ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைப் போராட்டமாகவே படைத்துள்ளார். நாவலின் பல இடங்களில் அவர் வர்க்க ரீதியான விடு தலையைப் பற்றியே பேசுகிறார். இன்னொரு வகையில் டானியல் பஞ்சமர் எழுதும் காலத் தில் தன்னையொரு தலித்தாக அடையாளப் படுத்திக் கொண்டு எழுதவில்லை. ஒடுக்கப் பட்டவர்களின் சமூகத்திலிருந்து அவ்வொடுக்கு முறைகளுக்குட்பட்டவராக நின்றே பஞ்ச மரை படைத்துள்ளார்.

தலித் மற்றும் தலித்தியம் என்ற சொல் லாடல்கள் பிற்காலங்களிலேயே தமிழ்ச் சூழலில் அதிகம் பேசப்படுகின்றன. பஞ்ச மரைப் பொருத்தவரையில் இவ்வாறான அடையாளத்துக்கு அப்பால் தாழ்த்தப்பட்ட வர்கள் எதிர்கொள்கின்ற நிலம், உற்பத்தி, ஊதியம் என்ற அடிப்படை பிரச்சினையில் இருந்து கொண்டே சாதிய ஒடுக்குமுறை யைப் பேசுகின்றது. இதற்கான அடிப்படை களை நிலவுடைமை சமூகம் வழங்கியுள்ள தெனக் குறிப்பிடலாம்.

"நிலப்பிரபுத்துவத்துக்குப் பிந்திய அந்நியர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக நிலங்களுக் கான தோம்புகள், உறுதிகள் உருவாக்கத்தின் போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப் படவில்லை. அவர்கள் குடியிருந்த நிலங் களுக்கும் விவசாய உற்பத்தி நிலங்களுக்கும் உயர்சாதி வேளாளர்களே சொந்தக்காரர்களா கின்றனர். அக்காலத்தில் அரச அதிகாரிக ளான உடையார், மணியக்காரர், விதானை, நொத்தாரிசு, முதலியார், பிறப்பு இறப்பு பதிவாளர் போன்ற பதவிகளும் ஏனைய சிறப்புப் பட்டங்களும் உயர்சாதி வேளாளர் களுக்கே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும். ஆனால் நிலத்தின் ஆதிக்கம் தொடர்ந்தும் அவர்களின் பக்கமே இருந்து வந்தது. உறுதிகளுக்குள் அகப்படாத முடிக் குரிய அல்லது அரசுக்குரிய தரிசு நிலங் களும் அவற்றின் பிற்காலப் பயன்பாடு கருதி படிப்படியாக மேற்கூறிய அரச அதிகாரிகளினாலும் அவர்களது சந்ததியின ராலும் அபகரிக்கப்பட்டுள்ளமையைக் காண

முடியும்." (வெகுஜனன், இராவணா இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் பக் 61, 62, 2007)

இவ்வாறான புறக்கணிப்புக்குள்ளாகியவர்களே பஞ்சமர்களும் தாழ்த்தப்பட்ட சாதியினரும். நிலங்களுக்குச் சொந்தக்காரர்களான உயர்சாதியினர், நிலமற்றவர்களை மேலெழும்பவிடாமல் அடக்கியாள்வதற்கான கருவியாகவே சாதியத்தைக் கையாளுகின்றனர். பஞ்சமர் நாவலில் இவ்விடயம் பல பிரச்சினைகளின் குவியப்படுத்தப்பட்ட தன்மையைக் கொண்டுள்ளதேயொழிய தனித்து தலித்திய படைப்பாக உருவாகவில்லை. உண்மையில் பிற்கால இலக்கியச் சூழலில் உருவான தலித் அடையாளத்துடன் பஞ்சமரை பார்ப்பது அந்நாவல் மீதான தலித்திய வாசிப்பாகவே அமைகிறது.

### (ஈ) டானியலின் நாவல்கள் மீதான விமர்சனங்கள்

கே.டானியலின் நாவல்கள் மீதான விமர்சனங்களில் முனைப்பான கருத்தாக அமைவது அவரது நாவல்களில் உயர்சாதி பெண்கள் பற்றிய சித்திரிப்பு. உயர்சாதி பெண்கள் தாழ்த்தப்பட்ட சாதி ஆண்களுடன் வைத்துக் கொள்ளும் பாலியல் தொடர்புகளை அவர் வெளிப்படுத்திப் பேசுவதாகும். இது பற்றி பலர் விமர்சித்துள்ளனர் என்பதை விட இதுவே டானியல் படைப்புகள் மீதான முனைப்பான விமர்சனமாகவும் பேசப்படுகிறது. கலாநிதி நா.சுப்பிரமணியன், கலாநிதி ந.இரவீந்திரன் ஆகியோர் டானியல் பற்றி பல்வேறு கோணங்களில் விமர்சித்திருந்தாலும் அவர்களது பார்வையிலும் இக் கருத்து பற்றிய விவாதம் தவிர்க்க முடியாத தாகவே அமைந்துள்ளது.

மேற்கூறிய இவ்விமர்சனம் ஏற்றுக் கொள்ளக்கூடியதேயாயினும் இப்பார்வையின் அழுத்தம் நாவலின் முனைப்பான பல விடயங்களை புறக்கணிக்கச் செய்கிறது. டானியலின் நாவல் பற்றிய கலந்துரையாடலில் இதுவே பிரதான பேசுபொருளாகவும் ஆகிவிடும் துரதிஸ்டமும் நிலவுகிறது. டானியலின் பஞ்சகோணங்கள் பற்றிய ஞானியின் கருத்தை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும்.

"இந்த கேள்விகள் நாவலின் முன்னுரைகளில் விவாதிக்கப்படுகின்றன. வர்க்கச் சிக்கலும் சாதிய சிக்கலும் எதிர் திசைகளில் இயங்குவது சொல்லப்படுகிறது. டானியல் வர்க்கப் போராட்டத்தில் நம்பிக்கையுடையவர். தமிழர் தேசிய இன விடுதலையில் சாதிய சிக்கலை எப்படி வர்க்கப் போராட்டத்தின் பகுதியாக்குவது என்ற முறையில் சிக்கலை விவாதிக்கிறார்."

(தமிழ் நாவல்களில் - தேடலும் திரட்டலும்)

பஞ்சகோணங்களில் மட்டுமல்ல அதற்கு முன்பும் பஞ்சமரிலும் அவர் வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே சாதியபோராட்டத்தைப் பார்க்கிறார். சாதிய போராட்டத்திற்கு அழுத்தம் கொடுக்கிறார். அவ்வா றான சூழ்நிலையை அக்காலச் சமூகச் சூழல் உருவாக்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

டானியல் மீதான லெனின் மதிவானத்தின் விமர்சனமும் இங்கு நோக்கப்பட வேண்டிய ஒன்றுதான். அவரது படைப்பு-பதிவு- பிரசாரம் என்ற கட்டுரையில் "டானியல் ஒரு தலித்தாக இருந்தமையால் யாழ்ப்பாணத் தலித் மக்களின் வாழ்வியல் அனுபவங்களை...." என்று தொடரும் கருத்துக்களில் டானியலை தலித்தாக அடையாளப்படுத்துவதே அவரைப் புறந்தள்ளும் சொல்லாடல் தான். அதே கட்டுரையில் இன்னொரு இடத்தில்

".....சிங்களவர்களுடன் ஐக்கியப்படுத்தல் என்பதனை அழகாய், படம் பிடித்த டானியலின் எழுத்துக்கள் மறுபக்கமான தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுதல் என்ற பார்வையை முன்வைக்கத் தவறிவிடுகின்றன."

சிங்களவர்களுடன் ஐக்கியப்படுத்தல் என்ற வகையில் முடிவுகளை முன்வைத்த ஒரு படைப்பாளி இன ஒடுக்கு முறைக்கெதிராக சிங்களவர்களுடன் போராடுதல் என்ற கருத்தை முன்வைப்பது கருத்தியல் ரீதியாக சாத்திய மற்றதாகவேபடுகிறது. இவ்வாறான முடிவுகளை முன்வைப்பதும் வர்க்கப் பார்வையிலிருந்து தேசியவாதத்திற்குள் முடிவுகளைத் தேடுவது போன்றதாகிவிடுவதாய்ப் படுகிறது. ஆகவே லெனின் மதிவானத்தின் இக்கருத்து டானியலின் படைப்புச் சிந்தனையைக் கூர்மையாக வெளிப்படுத்துவதாய் அமைய வில்லை.

இவையெல்லாவற்றையும் விட அ.மார்க்ஸ் பஞ்சமரின் முன்னுரையில் "உயர்சாதி பெண்

களாயினும் அவர்களும் இந்த ஆணாதிக்கச் சமூகத்தில் குடும்பத்திற்குள் பாலியல் ஒடுக்கு முறைகளுக்கு ஆட்பட்டவர்களே" என்று கூறு வதானது வர்க்கம், சாதி, என்பதைக் கடந்து வாசகரை விளிம்பு நிலைப்பிரச்சினைகளுக் குள் நின்று வாசிக்க வைப்பதோடு 'பஞ்சமர்' நாவலை மேலும் சிதைத்து வாசிக்க வைக் கின்றது.

உதவியவை

1.டானியல்.கே, பஞ்சமர், அலைகள் வெளியீட் டகம், 1994.
2.வெகுஜனன், இராவணா, இலங்கையில் சாதி யமும் அதற்கெதிரான போராட்டங்களும், சவுத் விஸன், 2007.
3.திருநாவுக்கரசு.செ, டானியலின் எழுத்துக்கள், 2004
4.கே.டானியல் நினைவுமலர், கே.டானி யல் நினைவு விழாக் குழுவினர், 2003
5.அயலகத் தமிழர் வாழ்வும் இலக்கி யமும், செ.ஆனந்தம்மாள், செபஸ்தியான், தமிழாய்வுத் துறை துயவளனார் தன்னாட்சிக் கல்லூரி, 2007.
6.லெனின் மதிவானம், மலையகம் தேசியம், சர்வதேசம், குமரன் புத்தக இல்லம், 2010.
7.இரவீந்திரன்.ந, டானியலின் படைப்புகள், முற் போக்கு இலக்கியத்தில் புனைக் கதைச் சுவடுகள்.
8.ஞானி, கே.டானியல், பஞ்ச கோணங்கள், தமிழ் நாவல்களில் தேடலும் திரட்டலும்
9.சுப்பிரமணியன்.நா, கே.டானியலின் நாவல்கள் - ஒரு மதிப்பீடு, ஆய்வுகள் - பார்வைகள் - பதிவுகள்.
10.வேல்சாமி.பொ, டானியல் எனும் கலை ஞன், பஞ்சகோணங்கள் முன்னுரை
11.மார்க்ஸ்.அ, பஞ்சமர் - முன்னுரை

# ஒற்றைத் திகிரி

மூல வர்ணங்களிலிருந்து
ஏழ் வர்ணம் திரித்து கொடி உயர்த்தி கோஷமிட்டு
கல்வியை கபளீகரம் செய்து கடைத்தெருவில் விற்றபோதே
மண்டியிட்டு வற்றியது பவானி என பாய்ந்த நதி.


அந்த ஒற்றைத் திகிரியை
பூடகமாய் தூற்றி – நகர்முரசு சாற்றியதால்
நேத்திரங்கள் சிவந்து ரௌத்திரத்தால் கொப்பளித்தன
தேர்தல் பரப்புரைகளில்...

ஆர்ப்பாட்டங்களில் குளிர் காய்ந்து
ஊசலாடுற்றன ஊவாவில் கட்சிகள்

விமர்சனச் சாடலும் குற்றப் பத்திரிக்கையும்
மெத்தனமாய் நிற்க
இனவாதம் பேசியதை மறந்து
உன்மத்தப்பூக்களாய் தலை குனிகையில்...

மதுவில் மயங்கி
சோற்றுக்காய் சோரம்போய்
பதவிக்காய் பல்ட்டியடித்து...

வேதாளங்களுக்காய் முருங்கை மரங்கள்
வரிசையில் முளைக்கின்றன ...



சி. சாரதாம்பாள்

*அது மீண்டும் உயிர்பெற்றுவிட்டால், சுற்றியிருப்பவர்கள் இடம்பெயர்வது தான் ஒரேவழி. அப்படி நேர்ந்தால் அவர்கள் எங்கே போவது. சிறுகச்சிறுகச் சேகரித்துச் சொந்தமாக வாங்கிய குடியிருப்பு நிலங்களை விட்டு விட்டு எங்கே போவது...*



# காத்திருப்பு

**ஜனப்பிரியன்**

திடீரென்று இப்படி நடக்குமென யாரும் எதிர்பார்க்கவில்லை. ஊரில் எல்லோருக்கும் ஒரு பக்கம் அதிர்ச்சியாகவும், மறு பக்கம் கோபமாகவும் இருந்தது. என்ன ஏது நடக்குமோவென எல்லோர் மனதிலும் கேள்விகள் எழ சூழலில் பதட்டம் ஏற்பட்டது.

கடந்த பல வருடங்களாகக் கைவிடப்பட்டிருந்த அதனைப் புனர்நிர்மாணம் செய்து பாவனைக்குக் கொண்டுவரவுள்ளதாக வதந்திகள் பரவிக்கொண்டிருந்தன. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் செறிந்து வாழும் பகுதி அது. அந்த மயானமும் குடியிருப்புக்களுக்கு மத்தியில் ஊரின் மையப்பகுதியில்தான் இருந்தது. அங்கு குடியிருப்பவர்கள் தினக் கூலிகள், உழைப்பாளிகள், தினமும் வேலைகளுக்குப் போய்வரும் அன்றாடம் காய்ச்சிகள். ஆனால் அந்தக் குடியிருப்புக்களில் உள்ள இளைஞர்கள் சிலர் அக்கிராமத்து இளைஞர்களுடன் இணைந்து சமூக அநீதிக்கு எதிரான போராட்டங்கள் எங்கு நடந்தாலும் அவைகளில் பங்குகொள்பவர்கள். அப்போராட்டங்களுள் சூழல் மாசடைதலுக்கெதிரான போராட்டங்களும் அடங்கும். நாட்டு மக்களுக்கு மாசடையாத நீர். மாசடையாத நிலம், மாசடையாத காற்று வேண்டும் என்று தெருவில் நின்று முழக்கமிடுபவர்கள் தங்களது குடியிருப்புளைத் திரும்பிப் பார்த் ததில் வியப்பில்லை. அவர்களது விழிப் புணர்வு 'சுடலைக் காற்றைச் சுவாசிக்கமாட் டோம்" என்ற விழிப்புணர்வை அந்த மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தி இருந்தது.

அவர்களது குடியிருப்புகளுக்கு மத்தியில் இருக்கும் மயானம் அந்த மக்களின் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் ஒன்று. அவர்களது இயல்பு வாழ்வுக்கும் வேண்டாத ஒன்றுதான். அந்த இடத்தை நேரில் பார்ப்பவர்களுக்குத் தெட்டெனப்புரியும் உண்மை இது.

அது தொடர்ந்து இயங்க ஆரம்பித்தால் அங்கு குடியிருப்பவர்களுக்குத் தொல்லையாகத்தான் இருக்கும். பக்கத்தில் நிம்மதியாக இருக்க முடியாது. ஒரே பிணவாடை காற்றை நிறைத்திருக்கும். உழைத்துக் களைத்து வந்து ஆயாசமாக வீட்டில் ஆறியிருக்கமுடியாது. மாலையில் வந்து உணவைச் சமைத்துப் பசியாற முடியாது.

அது மீண்டும் உயிர்பெற்றுவிட்டால், சுற்றியிருப்பவர்கள் இடம்பெயர்வது தான் ஒரேவழி. அப்படி நேர்ந்தால் அவர்கள் எங்கே போவது. சிறுகச்சிறுகச் சேகரித்துச் சொந்தமாக வாங்கிய குடியிருப்பு நிலங்களை விட்டு விட்டு எங்கே போவது.

அவர்களது நாளாந்த உழைப்பும் வருமானமும் சுற்றியுள்ள தோட்டங்களில்தான் மழை வந்தால் நிலம் சேறும் சகதியுமாகி விடும். சாப்பிடுவது, படுப்பது, கூடிக்களிப்பது எல்லாம் அங்குதான்.

பிரதேசசபை இப்படித் திடுதிப்பென்று முடிவெடுக்குமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. நேற்றையதினம் கல், மண், சீமெந்துப் பொருட்களை டிப்பரில் கொண்டுவந்து பறித்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

இடுகாட்டைச் சுற்றி மதில் கட்டப்போவதாகக் கூறிச் சென்றிருக்கிறார்கள்.

இந்தச் செய்தி ஊரெங்கும் காட்டுத் தீயாகப் பரவியது.

ஏன் எதற்கெனப் புரியாமல் மக்கள் ஏம்பலித்துப்போயிருந்தனர். அதுவும் இத்தனை வருடங்களுக்குப்பிறகு. எல்லோரும் இதை மறந்திருந்த வேளையில் இதனைச் செய்யத் தூண்டியவர்கள் யாரெனத் தெரியவில்லை. கூட்டமாகக் கூடியிருந்தவர்களின் பேச்சில் வெறுப்பும் கோபமும் வெளிப்பட்டது. வேலைக்கும் போகாமல் இவற்றை எப்படியும் தடுத்து விடவேண்டும் என்ற உணர்வுடன் இருந்தார்கள். நாதனைக் கண்டதும் அவர்களிடம் ஒரு நம்பிக்கை உணர்வு வெளிப்பட்டது. அவர்களையறியாமல் மனதில் ஒரு துணிவு பிறந்தது.

"என்ன பூமணியக்கா. என்ன கூடிக் கூடிக் கதைக்கிறியள். ஏதேனும் பிரச்சனையோ..?"

"நான் என்னத்தைச் சொல்லிறது. சனங்கள் எல்லாம் பயந்துபோயிருக்குதுகள்"

"ஏனக்கா.. என்ன நடந்தது..?"

ஆர்வம் மேலெழக் கேட்டான் நாதன்.

பூமணியின் முகத்தில் சோகம் படிந்திருந்தது. கூடியிருந்தவர்களிடமும் பரபரப்பு தெரிந்தது. பூமணி என்ன சொல்லப்போகிறா என அவளைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"சுடலையைத் திருத்தப் போறாங்களாம். மதில் கட்டுறதுக்கு கல்லு, மண் பறிச்சுப் போட்டுப்போறாங்கள்"

தழுதழுத்த குரலில் பூமணி கூறினாள்.

இதைக்கேட்டதும் நாதன் சிறிது தடுமாறிப்போனான். உடனே பேச நா எழவில்லை.

"ஆற்றை ஏற்பாடாம்..."

"எல்லாம் மேற்படியாங்களின்ரை வேலை தான். அவங்களுக்கு பிரதேச சபையும் உதவியாம்"

சிவனொளி தான் ஊகித்ததை அழுத்தமாகக்கூறினான்.

"நாங்கள் இதைவிடக் கூடாதண்ணை. எப்பிடியாவது நிறுத்தவேணும்"

சுந்தரம் ஆவேசமாகக் கூறினான். "நாதன், நேற்று முதல் உன்னைத் தேடினனாங்கள். வவுனியாவுக்குப் போனதாக சித்திரா சொன்னவள்"

"இல்லை. அங்கையொரு ஆர்ப்பாட்டம் நடத்தினவை. அதுதான்"

"ஏன்.. என்ன ஆர்ப்பாட்டம் நாதன்"

"அதண்ணை, கொழும்பிலையிருக்கிற குப்பையளையெல்லாம் கொண்டுவந்து புத்தளத்திலை கொட்டப் போறாங்களாம். அதுக்கு எதிராகத்தான்.."

"எங்கடை கட்சியும் கலந்துகொண்டதே.."

சிவனொளி ஆர்வம் மேலிடக் கேட்டான்.

"ஓமோம். இப்பிடியான விசயங்களுக்கு எங்கடை கட்சி முன்னுக்கு நிக்கும் தானே."

"ஆ... கதைக்கை கதை நாதன். எங்கடை இந்த விசயத்திலையும் அவையின்ரை ஆத ரவு கிடைக்குமே.."

பூமணி ஆதங்கத்துடன் கேட்டாள்.

"எங்களைப்போலை ஏழைபாளைகளுக்காகப் போராட வேறையார் வரப்போகினம்" சுந்தரம் அனுபவச்சூட்டுடன் கூறினார். எங்கடை கிராமத்தை மட்டுமில்லை. ஒடுக்கப்பட்ட மக்களைத் தலைநிமிர வைச்சதிலை கட்சியின்ரை பங்கு பெரிசுதான். நாங்கள் அதிலை இருந்து எப்பவும் புறம்பா இருக்கேல்லை."

கூடியிருந்தவர்களில் பலரும் ஏகோபித்துத் தலையசைத்து அதனை ஆமோதித்துக் கொண்டனர்.

அங்கு ஆண்கள், பெண்கள், வயோதிபர், இளைஞர், சிறுவரெனக் கூடிவிட்டனர். வயதானவர்களின் முகங்களிலும் கோபம் குடிகொண்டிருந்தது. எந்த நேரம் என்ன நடக்கும் என்று இனம்புரியாத திகிலுணர்வு அவர்களைத் தொற்றிக்கொண்டது.

"இவ்வளவு காலமும் விட்டுவிட்டு இப்ப வந்து நிக்கிறாங்கள் திருத்திறதுக்கு"

"நாங்கள் குடியெழும்பி எங்கை போறது."

"எரிஞ்சு அரைகுறையாக இருக்கிற எச்சங்களை நாய்கள் இழுத்துவந்து எங்கடை வீடுகளிலை போடுங்கள். பிறகு நாங்கள் அதை வெட்டித் தாக்கிறது."

"பிணவாடைக்கை எப்பிடி இருக்கிறது."

"அதைச் சுவாசித்து முந்தியும் ஒரு பிள்ளைக்கு வருத்தம் வந்து சாகேல்லையே"

"நாங்கள் குடியெழும்பி எங்கைபோறது"

"பக்கத்திலை குடியிருக்கேலுமே. ஒரே மணமும் புகையும்தான்"

பாதிக்கப்படவர்கள் ஆளுக்காள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

அவர்கள் தாங்கள் அனுபவித்தைதக் கதைகதையாகக் கூறி தமது நிலைப்பாட்டுக்கான நியாயத்தை வலுப்படுத்தி கொண்டனர். அவர்களது வார்த்தைகளில் பட்டறிவு செறிவு கண்டது.

இருட்டத் தொடங்கிவிட்டது.

வாசிகசாலையில் ஒன்றுகூடி இது பற்றிக் கலந்துரையாடினர். முடிவில், மறுநாள், அந்தப் பிரதேச சபைக்குமுன்னால் தங்களுக்கு நியாயம் கோரி ஆர்ப்பாட்டம் செய்வதென்றும், அதிகாரியைச் சந்தித்துக் கோரிக்கையை முன்வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. நாதனின் தலைமையில் சிவனொளி, பூமணி. கதிரேசு, சுந்தரம், சந்திரா, குமார் சகிதம் அதிகாரியை சந்திக்கும் குழுவும் தெரிவாகியது.

***

மறுநாள் புதன்கிழமை.

பிரதேச சபைக்கு வெளியே மக்கள் ஒன்றுகூடியிருந்தனர். கைகளில் பதாகைகளைத் தாங்கியபடி. தங்களது நியாயமான் கோரிக்கைகளை வாசகங்களாக எழுதியிருந்தார்கள். கோசங்களை ஆர்ப்பரித்து முழங்கியபடியிருந்தனர். ஒருமணி நேரத்தில் ஆர்ப்பாட்டம் நிறைவுக்கு வந்தது.

பிரதேச சபைக்கு உள்ளே நிறைய வாகனங்கள் நின்றிருந்தன. உள்ளே தங்கள் தங்கள் அலுவல்களுக்காக வந்திருந்தவர்களால் விறாந்தை நிறைந்திருந்தது. மயானத்தைப் புனரமைப்பது பற்றிய விடயம்தான் பலரது பேசுபொருளாக இருந்தது.

சிறிது நேரத்தில் அதிகாரி நாதனையும் கூடவந்தவர்களையும் உள்ளே அழைத்தார். அதிகாரிக்கு முன்னாலுள்ள கதிரைகளில் அமர்ந்தபடி தங்கள் மனுவைக் கையளித்தனர்.

அதிகாரி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இப்படி அந்த ஊரே திரண்டு வந்து நிற்குமென்று. எதை எப்படிச் சொல்லிச் சமாளிப்பதெனத் தெரியாது குழம்பிப் போயிருந்தார்.

“நீங்கள் எடுத்த முடிவாலை ஊரே குழம்பிப் போயிருக்குது.”

நாதன் அதிகாரியிடம் தனது ஆதங்கத்தைக் கூறினான்.

“மயானத்தைப் புனரமைக்கச் சொல்லிப் பலபக்கத்தாலும் கோரிக்கை வந்தது. அது எங்கடை சபைக்குக் கீழைதானை வரும்”

“பக்கத்திலை குடியிருக்கிற எங்களைப் பற்றி ஏன் நீங்கள் யோசிக்கேல்லை”

“தம்பிமார். அது அரசாங்கக் காணி. அதுவும் எங்கடை சபையின்ரை பொறுப்பிலை இருக்கிறது. நாங்கள்தான் முடிவு எடுக்கோணும் என்ன செய்யிறதெண்டு”

—அமைதியாகக் கூறிவிட்டுக் கதிரையில் தன் இருக்கையை சரிசெய்துகொண்டார்.

“நீங்கள் பக்கத்திலையிருக்கிற சனங்களின்ரை சுகாதார நலன்களையும் பாக்க வேணும்.”

—நாதன் அதிகாரியைப் பார்த்துக் கூறிவிட்டு கூட வந்தவர்களைப் பார்த்தான்.

“அட தம்பியவை. இதை உங்கடை நன்மைக்காகத்ததான் செய்யிறம். ஊரிலை பக்கத்திலை சுடலை இருக்கிறது நல்லது தானை. அதுவும் பாரம்பரியமாக இருக்கிறதை விடுகிறதே.”

“அதுக்காக ஊருக்கு நடுவிலை அதை வைச்சிருக்கிறது நியாயமோ? சனங்களைப் பற்றி நீங்கள் யோசிக்கிறதில்லையோ?”

அதாலை வாற கஸ்ரங்கள் எங்களுக்குத் தான் தெரியும்”

—நாதனுடன் கூடவந்த பூமணி சொல்ல அதிகாரி திகைத்துப்போய் அவளைப் பார்த்தார்.

“பாரம்பரியம், கலாசாரம் எண்டு சொல்லிச் சொல்லித்தானை எங்களைக் காலா காலமாக அடக்கிவாறியள்.”

சிவனொளி அதிகாரியைப் பார்த்து ஆவேசமாகக் கூறினான்.

“நீங்கள் நினைத்தால் இதை நிறுத்தலாம். சுடலை வேணுமெண்டால் ஊர்மனைக்கு வெளியிலை இருக்கிற சுடலையைத் திருத்தலாம். நாங்கள் சிரமதானம் செய்து தாறம்”

—நாதன் அமைதியாக நிதானமாக் தன் முன்மொழிவை முன்வைத்தான்.

“நான் இதிலை ஒண்டும் செய்யேலாது. இன்னுமொரு பகுதி எங்களுக்கு அழுத்தம் குடுக்கினம்.”

“அவை யாரெண்டும் தெரியும். அவையின்ரை நோக்கமும் எங்களுக்குத் தெரியும். முந்தி எங்கடை கிராத்ததுக்கெண்டு பாதையள் இருக்கேல்லை. மூடப்பட்ட கிராமமாக இருந்தது. அதுக்காக இந்தச்சபைக்கு எத்தினை முறை வந்து முறையிட்டம். நீங்கள் எதுவும் செய்துதரேல்லை. பிறகு நாங்களாகவே

பாதைகளைத் திறந்தம். அது போலை இந்த விசயத்திலையும் உறுதியாக இருப்பம்"

"அதெல்லாம் பழைய கதை தம்பி. அதைவிட்டிட்டு இந்த விசயத்திலை நீங்கள் ஒத்துவரத்தான் வேணும். பிறகு பொலிசை வைத்துத்தான்..."

முடிவாகத் தன்னுடைய கருத்தை ஒரு வித மிரட்டலுடன் கூறினார்.

"இதுதான் உங்கடை முடிவெண்டால், நாங்களும் எங்கடை முடிவிலை உறுதி யாகத்தான் இருப்பம்."

—நாதன் உறுதிபடத் தெரிவித்துவிட்டு எழுந்தான். கூடவந்தவர்களும் சிதறு தேங் காயாக மனம் உடைந்துபோய் நாதனைப் பின்தொடர்ந்து வெளியேறினர்.

***

மறுநாள்...

மயானத்தின் முன்வீதியில் மக்கள் அலை யெனத் திரண்டிருந்தனர். பாதையை வழி மறித்துத் தரையில் உட்கார்ந்திருந்தனர். இளை ஞர்கள், பெண்கள், வயோதிபர்கள், சிறுவர் கள் என வேறுபாடின்றித் திரண்டிருந்தனர். இளைஞர்களின் முகங்களில் அநீதிக் கெதி ரான ஆவேசம் குடிகொண்டிருந்தது. அவர் களை நாதன் வழிநடத்திக்கொண்டிருந் தான்.

அவ்வேளை தூரத்தில் ஜீப்வண்டி யொன்று சீறியபடி வருவது தெரிந்தது. சூழலின் பர பரப்பில் மக்கள் ஓர்மத்துடன் வருவதை எதிர் கொள்ளத் தயாராகினர். வேகமாக வந்த ஜீப் சனங்களின் முன் சடுதியாக நின்றது. அதி லிருந்து குதித்த பொலிசார் சனங்களை அதட்டி ஒதுங்கும் படி பயமுறுத்தினர். கூட்டம் அவர் களின் அதட்டலுக்குப் பணியாது உறுதியாக நின்றது.

நிலைமை மோசமாகிவிட்டிருப்பதை நாதன் உணர்ந்தான். தங்களது போராட்டத்தின் நியா யத்தினைப் பொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்க முனைந்தான். அவர்கள் அதனைக் காதில் வாங்கிக் கொள்ளாதவர்களாகத் தமது அதி காரத்தினை நிலைநிறுத்துவதில் முனைப்பாக நின்றனர். வாக்குவாதம் வலுக்கத் தள்ளு முள்ளு ஏற்பட்டது. வந்திருந்த பொலிசார் வன்முறையில் இறங்கினர். கண்டபடி கூடி யிருந்தவர்களைத் தாக்க முற்பட்டனர். தாக் குதலில் ஒரு சிறுவன் தலையில் காய மடைந்தான். இதனைப் பார்த்த மக்கள் இன் னும் ஆவேசங் கொண்டு எதிர்ப்பினை வெளிக்காட்டினர். அவர்களது எதிர்ப்பினை சமாளிக்க முடியாமல் பொலிசார் துப் பாக்கியால் சத்த வெடி வைத்தபடி திரும்பிச் சென்றனர்.

***

அன்றிரவு வாசிகசாலை முன்றலில் மக் கள் ஒன்றுகூடியிருந்தார்கள். மேற் கொண்டு செய்யவேண்டிய கருமங்கள் பற்றி நாதனின் தலைமையில் கூட்டம் நடந்தது. நீண்டநேரம் கலந்துபேசி தீர்க்கமாகச் சில முடிவுகளை எடுத்தனர்.

மயானப் புனரமைப்பை நிறுத்தும்வரை போராட்டத்தைத் தொடர்வது, அதன் நியா யத்தை வெளிக்கிராமங்களுக்குத் துண்டுப் பிரசுரம் மூலம் தெரியப்படுத்துவது, மாகாண சபையின் முதலமைச்சர். ஆளுநர் மற்றும் அதிகாரிகளைச் சந்திப்பதெனவும் முடிவாகி யது. கூட்டம் முடிய நள்ளிர வாகியது.

நாதன் வீடுபோய்ச்சேர இன்னும் நேர மாகிவிட்டிருந்தது. மனைவி சித்திரா அவ னைச் சாப்பிடக்கூப்பிட்டும் அவன் மறுத்து விட்டு நித்திரைக்குப் போனான். அயலில் குழந்தை குட்டிகளைத் தவிர யாரும் தூங்கி யதாகத் தெரியவில்லை.

விடிவதற்கு முன், சுந்தரம், சிவனொளி, சந்திரன், குமார் எல்லோரும் வந்துவிட்டார் கள்,

சித்திரா வந்தவர்களுக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். எப்பவும் நாதனின் பொதுக் கருமங்களில் துணை நிற்பவள் சித்திரா.

"ஏனண்ணை இரவு நித்திரை கொள் ளேல்லைப் போலத்தெரியுது."

குமார் கேட்டான்.

"எப்பிடி நித்திரைவரும்.."

"நீங்கள் மட்டுமில்ல. சனங்கள் ஒருத் தரும் நித்திரை கொள்ளேல்லை. எல்லாருக் கும் சிவராத்திரிதான்"

—சந்திரன் சொல்லிச் சிரித்தான்.

தங்களது இருப்புக்கு நெருக்கடி வந் ததை உணர்ந்த மக்கள் விழிப்புடன் இருந் தனர் என்பது தான் உண்மை. அன்றும் யாரும் கூலிவேலைகளுக்குப் போகவில்லை.

மயானப் பாதையை மறித்துக் கூடியிருந் தார்கள்.

இதற்கிடையில், போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய நாதன், சிவனொளி, சுந்தரம், குமார்,

சந்திரன், பூமணி, சரசு, செல்லையாக்கிழவன் உட்பட இருபது பேரைக் கைதுசெய்ய இருப்பதாகச் செய்தி ஒன்று வந்து பரபரப்பை ஏற்படுத்தியது. இதில் பெண்கள், வயோதிபர்கள், இளைஞர்கள் என பலரும் அடங்கியிருந்தனர்.

தலைமைதாங்கியவர்களைக் கைது செய்து சிறையில் வைத்துவிட்டால் எல்லாம் அடங்கி விடுமென்பது அவர்களது கணிப்பு. மேற்படியான்களின் சதியும் அதுவாகத் தானிருந்தது.

இதையறிந்து சனங்கள் கொதித்துப் போயிருந்தனர். பொலிசார் கிராமத்துக்குள் வந்து அவர்களைச் சிறைப்பிடிக்க முடியவில்லை. மக்கள் அரணாக நிற்பது பொலிசாருக்குத் தெரியும். ஊருக்குள் இறங்கினால் அது விபரீதமாகிவிடும் என்ற பயம் வேறு. நீதிமன்றத்தின் மூலம் பிடிவிறாந்து அனுப்பினர். மாற்றுவழி இருக்கவில்லை அவர்களுக்கும்.

இது குறித்து ஒன்றுகூடிய மக்கள் நீண்ட நேரம் கலந்துரையாடினர். வேறு வழியிருக்கவில்லை. நாதனும் மற்றவம்களும் சட்டரீதியான எதிர்ப்பை நிலை நிறுத்தி நீதியை நிலை நாட்டுவது எனத் தீர்மானித்தனர்..

தமக்கு ஆதரவாக நிற்கும் சட்டத்தரணி ஒருவர் மூலம் நீதிமன்றில் சரணடைந்தனர். அவர்கள் உடனடியாகவே சிறையில் அடைக்கப்பட்டனர்.

போராட்டத்தில் முன்னணி வகித்தவர்களைக் கைது செய்ததால் சனங்களின் மனங்களில் சோகம் குடிகொண்டிருந்தது. செய்வதறியாது கூடிக்கூடிப் பேசிக்கொண்டிருந்தனர்.

அன்று மாலையில் இளைஞர்கள் வாசிகசாலை முன்றலில் ஒன்றுகூடினர். தங்களுக்கு வழிகாட்டிய தலைமைத் தோழர்கள் கைது செய்யப்பட்டதால் மனம் பேதலித்துப் போயிருந்தார்கள். அடுத்து என்ன செய்வது என ஏனைய தோழர்களுடன் தீவிரமாக ஆலோசித்துக்கொண்டனர்.

"மக்கள் குடியிருப்பிலிருந்து மயானத்தை அகற்று", "கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்" என்ற கோரிக்கைகளுக்காகத் தொடர் உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானமாகியது. சற்று நேரத்தில் மைதானத்தில் தகரக் கொட்டகைக்கான தகரங்கள், பந்தல் கால்கள் வாகனங்களில் வந்து இறங்கியது. கூடியிருந்தவர்களின் முகங்களில் நம்பிக்கை ஒளி மீண்டும் தெளிவாகத் தெரிந்தது. மக்கள் போராட்டத்தின் இன்னொரு பரிமாணம் அங்கே உருக்கொண்டது.

***

## குருவிச்சை

பழுதுபட்ட மரமென்றிற் படர்ந்திருந்த குருவிச்சை
மரத்தின் பழுதுக்குத் தன் பங்கைப் பேசாது.
மரம் கெட்டுப் போனதற் பின்
தானே மரமென்று பாசாங்கு செய்கிறது.

## மதிநுட்பர்

அரசியல் மதிநுட்ப நிபுணர்களாய் உலாவருவோர்;
தொடர் தொடராய்த் தத்தமது சோதிடங்கள் பொய்த்த பின்னும்
தமக்கு விளங்காத தேச நிகழ்வுகளை
எதிர்வுரைப்பதாய்க் கூறிச் சோகிகளை உருட்டுகிறார்.

சிவா



# ஓய்வூதியரின் உணர்வலைகள்

சிங்கப் பூர்மலேயா சிலோனென அந்நாளில்
பென்சனியர் புகழோடும் பேரோடும் வாழ்ந்தார் கள்
பங்களா நில புலங்கள் பாரியாரோ நகைப்பேழை
உத்(தி)யோகம் புருஷனுக்கு லட்சணமென் றுரைத்தார்கள்.

இந்நாளில் பென்சனியர் என்றாலே இளக்காரம்
வங்கியிலே நாள்பார்த்து வரிசையிலே எடுத்த பணம்
அன்றாடத் தேவைக்கும் ஆட்டோக்கும் மருந்துக்கும்
பிய்த்தெடுக்க முடியா நடைப் பிணமாக வாழ்கின்றோம்.

பத்து வயதினிலே படிப்புவரா தெனக்கண்டு
பெத்தவரே கடையிலே பிடித்து விட்ட மகன்
எட்டுக் கடை முதலாளி எனைப் பார்த்து இளிக்கின்றான்
கிட்டடியில் கொழும்பில் கிட்டங்கி வாசிகளானோம்.

ஏலாத காலத்து இளைப்பாற்றுச் சம்பளத்தால்
கோழி மேய்த்தாலும் கோர்னமேந்து மாப்பிளை தான்
வேணுமெனக் கன்னியர்கள் மூதாட்டி ஆயினராம்
தாலியோடு பரதேசம் தாவுறதை அறிவாரோ?

போர்ட்டி போ நைன்ரியில் பென்சன் எடுத்துவிட்டு
நாட்டைவிட் டோடியவன் நல்லூருக்கு வருகின்றான்
சீதனத்து வீட்டினிலே இருந்தவரை துரத்தி விட்டு
யூரோப்பில் மனை வாங்க தோம்புகளைத் தேடுகிறான்.

சட்டங்கள் இயற்றுகின்ற தத்துவத்தைக் கொண்டவர்கள்
எம்பியாய் ஐந்தாண்டு இளுத்தடித்தால் பென்சனுண்டு,
லண்டனிலே வீட்டோடு மக்களையும் படிப்பிப்பார்
இன்னும் பல உண்டு இன்னொரு நாள் சொல்லுகிறேன்.

கணேசவேல்

# புத்தளம் பிரதேசமும் குப்பைத் திட்டமும்



மாதவி உமாசுதசர்மா

**சுமார் 15 வருடங்களான 64 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, மீண்டும் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுப் பொதுமக்களுக்கும், அவர்களது வாழ்வாதாரத் திற்கும் ஏற்படப்போகும் பாதிப்புகள் மறைக்கப்பட்டு, அப்புதிய திட்டத்திற்கான அனுமதி 2017ல் பெறப்பட்டுள்ளது. மீள் காடாக்கம் செய்யப்பட்ட மரங்கள் வெட்டப்பட்டு நிரப்பபட்ட குழிகள் தோண்டப்பட்டு இச்செயற் திட்டம் நிறைவேற்றப்படுகிறது**

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக மக்கள் மற்றும் சிவில் சமூகத்தின் போராட்ட களமாக மாறியுள்ளது புத்தளம் பிரதேசம். வெகுசன ஊடகங்களிலும், அரசியல் களத் திலும் பேசும் பொருளாக மாறியுள்ள "குப்பைப் பிரச்சனை" பற்றிய ஒரு தேடலே இந்தக் கட்டுரை.

நாலாபுறங்களிலும் சமுத்திர நீரோட்டத் தினால் சூழப்பட்ட மையப் பகுதிகளில் காணப் படும் தீவு என்பதற்காக மட்டுல்ல, சர்வ தேச நாடுகளின் கேந்திர நிலையமாக இலங் கையின் அமைவிடம் இருப்பதாலும் இந் நாட்டுக்குள் காணப்படுகின்ற சூழலியல் செறி வுத்தன்மையான உயிர்ப்பல்வகைமை இனங் களை கொண்ட பகுதிகள் உலகப் பாரம் பரியங்களாகக் காணப்படுவதனாலும் செல் வம் மிகு பல்லுரு அமைப்புகளைக் கொண்ட கடற்கரைகள் அமையப்பெற்றிருப்பதாலுமே இலங்கை "இந்துசமுத்திரத்தின் முத்து" என வர்ணிக்கப்படுமளவுக்குச் சர்வ தேச நாடுக ளின் கவனத்தை ஈர்ந்துள்ள ஆசிய நாடாகத் திகழ்கிறது.

பல்லுரு அமைப்புக் கொண்ட கடற்கரை யோரங்கள் பொருளாதார ரீதியிலும், சூழலி யல் ரீதியிலும் அளப்பரியவை. இயற்கைத் துறைமுகங்களினுடைய செல்வாக்கு, அதற் கேற்றால் போல் கடல் வளரிகள், கடற்கரை யோரத் தாவரங்கள் புத்தளத்தில் பெருமளவு காணப்படுகின்றன. இந்த கடற்கரையோரத் தாவரங்கள் மீனவர்களின் பொருளாதார நட வடிக்கைக்கு இன்றியமையாதவை. குறிப் பாக, இறால் மற்றும் நண்டு உற்பத்திக்கு கடற்கரையோரத் தாவரங்கள் மிகவும் இன்றி யமையாதன. இந்தப். பகுதிகளிலே தான் அவை இனவருத்தியை ஏற்படுத்தும். இவ் வாறான தாவர அழிவுகள் இறால் உற் பத்தியில் பாரிய தாக்கத்தைச் செலுத்தும். குறிப்பாக இலங்கையின் வடமேற்குப் பகுதி யில் அமைந்துள்ள புத்தளம் மாவட்டம் இயற்கை வளங்களின் சாம்ராஜ்யம், புத்தளம் பிரதேசத்தின் அமைவிடத்துடன் இயைந்து நிலவும் காலநிலையும், இயற்கை வளங்க ளும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பை நல்கும் கேந்திர மைய மாகப் புத்தளத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக் கின்றன.

"புத்தளம்" என்ற பெயர் "உப்புத்தளம்" என்ற வார்த்தையிலிருந்து மருவியதாக அறியப்

படுகிறது. அதனை உண்மைப்படுத்தும் விதமாக நாட்டின் மொத்த உப்பு உற்பத்தியில் 2/3 பங்கு புத்தளத்தில் உற்பத்தியாகிறது. மூன்று தசாப்த உள்நாட்டு யுத்தத்தின் போது நாட்டின் உப்புத்தேவையின் பங்கிற்கும் அதிகமான கேள்வியே புத்தளம் நிவர்த்தி செய்தது. இந்த உப்பு உணவிற்காகவும், கைத்தொழிலும், பசளையாகவும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. உப்பு உற்பத்திக்கு உகந்த உணவிற்காகவும், கைத்தொழிலும், பசளையாகவும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. உப்பு உற்பத்திக்கு உகந்த சூழல் காரணிகளான பொருத்தமான உவர்த் தன்மையைக் கொண்ட புத்தளம் கடனீரேரி, இலங்கையின் மிக நீண்ட கடனீரேரியாவதோடு, யாழ்ப்பாணம் கடனீரேரிக்கு அடுத்து, பரப்பில் இரண்டாவது கடனீரேரி என்பதும் குறிப்பிடத்தக்கது. மற்றக் காரணியான வேகமாக காற்று வீசக்கூடிய பிரதேசமாகக் காணப்படுவதால் புதுப்பிக்கத்தக்க சக்தி வளமான காற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய காற்றாடி மின்பிறப்பாக்கிகள் புத்தளம் கடனீரேரியின் இருபுறங்களிலும் நிறுவப் பட்டு, நாட்டின் மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்வதில் பங்களிப்புச் செய்கிறது.

புத்தளம் மாவட்டத்தை ஊடறுத்துப் பாயும் கலாஓயா, மீ ஓயா, பத்துலுஓயா, தெதுறுஓயா போன்ற ஆறுகள் புத்தளத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் மற்றும் கால் நடைகளை போஷிக்கின்றன. இலங்கையின் இரண்டாவது தேசியப் பூங்காவான வில்பத்து தேசியப் பூங்காவின் ஒருபகுதி புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பூங்காவில் பல அரிய வகை விலங்குகளும், தாவரங்களும், மூலிகைகளும் காணப்படுவது அப்பூங்காவிற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்துள்ளது. இதன் காரணமாகச் சுற்றுலாத்துறை விருத்தியுற்று, அந்நிய செலாவணி யையும் நாட்டிற்குப் பெற்றுத்தருகின்றது. அத்துடன் சுற்றுலாக் கவர்ச்சி கொண்ட பிர தேசமாகக் கற்பிட்டி முருகைக் கற்பாறைகள், டொல்பீன்கள், திமிங்கிலங்கள் காணப்படுகின்றன. பருவ கால மாற்றங்கள் காரணமாக இலங்கைக்கு வந்து சேரும் நாடுகாண் பறவைகளின் தங்குமிடமாக வில்பத்து ஈர நிலமும், ஆனைவிழுந்தான் ஈரநிலமும் காணப்படுவது சிறப்பம்சமாகும். (ரம்சார் சமவாயம் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட ஈரநிலங்கள்) மேலும் தென்னை முக்கோண வலயத்தின் முக்கியமான மாவட்டம் புத்தளம். நுரைச் சோலை மரக்கறிகள், மர முந்திரிகை, கொய்யா, மா, வாழை போன்ற பழவகைகள் புத்தள மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணச் சுண்ணக்கல், மயோசின் காலப் படிவு புத்தளத்தின் அறுவக்காடு பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை நீளுகிறது. இப்படிவுகளை அகழ்ந்தெடுத்து, சீமெந்து உற்பத்தி செய்யும் முதலாவது கைத்தொழில் நடவடிக்கை, சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் 1960களில் புத்தளம் கல்லடி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையில் காணப்படும் ஒரேயொரு சீமெந்து தொழிற்சாலை ஆகும். உலகில் சுண்ணக்கல் அகழும் பிரதே சத்திலிருந்து சுமார் 35 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள தொழிற்சாலையும் ஆகும். இந்த தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், சீமெந்து உற்பத்தியின் விளைவாக வெளியேற்றப்பட்ட தூசுத் துணிக்கைகளால் தொழிற்சாலையை அண்டிய பிரதேசமும் தென்னந்தோப்புகளும் மாசுபடுத்தப் பட்டிருந்த வரலாறு; புத்தளம் மக்கள் சுவாசம் தொடர்பான இளைப்பு, நிமோனியா, காசநோய் போன்ற சுகாதாரக் கேடுகளுக்கும் உள்ளாகியுள்ளனர் என்பது வைத்தியசாலைகளில் பதிவு செய்யப்பட்ட உண்மைத் தகவல். இவ்வாறு தொடர்ந்து மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக தூசுத் துணிக்கைகள் வெளியேற்றிவிட்டு, பின்னர் அவற்றை வடி கட்டும் தொழில்நுட்பத்தை உள்வாங்கிக் கொண்டது மக்கள் மனதை ஆசுவாசப்படுத்தவேயன்றி வேறில்லை. கண் கெட்ட பின் சூரிய உதயத்தைத் தேடும் நிலையில் அன்றைய மக்கள் காணப்பட்டனர். மக்கள் எதிர்ப்பாலும், அரசியல் தலையீட்டாலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, நீர் கொழும்பு, கம்பஹா போன்ற இடங்களில் இருந்து தட்டிக்கழிக்கப்பட்டு, இறுதியில் நுரைச்சோலையில் அனல்மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டது. புவி வெப்பமடைதலுக்கான மூல காரணியான காபனீரொட்சைட் மற்றும் அமிலமழையைத் தோற்றுவிக்கும் கந்தகவீரொட்சைட் மற்றும் சுவாச நோய்கள். புற்றுநோயைத் தோற்று விக்கும் பறக்கும் எரிசாம்பலையும் வெளியேற்றம்

செய்யும் இவ்வாறான அனல்மின் உற்பத்தி நிலையங்களை மூடி இவற்றுக்கு மாற்றீடாக மீள்புதுப்பிக்கக்கூடிய வளங்களைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் வளந்துவிட்ட நிலையிலும் நுரைச்சோலையில் அனல்மின் உற்பத்தி நிலையத்தை நிறுவிய தானது; அரசினால் புத்தளத்திற்கும், இந்த நாட்டிற்கும் இழைக்கப்பட்ட வரலாற்று அநியாயம்.

மேலும் புத்தளம் கல்லடிப் பிரதேசத்தில் நிறுவப்பட்ட சீமெந்து தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருளை (சுண்ணக்கல்) புத்தளம் அறுவக்காடு பகுதியின் படிவுகளில் இருந்து டைனமைட்டு எனப்படும் வெடி பொருட்கள் பாவிக்கப்பட்டு, உடைத்தெடுக் கப்பட்டு இரயில் மூலம் தொழிற்சாலைக்குக் கொண்டு வரப்படுகின்றன. இவ்வாறு சுண் ணக்கல் உடைக்கப்பட்டதன் பின்னர் உரு வாகிய பாரிய குழிகள் அறுவக்காடு பிர தேசத்தில் காணப்படுகின்றன.

கொழும்பு மாநகரத்தில் ஒருநாளில் சேகரிக் கப்படும் சுமார் 1200 தொன் திண்மக்கழிவை இரண்டு கட்டங்களாகப் பத்து வருடங்களுக் குச் சுகாதார நிலப்பரப்பு நிரவுகை முறை (sanitary landfill) மூலம் முகாமைத்துவம் செய்வதற்கான செயற்திட்டம் 2014 ம் ஆண் டில் முன்மொழியப்பட்டது. தேசிய சுற்றா டல் சட்டமூலத்தின் பரிந்துரை செய் யப்பட் டமைக்கு அமைவாக; 100 தொன் களுக்கு மேற்பட்ட திண்மக்கழிவுகளை முகாமைத் துவம் செய்யும் போதும் முகாமைத்துவச் செயற்பாடுகளுக்குத் தெரிவு செய் யப்பட்ட குழி, வில்பத்து தேசிய பூங்காவின் தாங்கல் வலயத்திற்குள் காணப்பட்டமை யினாலும், சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை (EIA Report) தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கையின் படி, இத்திட்டம் குறிப்பிட்ட அக்குழியில் மேற்கொள்ளப்படுமாயின் வனவிலங்குகளுக் கும், உயிர்ப்பல்வகைமைக்கும் பாதிப்பு ஏற் படும் என்று நிராகரிக்கப்பட்டது.

பின்னர், அதே பகுதியில் வில்பத்து தேசிய பூங்காவிற்கு வெளியில் சேரக்குழிய மீன்பிடிக் கிராமத்திற்கு 150 மீற்றர் தொலை வில் புத் தளம் கடனீரேரியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் அமைந்த சுண்ணக்கல் அகழ்வின் பின் மீள் நிரப்பப்பட்டு மீள் காடாக்கம் செய்யப்பட்டு, சுமார் 15 வருடங்களான 64 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, மீண்டும் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக் கப்பட்டுப் பொதுமக்களுக்கும், அவர்களது வாழ் வாதாரத்திற்கும் ஏற்படப்போகும் பாதிப்புகள் மறைக்கப்பட்டு, அப்புதிய திட்டத்திற்கான அனு மதி 2017ல் பெறப்பட்டுள்ளது. மீள் காடாக் கம் செய்யப்பட்ட மரங்கள் வெட்டப்பட்டு நிரப்பபட்ட குழிகள் தோண்டப்பட்டு இச்செயற் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

உலக வங்கியின் சுகாதார நிலநிரப்பலுக் கான வழிகாட்டல் கையேட்டின்படி, இத் திட்டங்கள் எதிர்க்காற்று வீசக்கூடிய 250 மீற்றரிற்குள் குடிமனைகள் காணப்படக் கூடிய, சுண்ணக்கல் படிவுகள் காணப்படக் கூடிய, நிலத்தில் தொடரான அதிர்வுகள் காணப்படக்கூடிய பிரதேசங்களில் மேற் கொள்ளக்கூடாது. அந்த வகையில் இத்திட் டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள இடம் சுகாதார நில நிரம்பலுக்கு பொருத்தம் அற்ற (இடம்) பிரதேசம். மேலும், இச்செயற்றிட் டத்தை நிறுவுவதற்காகப் பொறுப்பேற்றுள்ள நிறுவனம், இத்துறையில் முன்னனுபவங்க ளைப் பெற்றிராத உலக வங்கியினால் தடை செய்யப்பட்ட சீன நிறுவனமாகும். இதனால் இச்செயற்றிட்டத்திற்கு என 115 மில்லியன் டொலர்களை நிதியுதவியாக வழங்கவிருந்த உலகவங்கி நிதியுதவியை வழங்க முடியா தெனத் தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பிரதேசம் தென் மேல் பருவக்காற்று அதிகமாகக் கிடைக்கும் பிரதேசம். அதேபோல் வருடம் முழுவதும் காற்றைப் பெறும் பிரதேசம். இப்பிரதேசத் தில் குப்பையிலிருந்து வெளியேறும் துர்நாற் றம் எதிர்க்காற்றில் எடுத்துச் செல்லப்படும். இதனால் வில்பத்து தேசியப்பூங்காவில் குறிப் பாக யானை மற்றும் ஏனைய வன விலங் குகள் தமக்கான உணவைத்தேடி அவ் விடத்தை நாடுவதால் விலங்குகள் பயணிக்கும் பாதை யில் அமைந்துள்ள கங்கே வாடிய, பூக் குளம், பழைய எலுவன்குளம், புதிய எலு வன்குளம் போன்ற கிராமங்களில் பொருட் சேதம், உயிர்ச்சேதம், உடைமைச் சேதம் என் பன ஏற்படுவதோடு மனிதர் மற்றும் விலங் குகளிடையேயான வாழிடத்திற்கான முரண் பாடு அதிகரிக்கும். பின்னர் யானைகளின் வாழிடப் பிரதேசமாக எதிர்காலத்தில் மாறு வதற்கான சாத்தியப்பாடுகள் உண்டு.

★★★

# இது என்னுடைய நிலம்



என்னுடைய நிலத்தில்
நான் எதுவாகவும் இருப்பேன்

ஒரு நாட்டு கத்தரிச் செடியாக
முளை கீரையாக
வேம்பாக பலாவாக
உயர்ந்து நிற்கும் பனையாக
எதுவாகவும் இருப்பேன்

சிறு எறும்பாக
மண் புழுவாக
விஷப் பாம்பாக
காக்கை குருவியாக
ஒரு ஓணானாக
எதுவாகவும் இருப்பேன்

போர் முடிந்த பூமியின் சிதிலமாக
போரின் பெரும் காயமாக
பெரும் ஓலமாக
துயருற்ற மனிதனாக
எதுவாகவும் இருப்பேன்

இங்கே
ஓநாய்களுக்கென்ன வேலை
பிணந்தின்னும் கழுகுகளுக்கென்ன வேலை

என்னுடைய நிலத்தில்
நான் எதுவாகவும் இருப்பேன்
யாருடைய பாதுகாப்புமின்றி...

சி. கிருஷ்ணபிரியன்

கோப்பி மரமாயிருந்தோம்
தேயிலை மரமாயிருந்தோம்
இறப்பர் மரமாயிருந்தோம்

இலையாயிருந்தோம்
கிளையாயிருந்தோம்
வேராயிருந்தோம்
பாலாயிருந்தோம்
கொட்டையாயிருந்தோம்
ஒரு துண்டு நிலமற்ற நாம்


மட்டக் கம்பாயிருந்தோம்
மட்டக் கத்தியாயிருந்தோம்
கவ்வாத்துக் கத்தியாயிருந்தோம்
மண்வெட்டியாய் சுரண்டியாய்
பறி முள்ளாயிருந்தோம்

புதை குழியாய்
நெத்திக் காணாய்
பாடை மாத்தியாய்
கொழுந்து மடுவமாய்
முள்முருங்கை மரமாயிருந்தோம்

வியர்வையாய்
இரத்தமாய்
உழைப்பாய்
மூலதனத் திரட்சியாய்
அந்நிய செலாவணியாயிருந்தோம்

ஒரு துண்டு நிலமற்ற நாம்
ஒரு முகமற்ற நாம்...

# ஒரு துண்டு நிலமற்ற நாம்



# தடுக்கை

அண்டனூரர் சுரா
தமிழ்நாடு

**து**ச்சலைக்கு வந்திருந்த அதே சந்தேகம் தான் பீமனுக்கும் வந்திருந்தது. சித்தப்பா மக்கள், பெரியப்பா மக்கள் ஒத்த காந்த துருவங்களாக ஒருவரையொருவர் விலக்கி நின் றாலும் இரு வருக்குள்ளும் எழுந்திருந்த சந்தேகம் ஒன்றாகவே இருந்தது. துச்சலை வாய்த்துடுக்கானவள். தேளின் கொடுக்கைப் போல வாய்க்குள் எப் பொழுதும் கேள்விகள் துருத்திக்கொண்டிருக் கும். ஒரு செல்லத்திற்கே குடுமி எப்படி யெல்லாமோ ஆடும். இவள் நூறு செல்லத்த வள். போதாக்குறைக்கு தாய், தந்தை செல்லம் வேறு. சொல்லவா வேணும்...?

அஸ்தினாபுரம் அரண்மனை முற்றத்தில் தொங்கிக் கிடந்த ஊஞ்சலில் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு, இரு கைகளையும் சங்கி லித் தொடர்களுக்கிடையில் பின்னிக்கிடந்த முல்லை கொடியைப் பிடித்துக்கொண்டு கால் களை நேராக நீட்டி வழியில் போகிறவர்கள், வருகிறவர்களை அழைத்து கேள்வி கேட்கிற வள். அவளது கேள்விக்குப் பதில் சொல்வதற் கென்றே அரண்மனையில் கொஞ்சப் பேரை வேலைக்குப் பணித்திருந்தான் துரியோதனன். கேள்வி, கேள்வி மேல் கேள்வி கேட்கிற வளல்ல துச்சலை. கேள்விக்குள் கேள்வியென நுழைக்கிறவள். அன்றைய தினம் கேள்வியை வழிப் போக்கர்களிடமோ, அரண்மனைவாசிகளி டமோ கேட்டிருக்கவில்லை. அண்ணன்களின் வருகைக்காக எந்நேரமானாலும் பரவாயில்லை யென காத்திருந்தாள்.

கிஜா புயல் அஸ்தினாபுரத்தை மட்டுமல்ல, அரண்மனையையே களைத்து ஆடியிருந்தது. என் அண்ணன்கள் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த நேரம் பார்த்தா, இப்புயல் கண், மண் தெரி யாமல் அடிக்க வேண்டும், அரண்மனை வாசி களிடம் பேசிக்கொண்டிருந்தவள் அவளுக் குள் எழுந்த சந்தேகத்தை சட்டென யாரிடமும் கேட்டுவிடவில்லை.

புயல் ஒய்ந்து ஒரு வாரம் கடந்து மக்க ளுக்குத் தடுக்கை கொடுக்க கந்தல் துணி, பிய்ந்த சட்டைகள், புழுத்துப்போன அரிசி, செப்புக்காசு, மெழுகுவர்த்தி, போர்வையென ஏற்றிச் சென்று, நூறு பேரும் வட்டம் கட்டி, தள்ளுமுள்ளுக் கிடையில், கொடுக்க முயன்று கொடுக்க முடியாமல் கண்கள் சிவந்து, இமை கள் வெந்து, களைத்து, வெறுத்து அரண் மனைக்குத் திரும்பிய உடன்பிறப்புகளை கை நீட்டி நிறுத்தினாள். அவர்கள் பெருமூச்சு வெடிக்க தங்கையை ஏறிட்டுப் பார்த்தார்கள். ‘அண்ணா, தடுக்கைப் பொருட்களை எல்லோ ருக்கும் கொடுத்து விட்டீர்கள் தானே...?’

துரியோதனை அவள் வழி மறித்துக் கேட்டாலும் அவளுக்கான பதில் துச்சாதன னிட மிருந்து வந்தது ‘இல்லை தங்காய்....’

‘எத்தனை பேருக்கு உங்களால் தடுக்கை கொடுக்க முடிந்தது...?’

‘எப்படியெல்லாமோ முயன்று பார்த்தோம் தங்காய், ஒருவருக்கேனும் எங்களால் கொடுக்க முடியவில்லை. அரசர், அரசவை என்று பாராது மக்கள் எங்களை விரட்டியடிக்கிறார்கள்...’

அண்ணன்களின் பதில் ஏமாற்றமாக இருந் தது. அவளுடைய முகம் பறித்த நான்காம் நாள் செம்பருத்தி இதழ்களைப்போல சோர்ந் தது. ‘என்ன தங்காய், ஏன் இந்த முகமாற்றம்...?’

‘கர்ணன் இருக்கிறான் இல்லையா...?’

‘ஆமாம், அங்க நாட்டு மன்னன்...’

‘அவன் தேர், தேராக ஏற்றிச் சென்ற அத் தனை நிவாரணப் பொருட்களையும் சடுதிக்குள் கொடுத்து விட்டானாமே, எப்படியாம்..?’

அவள் இதை குதலை மொழியில் சொல்லி யிருந்தாலும் அக்கேள்வியால் துரியோதனன் ஒரு கணம் ஆடித்தான் போனான். அவன் ஆடும் நிழலைப் பார்த்து அவனது பரிவாரங் கள் ஆடின. அரண்மனையின் பாதர விந்தங் கள் ஆட்டம் கண்டன.

பீமன், தன் சகாக்களிடம் கேட்டது இதே கேள்வியைத்தான். அவன் கேட்டிருந்தக் கேள்வி தாய் குந்திதேவிக்கும் கேட்டிருந்தது. மண் ணையும், பெண்ணையும் பகடையால் தோற்று மகன்களின் நிர்கதியை நினைத்து உள்ளுக்குள் அழுகிக்கொண்டிருந்தாள் குந்திதேவி. காணி

நிலமற்று வனாந்திரம் புகுந்து, கிளைக்குக் கிளைத் தாவும் மந்தியைப் போல ஒவ்வொரு வனமாக ஏதலி வாழ்க்கை வாழ்கையில் இந்நேரம் பார்த்தா கிஜா சண்டமாருதம் புரிய வேணும்...? அது தானாக வந்ததோ துரி யோதனன் அனுப்பி வந்ததோ, மரங்கள் வேர் பிடுங்கி வானம் கீழாகவும், பூமி மேலாகவும் கிடக்க, வெயிலுக்கு ஒதுங்க கிளை, மழைக்கு ஒடுங்க புதர்களில்லாமல், வாழ்க்கை வாழை யாக சிதைந்து கிடைக்கையில் இந்நேரம் பார்த்து பீமன் கேட்கும் கேள்வியைப் பாரும், அவனை நினைத்து மனதிற்குள் நொதித்துக் கொண்டாள். கேள்வி கேட்கும் நேரம்தான் அவளை எரிச் சலூட்டியதே தவிர கேட்டக் கேள்வியில் கர்ணன் இருந்ததால் அக்கேள்வி அவளுக்குப் பிடித்திருந்தது. எதையும் முரட்டுத் தனமாக மட்டுமே செய்ய முடிந்த ஒருவனால் இப்படியான அறிவார்ந்த கேள்வியைக் கேட்க முடியுமா, பீமனை நினைத்து மனம் பூரித் தாலும் மனதிற்குள் உருண்டது என்னவோ கர்ணன்தான்.

பஞ்சவர்களில் பீமனைத் தவிர மற்றவர்கள் பதில் சொல்லுமிடத்திலிருந்தார்கள். பதில் சொல்லி அவர்கள் களைத்தும் போயிருந்தார் கள். பாவம் சகாதேவன், அவன் விளக்கிய விளக்கலில் கண்களின் ஈரப்பதம் வற்றி, நா துவண்டு உதடுகள் வெடித்திருந்தன. அர்ச்சுனன் சாரங்கம் உதைத்த சரமழையில் சொற்களைப் பிரயோகித்தான். அவன் களைப்புறும் நேரம் பார்த்து உள் நுழைந்தான் தர்மன். சொல்ல றிந்து சொல் எறிகிறவன் அவன். அவனாலும் கூட பீமனின் சந்தேகத்தைத் தணிக்க முடிய வில்லை. வேறு வழியில்லாமல் நுழைந்த நகுலன், கடிதொச்சி எறிந்தான். எத்தனை சுற்று விளக்கம், எத்தனை கட்டு உதாரணம், களைத் தது மட்டு மல்ல, அலுத்தும் போனார்கள். 'உங்களுக்கெல்லாம், வாய் வலிக்கிறதா இல் லையா,...?' சகாதேவன் கோபத்தில் தெறித் தான். அவ்வளவே தான், நால்வரும் வாய டைத்து வேர்ப் பிடுங்கிக் கிடந்த மரத்தடி தண்டில் உட்கார்ந்தார்கள்.

பீமன் அப்பொழுதேனும் விடுவானா, என்றால் இல்லை. அவள் மெல்ல தாயின் பக்கமாகத் திரும்பி, தாயிடம் குலாவி 'அம்மா, நீயாவது சொல்லேன், அந்த கர்ணனால் அது எப்படியம்மா முடிந்தது...?' குந்திதேவி தலை யில் கிடந்த தலைப்புச் சேலையை முன்,பின் எடுத்து விட்டுக் கொண்டு பீமனைத் திரும்பிப் பார்த்தாள். 'அவன் நரதுங்கன்டா...?'

'அப்படியென்றால்...?'

'மனித பிறவியிலேயே சிறந்தவன்...'

'இருக்கட்டுமேயம்மா, எப்படி சடுதிக்குள் அவ் வளவு நிவாரணத்தையும் கொடுக்க முடிந்தது...? உன்னால் முடியுமா, இதோ நம் விரோதி பங்காளிகள் தடுக்கை பொருட்களைக் கொடுக்க வண்டி கட்டிச் சென்றார்கள். அவர்களால் அஸ்தினாபுரம் தெருவிற்குள் நுழைய முடியவில்லையே, எத்தனை எதிர்ப் புகள், கலவரங்கள், கல் வீச்சு, வசைப்பாடல் கள். அவர்களால் பொருட்களை இறக்கி வைக்க மட்டுமே முடிந்திருக்கிறது. இத்தனைக் கும் அவர்களிடமிருந்தது இரு நூறு கைகள், அதைக் கொண்டு அவர்களால் நூறு பேருக்குக் கூட தடுக்கை நீட்ட முடியவில்லை. இத் தனைக்கும் கிழிந்த கந்தல்துணி, அரிசி, பருப்பு, எண்ணெயும், மெழுகுத்திரி,... ஆனால் கர்ணன் என்ன அப்படியா, அவன் கொண்டுச் சென்றது வெறும் அரிசியும், பருப்பும், தினை மட்டுமா...?'

'வேறு...?' மகனின் வியப்பிற்குள் வியப்புக் குறியென நுழைந்தாள்.

'அய்யோ, அம்மா, என் இரு கண்களால் பார்த் தேன். கோடைகால மேகத்தைப் பார்த்திருப் பாயே, அத்தனை வேகம், தங்கக் குடத்தில் தங்கக் காசுகள், வெள்ளிக்குடத்தில் வைர கற்கள், குடம், குடமாக, ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி, கட்டி, நூறு தேர்கள். மழலை நடை பயில்கையில் காலிலிருந்து எழும் கிண் கிணியைப் போல சப்தம். அந்தோ! அக்காட்சியை நான் எப்படி வர் ணிப்பேன். தாயே, கிஜா புயலின் வேகத்தை உன்னால் வர்ணிக்க இயலுமா, இயலாது தானே, அப்படிதான்! அவனது தடுக்கை உதவிகளை வர்ணிக்க வார்த்தைதான் ஏது..? அவ்வளவையும் கொண்டுச்சென்று எங்கே நிறுத்தினான், எப்படி இறக்கினான். எத்தனை மக்கள், எத்தகைய இழப்புகள், வீடு இழந் தவர்கள் எத்தனை பேர், உடைமையை பறிகொடுத்தவர்கள் எத்தனை பேர், எப்படி கொடுத்தான், யார் யாருக்குக் கொடுத்தான், என்னென்ன கொடுத்தான், ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் கொடுத் திருக்கிறான், சடுதிக்குள், வெள்ளி முளைத்து ஞாயிறு உதிப்பதற்குள்...'

பீமனின் வர்ணனையால் அர்ச்சுனனுக்கு தலை கால் புரியாமல் கோபம் வந்தது. வந்த கோபத்தில் வில்லை எடுத்தான். அதற்குள் அம்பைச் சொருகி பீமனின் நாசிக்கு நேராக குறி வைத்தபடி சொன்னான், ' பீமா, நீ என் அண்ணனென்று பார்க்கிறேன், இல்லை, அந்த கௌரவர்கள் மீது இருக்கிற கோபத்தை உன் மீது காட்டி விடுவேன்....'

தர்மன் ஓடி வந்து குறுக்கிட்டான் 'அடேய், அர்ச்சுனா, என்ன வேலை செய்கிறாய்....?'

'பிறகு என்ன அண்ணா, அவனைத்தான் பாரேன். விடிந்ததிலிருந்து கர்ணன், கர்ண னென்று ஆயிரம் முறை உச்சரித்து விட்டான். இவனுக்கு கர்ணன் மீது அப்படி யென்ன ஈரம்...? அவனைச் சற்று வாயை மூடச் சொல் லும். இல்லை, என் அம்பால் அவனது வாயைத் தைத்துவிடுவேன்...'

அர்ச்சுனன் கொண்ட கோபத்தைப் பார்க் கையில் குந்திதேவி குலை நடுங்கி போனாள். இந்நேரத்தில் உள் நுழைந்து பீமனுக்கு ஆதரவாக சொல் புனைந்தால் கர்ணன் என் மகனென்று பஞ்ச வர்களுக்குத் தெரிந்து விடுமோ, வாய் வரைக்கும் வந்த வார்த்தையைச்

சட்டென விழுங்கி என்னச் சொல் வதென்று தெரியாமல் விழித்தபடி இருந்தாள்.

'அடேய், அர்ச்சுனா, இங்கே வாரும்...' எழுந்த பீமன் அர்ச்சுனன் கையிலிருந்த வில், அம்பை விலக்கி அவனை இடுப்போடு அணைத்து அவன் உட்கார்ந்திருந்த இடத்தில் அமர வைத் தான். 'சரி அர்ச்சுனா, நாம் இன்று ஏதலி அல்ல. அஸ்தானிபுரத்தை ஆள்வதாக வைத்துக் கொள்ளும். கிஜா புயலால் மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து, உடை, உடைமை களை இழந்து, கையேந்தி நிற்கிறார்கள். நீயும், நானும் உதவிப் பொருட் களைக் கொண்டு செல்கிறோம். நீயே சொல்லும், நம்மால் ஒரே நிமிடத்திற்குள் அத்தனை பேருக்கும் தடுக்கை நீட்டி விட முடியுமா...?, அதையும் அவர்களின் தேவையைக் கேட்டறிந்து, அவர்கள் கேட்பதற்கு மேலாக,.. எங்கே சொல்லும் பார்க்கலாம்....'. அர்ச்சுனனால் பதில் தேட முடிந்திருக்கவில்லை.

துவைத வனத்தில் இதே கேள்விதான். விளக்கத் தெரியாமல் விளக்கி துச்சலை முன் துரியோதனன் மண்டியிட்டிருந்தான். அவன் அஸ்தினாபுரத்தின் மன்னன். கதை கட்டுவதில் பீஷ்மரை மிஞ்சியவன். வாய்ப்பந்தல் அவனுக் குத்தான் பொருந்தும். அவன் தங்கையை சந்தேகத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டு எப் படியெல்லாமோ வாய்ப்பந்தல் நட்டான். அவ னுடன் அவனது அமைச்சர்கள் கூட சேர்ந்து கொண்டார்கள். சகுனி கூட உள்ளே நுழைந்து பார்த்தான். துர்மதன் விளக்கிப் பார்த்தான். அடுத்தடுத்து அவளது அண்ணன்கள் தொண் ணூற்று ஒன்பது பேரும் வந்தார்கள். துச்சலை மீது பேரன்பு காட்டும் விகர்ணனால் கூட அவளது சந்தேகத்தை நிவர்த்திக்க முடிய வில்லை. இத்தனைக்கும் துச்சலை வயதால், பருவத்தால் இளையவள்.

'எப்படியண்ணா முடிந்தது அந்த கர்ணனால் மட்டும்...?'. ஒரே கேள்விதான். சற்று முன் கேட்ட அதே கேள்விதான். முதல் முறையாகக் கேட்பதைப் போலதான் ஒவ்வொரு முறையும் கேட்டாள். கேட்டக் கேள்வியைக் கேட்பதே தெரி யாமல் ஓராயிரம் முறை கேட்டிருந்தாள். அவள் கேட்ட ஒற்றை கேள்விக்கு ஒரே பதி லையே அவர்கள் சொல்லிக்கொண்டிருக்க வில்லை. பதிலில் மாயாஜாலம் புனைந்து, ஜீபூம்பா சேர்த்து சொற்களைக் கண்ணிகளாக முடிந்து அவள் முன் வைத்துப் பார்த்தார்கள். ஏமாற்றமே மிஞ்சியது.

அவள் மீது அவர்களுக்கு கோபம்தான் வந்தது. அதை வெளிப்படுத்த அவர்களிடம் சுரம் இருந் திருக்கவில்லை. காதடைத்து, கண்ணடைந்து, வாய்ப்பொத்தி வீழ்ந்தவர்கள் மயக்கம் தெளிந்து துச்சலையை அழைத்துக் கொண்டு நேரில் சென்று கேட்டுதான் வந்து விடுவோமென தேர்ப்பூட்டி அங்கா நாட்டை நோக்கி விரைந் தார்கள். அங்கு அவர்களுக்கு முன்னால் பஞ்சவர்கள் இடம் பிடித்திருந் தார்கள்.

★★★

அஸ்தினாபுரம் நாட்டை நோக்கி தேர் களைப் பூட்டினான் அங்கா தேசத்து மன்னன் கர்ணன். அவன் பூட்டிய நூறு தேர்களில் சரிபாதி பொன், முத்து, வைர முடிச்சுகள். தங்க , வெள்ளி குடங்கள். இன்னும் பாதியில் தவசம், பயிறு, கடலை, விதை, முத்து, கொட்டை, நெற்றுகள். அவன் தலையில் சூடிய மகுடத்திலும் கூட நவ தவசங்களை முடிந்திருந்தான்.

காமதேனு மடியைப் போல தேர். ஒவ் வொரு குலுங்களிலும் கிண், கிணிப்புகள். சுமையால் தேர் அச்சுகள் முறிய, சக்கரங்கள் புழுதிக்குள் புதைய, ஒவ்வொரு திருப்பத்திலும் கீழே இறங்கி தேர்ச்சக்கரத்தை ஒரே ஆளாக மேட்டில் ஏற்றி குதிரைகளின் நாக்கு வெளியே தள்ள, மூச்சு இறைக்க குதிரைகளை விரட்டி தேர்களை அஸ்தினாபுரத்தில் கொண்டு வந்து சேர்த்தான். அவன் நினைத்த எல்லையைத் தொட்டதும், ஒன்று நினைத்தான். எத்தனை மெனக்கெடல், எவ்வளவு வியர்வை, இவ் வளவு பொருட்களையும் உரிய மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். கொடுத்தவர்களுக்கே திரும்பவும் கொடுக்காமல், கொடுக்கும் நப ருக்கு அரை குறையாகக் கொடுக்காமல், கொடுத்தப் பிறகு போதுமா எனக் கேட்கா மல், எவ்வளவு தேவை எனக் கேட்டுக் கொடுக்க வேண்டும். கேட்டதை விடவும் மிகுதியாகக் கொடுக்க வேண்டுமென நினைத் தான் கர்ணன். எல்லையைத் தொட்ட பூரிப் பில் வரிசைக்கட்டி நின்ற தேர்களை ஏறிட் டுப் பார்த்தான். அவன் கண்களுக்கு எட்டிய மட்டும் பொருட்களாக இருந்தன. அவன் பெரு மூச்சொரிகையில் அவனது மார்பில் தழுவிக் கிடந்த ஆபரணங்கள் வியர்வையில் நனைந்து பதத்துக் குலுங்கின. இரவு மூன் றாம் பிறை துளர்க்க பூட்டிய தேர், அஸ்தி னாபுரத்தை வந்தடைகையில் வெள்ளி முளைத் திருந்தது.

தேர்களை ஓரிடத்தில் வரிசைக்கட்டி நிறுத் தினான். பொருட்களை இறக்கி ஒரே இடத் தில் சேர்த்து குன்றுகளாக்கினான். குன்றுகள் ஒன்று டன் ஒன்று நிரவ, பரவ மலைத்தொடர் களாகின. இவ்வளவையும் தன் கையால் கொத்தாக அள்ளி இக்கணமே யாருக்கேனும் கொடுக்க வேண்டும் போலிருந்தது. கொடுப்ப தற்கு உகந்ததாக விரல்கள் பணிந்து உள்ளங் கை தசைகள் திரண்டுப் போயிருந்தன.

கொடுக்கப் பிறந்தவனாக இருந்தான் கர் ணன். இரண்டு கைகளும் கொடுப்பதற் கென்றே படைக் கப்பட்டிருந்தது. கிஜா புயல் சேதாரங்களி லிருந்து மக்களை இன்றைக்குள் மீட்டுவிட வேண்டுமென நினைத்தான். இது போதுமா, வீடு இழந்த, காடு கழனி இழந்த, வனம் இழந்த, வனாந்திரம் இழந்த, மரம், செடி, கொடி இழந்த, விதை, வித்து, நெற்று இழந்த மக்களுக்கு இந்தத் தடுக்கை பொருட் கள் போதுமா,...? போதாது என்றவன் அவனது கழுத்தில் தொங்கிக்கிடந்த பலமணி மாலை, தண்டை, பவளவடம், தொடி

கங்கணம், வண்ணசரம், முத்துவடம் இவ்வளவையும் தலையோடு அவிழ்த்து குவித்திருந்த குன்றின் மீது வீசினான். அது விழுந்த அதிர்வில் குன்றிட்டிருந்த பொன் பொருட்கள் சரசரவென சரிந்து உயரக் குன்று அகலக் குன்றாக பெரு வட்டமடித்தது.

அவனது உள்ளங்கைகள் அரித்தன. பொருட்களை அள்ளிக் கொடுப்பதற்கு முன் எடுக்கும் அரிப்பாக அது இருந்தது. அவனால் ஓரிடத் தில் நிற்க முடியவில்லை. பொழுது எப் பொழுது விடியும், மரங்களற்ற திசையில் கிழக்கைத் தேடினான். இத்தனைக்கு இது அவனது நாடல்ல. அருகாமை நாடு. ஆனால் இம்மக்கள், மக்களின் இழப்புகள், அவர் களின் தாகம், பசி, ஏக்கங்கள்...?.அதற்கு ஏது தேசம்...!

முழுமையாக விடிந்திடாத வைகறையில் ஓர் ஆளரவம் தெரிந்தது. கிழவி என்று சொல்லக் கூடிய அளவிற்கு வயதானவளில்லை. கன்னி என்று சொல்லுமளவிற்கு குமரியுமில்லை. பழமில்லாத, பிஞ்சுமில்லாத காய் பருவத்திலிருந்தாள். பச்சையும், கரள் நிறத்தி லுமான ஆடை. கரையற்ற சேலை. சேலையின் தலைப்பால் முழு உடம்பையும் இறுகப் போர்த்திக்கொண்டு மண் ணுக்கு வலிக்காதப் படி நடந்து வந்தாள். முழுங் கல் சத்தங்கள், கண்ணீர் வடிப்பு, இடியென பெருமூச்சு. கடலில் மூழ்கியவள் கடனிலும் மூழ்கிய துயர முகம். இன்னும் மலர வேண்டிய மலர் மலர்வதற்குள்ளாக சருகான முகச்சரடு. தன்னை யாரும் பார்த்து விடுவார்களோ, விரட்டி பிடித்து விடுவார்களோ, திரும்பி பார்த்துக் கொண்டு, கொலை பயம், உயிர் பயத்துடன் நடந்து வந்தாள்.

நெருப்பில் நடப்பதைப் போல வேகமில்லாது, தொய்வில்லாது நடந்து வந்தவள் கர்ணன் முன் நிற்கையில் அவளது மூச்சுக் காற்று கர்ணனின் மார்புக்கூட்டைத் தகித்தது. கர்ணன் சற்று நிமிர்ந்து, மெல்லக் குனிந்து அவளைப் பார்த்தான். பொறியிலிருந்து தப்பி வந்த ஒரு பறவையின் பரிதவிப்பு, படபடப்பு.

'தாயே....'

கர்ணனை அவள் ஏறிட்டுப் பார்க்கவில்லை. கைகளை மட்டும் காட்டினாள். எத்தனையோ பேர்களுக்குக் கொடுத்துச் சிவந்த கரம். காலத்தின் கதி கையேந்தி நிற்கிறேன். வாய்ச்சொல்ல வேண்டிய ஒன்றை அவளது உள்ளங்கைகள் சொல்லி நிறுத்தின. நீண்ட கை மேலும் மேலும் நீண்டது.' வாழ்ந்து கெட்டவருக்கு உதவும் கொடை நீண்ட புகழ் பெறும். உதவுங்கள் பிரபுவே...'

கண்ணீரில் நனைந்த குரல் வெண்திரையில் தெரிந்தது. முழுமையாக விடியாத அப்பொழுதில் அவளது தேவையை அவனால் கணித்தறிய முடியவில்லை. ஒரு தங்கக் கலசத்தை எடுக்கப் போனான். போதாதென்று கலசமும், பானையும், திவசமும் கொண்ட ஒரு பெரிய முடிச்சை எடுக்க கையை நீட்டினான். அதுவும் போதாதென்று ஒரு தேர் பொருட்களை ஒரே மூட்டையாகக் கட்டி அவள் முன் நீட்டலாமென நினைத்தான்.

'என்ன பிரபுவே, என் இன்னல் கேளாது, என் பிணக்கம் பாராது இதைக் கொடுக்குறீரே....?'

கர்ணனுக்கு திடுக்கென இருந்தது. கொடுக்க நினைத்த ஒன்றை வாங்கியவளைப் போல கேட்கிறாளே, கர்ணனின் நெற்றி சுருங்கி விழிகள் விரிந்தன. அத்தாய் முன் வளைந்து முகத்தை ஏறிட்டு கேட்டான், 'சொல்லும் தாயே, உனக்கு ஏற்பட்ட இன்னல் என்ன, உன் வறுமையைச் சொல்லும். அது மலையளவானாலும் அதை நான் போக்குகிறேன்...'

'கர்ண பிரபுவே, அவ்வளவையும் நீ ஏற்க வேண்டாம். என் சுமையின் ஒன்றை மட்டும் போக்கும். அது போதும்..'

கர்ணன் அத்தாயை நினைத்து பூரித்தான். இத் தாயின் சொல் உண்மையானால் புயல்கள் என்ன அத்தனை அன்புடையனவா, அது கொடுக்கும் சீற்றம் அத்தனை நேசம் படைத்தனவா..? இக்கலியுக காலத்தில் இப்படி யொரு தாயா..? 'சொல்லும் தாயே, உன் இன்னல் என்ன,...?'

'கர்ணா, கொஞ்சக் காலம் உடல் நலம் குன்றி ஒரு மருத்துவரிடம் தீவிர சிகிச்சை எடுத்துக் கொண்டேன். அங்கு நான் என்ன தின்றேனோ, எதை மென்றேனோ தெரியவில்லை. நான் உட்கொண்ட இடியாப்பத்தின் செலவீனத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளும் கர்ண பிரபுவே...'

கர்ணன் ஒரு கை நீட்டி அவளுக்கு வாக்குக் கொடுத்தான் 'இக்கணமே அக்கடன் சுமையை ஏற்கிறேன் தாயே...'

அத்தாய், கையை மடிக்குள் திணித்து மடியிலிருந்து ஒரு செப்பு பட்டயத்தை வெளியில் எடுத்து கர்ணன் முன் நீட்டினாள். அதை வாங்கிப் பார்த்தான் கர்ணன். இடியாப் பத்தின் கணக்கு நீளத்தை விடவும் அகல முடையதாக இருந்தது. கர்ணன் நிமிர்ந்து அத் தாயைப் பார்த்தான். திரும்பி மலை களாகக் குவித்து வைத்திருந்த தடுக்கை பொருட் களைப் பார்த்தான். கையிலிருந்த இடியாப்பக் கணக்கைப் பார்த்தான். கிஜா தடுக்கைக் கென்று ஏற்றி வந்த பொருட்கள், மக்களிடம் போய்ச் சேர்ந்தாக வேண்டிய பொருட்கள்,... அதை நினைக்கையில் அவனது இதயம் பட படத்தது. வாக்குறுதி அவன் முன் கைக்கட்டி நின்றது. அவன் உடுத்தியிருந்த ஆடையை அவிழ்த்து அவளிடம் கொடுத்து 'இதையும் சேர்த்து எல்லாவற்றையும் எடுத்துக்கொள் தாயே...' என்றவன் அங்க நாட்டை வந் தடைகையில் பொழுது விடிந்தும் மர்ம இருள் விலகாது இருந்தது.

★★★

# ஏழு புத்தகங்கள்

## 2018இல் வெளியான அரசியல் நூல்களை முன்னிறுத்திய பார்வை

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**மாறாகப் பரந்துபட்ட உழைக்கும் மக்களின் ஒன்றிணைந்த போராட்டங்களாலேயே தென்னமெரிக்க நாடுகளில் இடது சாரிகள் ஆட்சிக்கு வந்ததோடு தமது ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைத்தனர். பல தசாப்தங்களாக அமெரிக்காவின் ஆசியுடைய சர்வாதிகார ஆட்சிகள் நிறைந்த தென்ன மெரிக்காவின் மக்களை நவகொலனித்துவ மும் தாராளமயப் பொருளாதாரமும் பாடாய்ப் படுத்தின.**

(இரண்டு பகுதிகளாக வரவுள்ள இக்கட்டுரை யின் முதலாவது பகுதி. இரண்டாவது பகுதி அடுத்த இதழில் தொடரும்)

### அறிமுகம்

**வா**சிப்புத் தரும் மகிழ்ச்சியை வேறெதும் தராது. புத்தகங்கள் ஒரு மனிதனின் மிகப் பெரிய ஆசான். அவை இன்னொரு உலகை, புதிய அறிவை, கற்பனைத் திறத்தை, கவி நயத்தை எனப் பலதையும் தரும் சக்தி வாய்ந் தவை. ஒவ்வொரு ஆண்டும் போல கடந்த ஆண்டும் ஏராளமான புத்தகங்கள் உலகின் பல மொழிகளில் வந்தன. அவை அரசிய லையும் அதன் போக்குகளையும் பல்வேறு கோணங்களில் பேசியுள்ளன. கடந்தாண்டு நான் வாசித்த புத்தகங்களில் உலகின் அரசி யற்போக்கில் வேறுபட்ட அதேநேரம் அவசிய மான மாற்றுப் பார்வையைத் தருகின்ற சில புத்தகங்களை பற்றிய குறிப்பாக இக்கட்டுரை அமைகிறது. இவை தத்துவார்த்தத் தளத்திலும் செய்திகளின் பொதிந்த தன்மையிலும் ஆழ மானவை. உலக அரசியலின் மக்கள் போராட் டத்தின் வெவ்வேறு தளங்களை புதிய திசை யில் தரிசிக்க இவை உதவுகின்றன.

நான் பொதுவில் புத்தகங்களைப் பரிந்துரைப்பதில்லை. இரசனைகள் வேறுபடுவதால் எனக்கு நல்லதாகத் தெரியும் ஒரு நூல் இன்னொருவ ருக்கு மோசமானதாகத் தெரியலாம். இருந்தும் கடந்தாண்டு நான் வாசித்த அரசியல் சார்ந்த புத்தகங்களில் நான் ரசித்த புத்தகங்களில் ஏழை இங்கு பகிர்கிறேன். அவற்றில் எதுவும் ஆழ மான கோட்பாட்டு அரசியல் பேசுவதல்ல.

ஒன்று இந்தியா பற்றியது. இன்னொன்று சீனா பற்றியது. இரு நாடுகளும் இலங்கை யின் அரசியற்புலத்தில் செல்வாக்குச் செலுத் தும் நாடுகளாகவும் அண்டை நாடுகளாகவும் இருப்பதால், அந்நாடுகளின் நிகழ் நிலைகளைப் பற்றிய புத்தகங்கள் பயனுள்ளவை. இலத்தீன் அமெரிக்காவின் இடதுசாரி அலைக்கு ஏற்பட்ட பின்னடைவைப் பற்றிய மூன்றாவது நூல் சில முக்கியமான பாடங்களைச் சொல்கிறது. இடதுசாரி ஜனரஞ்சகம் குறித்த நான்காவது நூல் வலது தேசியவாத ஜனரஞ் சகத்திற்கு மாற்றாக இடதுசாரி ஜனரஞ்சகத்தைக் கட்டி யெழுப்புமாறு வாதிடுகிறது. ஐந்தாவது இயற்கை எரிபொருட்கள் பற்றி உருவாக்கி யுள்ள மாயைகளைக் களைகிறது. 'சுற்றாடலுக் குக் கேடற்ற' என்ற பல்தேசியக் கம்பெனி களின் சிட்டையுடன் வரும் இயற்கை எரி பொருட்கள் எவ்வாறு உலகப் பட்டினிக்கு வழிகோலுகின்றன என அது ஆதா ரங்களுடன் கூறுகிறது. காலநிலை மாற்றம் எமது அரசியல் தத்துவங் களில் செலுத்தும் செல்வாக்கை ஆராயும் ஆறாவது நூல், கால நிலை மாற்றங்களின் பயனாக அரசியற் கோட்பாடுகள் எதிர் நோக்கும் நெருக்கடிகளைச் சுவை யாக விளக்குகிறது. லெனினின் அர சியற் சிந்தனைகட்குத் துணை



நூலான "பல்கிரேவின்; லெனினிய அரசியல் மெய்யியற் கையேடு" எனும் ஏழாவது நூல் இன்று மேற்குலகில் மார்க்சியமும் அதன் சிந்தனைகளும் கவனம் பெற்றிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தும் வகையில் வந்திருக்கிறது. இக்கட்டுரையில் நான் பரிந்துரைக்கும் ஏழு புத்தகங்களைப் பற்றிய சுருக்கமான அறிமுகம் நான்கு தலைப்புகளின் கீழ்த் தரப்பட்டுள்ளது. அதில் முதல் இரண்டு தலைப்புகளின் கீழான விடயப் பரப்புக்கள் இப்பகுதியிலும் மிகுதி அடுத்த இதழிலும் இடம் பெறும்

**ஆசியாவின் எழுச்சியின் பின்**

சீனாவினதும் இந்தியாவினதும் எழுச்சியை மையப்படுத்தி 21ம் நூற்றாண்டை ஆசியாவின் நூற்றாண்டு என்பர். இந்நாடுகள் பற்றி வெளிவந்த நூல்களில் இரண்டு என் கவனத்தை ஈர்த்தன. முதலாவது பேர்னாட் டி'மெலோ (Bernard D'Mello) எழுதிய "நக்சல்பாரிக்குப் பின்பு இந்தியா: முடிக்காத வரலாறு" (India after Naxalbari: Unfinished History). இந்நூல் 1967ம் ஆண்டு தோன்றிய நக்சல்பாரி இயக்கத்துடன் எழுந்த இந்திய அரசுக் கெதிரான மக்கள் போராட்டம் சந்தித்த பாரிய பின்னடைவுக்குப் பின் மீண்டும் வீறுகொண்டு மாஓவாதப் போராட்டமாக வளர்ந்தது எவ்வாறு என டி'மெலோ ஆழமாக ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். அதேவேளை இந்திய முதலாளிய ஜனநாய கம்பாசிசத் தன்மை பெற்ற விதத்தையும் அதில் இந்தியப் பெரு முதலாளியத்தின் பங் கையும் கோடிகாட்டுகிறது.

இந்தியாவில் அரச ஒடுக்குமுறைக்கெதிரான ஆயுதப் போராட்டம் ஏன் தோன்றியது, அது எவ்வாறு தன்னைத் தக்கவைக்கிறது, மாஓவாதிகளுக்கு ஏன் மக்களின் ஏகோபித்த ஆதரவு இருக்கிறது எனும் வினாக்கட்கான ஆழமான பதில்களை இந்நூல் தருகிறது. குறிப்பாக அரச ஒடுக்குமுறையின் பகுதியாக இராணுவ அட்டூழியங்களும் அரங்கேறும் மாநிலங்களில் ஆயுதப் போராட்டம் தவிர்க்கவியலாதாகிறது என டி'மெலோ விளக்குகிறார்.

மேற்கு வங்கத்தின் நக்சல்பாரி கிராமத்தில் தோன்றிய பொறி எவ்வாறு வீரஞ்செறிந்த எழுச்சியாகியது என்ற கதை இந்தியாவின் சமத்துவமின்மையையும் ஏற்றத்தாழ்வையும் இந்தியாவின் பெரும்பான்மையினரின் அன் றாட அவலத்தினதும் குறியீடு என்று டி'மெலோ குறிக்கிறார். இந்தியாவில் இன்னமும் தொடரும் அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தின் அடிப்படைகள் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கட்கும் அரசியல்வாதிகட்கும் இராணுவ விற்பன்னர்கட்கும் விளங்கவில்லை.

1871ம் ஆண்டு பிரெஞ்சுத் தலைநகர் பாரிசில் ஆயுதந்தாங்கிக் கிளர்ந்த தொழிலாளர்களின் பேரெழுச்சி முதலாளிகளின் அரசமைப்பைத் தகர்த்துப் பாரிஸ் கம்யூன் எனும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியது. அது இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டுத் தோற்றாலும், உழைக்கும் மக்கள் அதிகாரத்தை நிறுவுதற்கான முன்மாதிரி ஒன்றை அது உருக்கு எடுத்து காட்டியது.

அவ்வாறே, "உழுபவனுக்கே நிலம், உழைப்பவனுக்கே அதிகாரம்" என்ற முழக்கத்தை முன்வைத்து, 1967ம் ஆண்டு மே மாதம் ஆயுதப் பேரெழுச்சியைத் தொடக்கி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய நக்சல்பாரி விவசாயிகள் இந்தியப் புரட்சிப் போர்ப் பிரகடனம் செய்தனர். அன்று, நக்சல்பாரி விவசாயிகள் மூட் டிய சிறு பொறி காட்டுத் தீயாகி இந்தியா முழுவதும் படர்ந்ததைக் குறிப்பதே நக்சல்பாரி இயக்கம்.

நக்சல்பாரி, மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங் மாவட்டத்தில் சிலிகுரி வட்டத்தில் உள்ள ஒரு கிராமமே நக்சல்பாரி கிராமம். இங்கு தோன்றி வளர்ந்ததே நக்சல்பாரி இயக்கம். நூலின் முதலாம் அத்தியாயம் "நக்ஸல்வாதி: வசந்தத்தின் இடிமுழக்கம் — கட்டம் 1" என்ற தலைப்புடன் இயக்கத்தின் தோற்றத்தைக் கூறுகிறது. இரண்டாம் அத்தியாயம் 1968இல் இந்தியா எவ்வாறு இருந்தது என்பதையும் ஜனநாயகக் கோரிக்கைகளை முன்வைத்துப் பல்வேறு சமூக இயக்கங்கள் தோன்றிய கதையையும் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று கூறினும் சாதிய, வர்க்க ஒடுக்குமுறைகள் அங்கு உச்சம் தொட்ட நிலையில் ஜனநாயகத்துக்கான குரல்கள் ஆங்காங்கே ஓங்கி ஒலித்ததையும் பதிவு செய்கிறது. மூன்றாம் அத்தியாயம் இந்தியாவின் குறைவளர்ச்சி முதலாளியத்தையும் அதன் விளைவுகளையும் ஆராய்கிறது. "நக்ஸல்வாதி: வசந்தத்தின் இடிமுழக்கம்— கட்டம் 2" என்று தலைப்பிட்ட நான்காம் அத்தியாயம் 1978 முதல் 2003 வரை நக்ஸல் வாதி இயக்கத்தின் இயங்கு திசைகளைக் குறிக்கிறது. இக்காலத்துள் இவ்வியக்கத்தில் ஆழ வேரூன்றிய மாஓவின் 'மக்கள் யுத்தக்' கருத்தாக்கத்தைச் செயற்படுத்திய முறைகளையும் மாஓவாத இயக்கங்களிடையிலான தத்துவார்த்த விவாதங்களையும் ஆராய்கிறது. 'நிதிப் பிரபுத்துவம்' (Financial Aristocracy)

எனத் தலைப்பிட்ட ஐந்தாவது அத்தியாயம் 1989க்குப் பின் இந்தியாவின் முதலாளியத் திறந்த பொருளாதாரக் கொள்கையின் தீய விளைவுகளை ஆராய்கிறது. ஆறாவது இந்தியாவின் சீரழிந்த தாராளவாத அரசியல் ஜனநாயகத்தைப் பற்றியது. 'மாஓவாதிகள்: வசந்தத்தின் இடிமுழக்கம்: கட்டம் 3' என்ற ஏழாவது அத்தியாயம் 2003 முதல் 2014 வரை புரட்சிகர மாஓவாத இயக்கங்களின் செயற்பாட்டை விரிவாக நோக்குகிறது. எட்டாம் அத்தியாயம் இந்தியாவின் மதச்சார்பற்ற அரசு இன்றைய சூழலில் எவ்வாறு தாக்குண்டுள்ளது என்பதையும் பாரதிய ஜனதாக் கட்சியின் வருகை இந்தியாவின் மதச் சார்பின்மைக்கு ஏற்படுத்திய சவாலையும் பற்றிப் பேசுகிறது. ஒன்பதாவது அத்தியாயம் இந்தியா எவ்வாறு ஏகாதிபத்தியத்திற்கு துணைபோய் மக்களைச் சுரண்டுகிறது என்பதற்கான தத்துவார்த்த வாதங்களை முன்வைக்கிறது. மாஓவாதிகள் உருவாக்க வேண்டும் 'புதிய ஜனநாயகத்தின்' அடிப்படைகளையும் இந்திய, உலகச் சூழல்களின் பின்புலத்தில் அதன் இயலுமையையும் நிறைவு அத்தியாயம் ஆராய்கிறது.

1967 தொட்டு இன்றுவரை, நக்சல்பாரி இயக்கமாகத் தொடங்கி இந்தியாவின் 'மிகப்பெரிய ஆபத்தாக' இந்திய அரசாற் குறிக்கப்படும் மாஓவாத இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை இந் நூல் தருகிறது.


அதில் டி'மெலோ இரண்டு வாதங்களை முன்வைக்கிறார். ஒன்று, சுதந்திர இந்தியாவை ஜனநாயக நாடாக வடிவமைத்த போதும் சுதந்திரம் வெறும் கோட்பாட்டு அளவிலேயே இருந்தது. சுதந்திரமடைந்து இருபது ஆண்டுகளில் இந்திய ஏழைகட்கும் பணக் காரர்கட்கும் நடுவே இடைவெளி அதிகரித்தது. அது ஏழைகளைத் மேலும் ஏழைக ளாக்கியது. சுதந்திரமடைந்து 70 ஆண்டு களாகியும்; பொருளாதார வல்லரசாக இந்தியாவின் உயர்வு பிரதிபலிப்பது மக்களின் நிலையை யல்ல, மாறாக இந்தியாவை வழி நடத்தும் கும்பலின் வல்லரசு நிலையையே.

மற்றது டி'மெலோ இந்தியா ஒரு 'துணை– ஏகாதிபத்தியம்' என்ற கருத்தாக்கம். பிரேசிலிய அரசியல் சிந்தனையாளர் ஹ_யி மயு ரொமரினி (Ruy Mauro Marini) முன்வைத்த துணை—ஏகாதிபத்தியக் கருத்தாக்கம் எவ்வாறு இந்தியாவுக்குப் பொருந்துகிறது என்றும் எவ்வாறு அது ஏகாதிபத்தியங்களின் இளைய பங்காளியாக இந்தியா அவற்றுக்குச் சேவையாற்றுகிறது என்றும் டி'மெலோ பேசுகிறார். இக்கருத்தாக்கம் தனியாகப் பேச வேண்டியது.

இரண்டாவது நூல், ஜுன் ஷு Zhun Xu) எழுதிய 'கொம்யூனில் இருந்து முதலாளியத் திற்கு: சீன விவசாயிகள் எவ்வாறு கூட்டு விவசாயத்தை இழந்து நகர்ப்புற வறுமையைப் பெற்றனர்' (From Commune to Capitalism: How China's Peasants Lost Collective Farming and Gained Urban Poverty). சீனாவின் பொருளா தாரம் பற்றிய பெருமைகள் பேசப்படும் காலப் பகுதியில் ஆசியாவின் முன்னோடியாகவும் உலகின் தவிர்க்கவியலாத சக்தியாகவும் சீனா உருவெடுத்துள்ள காலப் பகுதியிலேயே இப்புத்தகம் வாசிப்பைக் கோருகிறது.

மாஓவின் மறைவுக்குப் பின், குறிப்பாக 1980களில் சீனா சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தொடங்கியது. அதன் பகுதியாகக் கூட்டு விவாசாய நடைமுறைகள் நீக்கப்பட்டுக் காணிகள் தனித்தனி விவசாயிகளுக்குப் பகிரப்பட்டன. இது சீனாவின் அதி முக்கிய பொருளாதாரச் சீர்திருத்தமாகும். மிக வெற்றிகரமான ஒரு நடவடிக்கையாக அது தொடர்ந்தும் மெச்சப்படினும், நடைமுறையில் அதன் மோசமான விளைவுகளையும் அது எவ்வாறு சந்தைப் பொருளதாரம் செழிக்க வாய்ப்புக்களை ஏற்படுத்தியது என்பதையும் ஆராயும் இந்நூல் சீனப் பொருளாதார வளர்ச்சியின் பேசாப் பக்கங்களில் ஒன்றைப் பேசும் இந்நூல் மாஓவிற்குப் பிந்திய சீனாவில் உழைப்பை ஒரு பண்டமாக்கியதால் விளைந்த உள்நாட்டு முரண்பாடுகளைப் பற்றி ஒரு தோற்றத்தைக் காட்டுகிறது.

காணிச் சீர்திருத்தம் காரணமாக சீனாவில் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு பங்கு காணி கிடைத்தது. அதன் அதி பெரிய சாதகமான பொருளாதார அம்சமாக விவசாயக் குடும்பத்திலிருந்து நகரத்திற்குப் புலம்பெயரும் ஒரு தொழிலாளி நகரில் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்வதைக் கூறுகிறது. மூன்றாமுலக நாடுகள் எல்லாவற்றிலும் இவ்வாறே நடந்தாலும், சீனாவின் குறைந்தபட்ச ஊதிய முறையால் அவர்கள் வறுமையில் விழவில்லை. ஏனெனில், சீனக்



கிராமத்திலிருந்து புலம் பெயரும் தொழிலாளர் தனது சம்பளத்தை மட்டுமே நம்பி இருப்பதில்லை. அவர்களுக்குக் கிராமத்தில் காணி உண்டு. ஒரு தொழிலாளி குழந்தையாயிருந்து இளைஞனாக வளர்வதும் முதியோரைப் பராமரிப்பதும் கிராமத்திலேயே நடப்பதால், உழைக்கும் வர்க்கத்தின் மறுஉற்பத்தி கிராமத்திலேயே நடக்கிறது. முற்றாகப், பிற மூன்றாம் உலக நாடுகளில் காணியற்ற விவசாயி நகரத்துக்கு வந்தால், மேற்சொன்ன செலவுகளையெல்லாம் நகர விலைவாசி அடிப்படையில், அதிக செலவிற் சந்திக்க வேண்டும்.

சீனாவின் வெற்றிக் கதையின் ஒரு பக்கம் இது. இந்நூல் அதன் மறுபக்கத்தைப் பேசுகிறது. 1980களில் நடைமுறைப்படுத்திய சீனக் காணிச் சீர்திருத்தம், கூட்டுவேலை முறைக்கு முடிவுகட்டியது. ஊற்பத்தித்திறன் அடிப்படை யில் வினைத்திறனான விவசாயத்திற்கும் விவசாயியின் சுதந்திரத்திற்கும் வழிவகுத்ததோடு இது உள்ளூர் கூட்டு முறை நிர்வாகத்தின் தவறுகள் விவசாயிகளைப் பாதிக்காமல் இருக்க வழி செய்தது. நூலாசிரியர் இச்சீர் திருத்தம் கீழிருந்து மேல் நோக்கிய படிமுறை யில் உருவான கருத்துருவாயன்றி மேலிருந்து கீழ் நோக்கி உருவாக்கி நடைமுறைப்படுத்திய திட்டம் என்கிறார். அதேவேளை மாஓவின் ஆட்சியின் கீழ் கருத்துச் சுதந்திரமும் கேள்வி கேட்பதும் பண்பாட்டின் ஒரு அம்சமாக இருந்த நிலையில் விவசாயிகள் மீது திணித்த இக்காணிச்சீர்திருத்ததை அவர்கள் ஏன் கேள்வியின்றி ஏற்றுக் கொண்டார்கள் என்ற கேள்வியை முன்வைத்து அதற்குப் பதில்களைத் தேட விழைகிறார்.

இக்காணிச்சீர்திருத்தம் ஒருபுறம் விவசாயிகளை அரசியலினிற்று நீக்கி நகரத் தொழில் உழைப்புடன் கிராமிய உழைப்பைப் போட்டியிட அனுமதித்ததன் மூலம் கிராமப் புறச் சமமின்மைக்கு வழிகோலியது என்று இந் நூல் வாதிடுகிறது.

முதலாளியப் பாதையை நோக்கி சீனா நகர்ந்தன் விளைவான நகரமயமாக்கம், அரசும், கட்டிடத் துறையினதும் பல்வேறு தொழில் திட்டங்களுக்காக காணியைக் கட்டாயமாகக் பறித்து விவசாயிகளைக் காணிகளிலிருந்து நீக்குகிறார்கள். காணியை இழந்த விவசாயிகளால் நகரச் சூழலில் சம்பளத்தை நம்பி வாழ முடியாது. எனவே அவர்கள் இரு வழிகளில் வறுமைப்படுகிறார்கள். ஒன்றில் நகரத்திலிருந்து குடும்ப உறுப்பினர் வழங்கும் குறைந்த பணத்தில் கிராமத்தில் வறுமையில் உள்ளனர் அல்லது காணிகளைப் பறி கொடுத்து நகரத்துக்கு இடம்பெயர்ந்து வறுமையில் வாடுகின்றனர். நிலங்கள் கூட்டு உடைமையாக இருந்திருந்தால் அவற்றைப் பறிப்பது அவ்வளவு இலகுவாக இருந்திராது. ஏனெனிற், கூட்டாகப் பேசவும் அரசியல் மயப்படவும் சேர்ந்து போராடவுமான களத் தைக் கூட்டு வேலைமுறை வழங்கியது.

சீனச் சமூகத்தில் தொழிலாளர்களிடையே முரண்பாடுகள் தொடர்ந்து கூர்மையடைகின்றன என இந்நூல் குறிக்கிறது. குறிப்பாக பழைய நகர்புறத் தொழிலாளருக்கும் புதிய இடம்பெயர்ந்த தொழிலாளருக்கும் கிராமப் புறத் தொழிலாளருக்குமிடையே முரண்பாடுகள் புதிய கட்டத்தை எட்டியுள்ளன.

சீனா தொடர்ந்து முன்னோக்கிச் செல்ல வேண்டின் இரு விடயங்களை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று இந் நூல் கோருகிறது. ஒன்று, விவசாயிகளை மீள வலுவூட்டுவது. குறிப்பாக அவர்களை மீண்டும் குழுக்களாக்கி கூட்டுறவு போன்ற கட்டமைப்புகளுள் ஈர்த்து அதன்மூலம் அவர்கள் தமக்காகப் போராடவும் அரசியல் மயமாகவும் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். மற்றது விவசாயி– தொழிலாளி கூட்டணியையும் ஒற்றுமையையும் உருவாக்க வேண்டும். அரசியல் பொருளாதாரம் என்ற இரண்டும் தளங்களிலும் இதைச் செயற்படுத்துமாறு என்று இந்நூல் கோருகிறது. 120 பக்கங்களை மட்டுமே கொண்ட நூலாயினும் இன்றைய சீனாவை விளங்க இந் நூல் பயனுள்ளது.

**ஜனரஞ்சகத்தின் சவால்**

கடந்த பத்தாண்டுகளில் உலகெங்கும் ஜனரஞ்சகம் முக்கியமான அரசியல் செல்நெறியாக எழுந்துள்ளது. அது நாட்டுக்கு நாடு வெவ்வேறு வடிவத்தை எடுத்தாலும் பெருந்தேசியத் திமிரும் அதிதீவிர வலது நிலைப்பாடும் இடதுசாரி எதிர்ப்பும் அதன் உள்ளார்ந்த கூறுகளாயுள்ளன. அத்துடன், அது தேசியவாதம், நிறவெறி, தேசபக்தி, குடியேறிகளுக்கு எதிர்ப்பு, சுதேசி மனோ நிலை போன்ற அம்சங்களை வெவ்வேறு அளவுகளிற் கொண்டுள்ளது. இப்பின்னணியில் இத்தோடு தொடர்புடைய பல புத்தகங்கள் கடந் தாண்டு வந்துள்ளபோதும் இரண்டு புத்தகங்களை முக்கியமானவையாகக் கருதுகிறேன்.

ஜனரஞ்சகம் குறித்த அமெரிக்க, ஐரோப்பியக் கதைகளை நாம் அறிவோம். அதற்கு வெளியில் ஜனரஞ்சகம் எவ்வாறு ஏகாதிபத்தியங்களால் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நாமறியோம். மேற்குலகிற்கு வெளியே மக்கள் நல ஆட்சிகளுக்கு எதிராக ஜனரஞ்சக வாதம் எவ்வாறு பயன்படுத்தபடுகிறது என்பதையும் இந்த ஜன ரஞ்சகவாதத்தை எவ்வாறு இடது சாரி முற்போக்கு சக்திகள் எதிர் கொள்வது என்பதையும் இவ்விரண்டு புத்தகங்களும் ஆராய்கின்றன.







ஒன்று, 'இளஞ்சிவப்பு அலையின் வற்று: இலத்தீன் அமெரிக்காவில் இடதின் சரிவு– இலத்தீன் அமெரிக்கப் புரட்சிகர இடதின் துன்பக் கதை' The Ebb of the Pink Tide: The Decline of the Left in Latin America – The Tragic Story of the Radical Left in Latin America) என்ற நூலாகும். இலத்தீன் அமெரிக்காவின் இன் றைய சூழலையும் அங்கு தோன்றிய இடது சாரி அரசாங்கங்கள் கண்ட பின்னடைவையும் அங்கு ஜன ரஞ்சகவாதத்தின் தாக்கத்தையும் இந்நூல் செம்மையாக எடுத்துரைக்கிறது.

1990களின் நடுப்பகுதியையண்டித் தென்னமெரிக்காவில் ஏற்பட்ட இடதுசாரி எழுச்சியால் வெனசுவேலா, பொலிவியா, நிக்கராஹுவா, சிலி, பிரேசில், ஈக்குவடோடர், ஹெய்ற்றி போன்ற நாடுகள் தன்னிறைவுப் பொருளாதார மேம்பாட்டிலும் தமக்குரிய திட்டங்களை வகுத்து சொந் தக் கால்களில் நிற்றலிலும் அக்கறை காட்டின. இது ஏறத்தாழ 20 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடந்தது. இக் காலத்தில் அமெரிக்காவின் காவல் நாய்களாகத் தென்னமெரிக்க நாடுகளை ஆண்ட சர்வாதிகார பிற்போக்குக் குழுக்கள் அடுத்தடுத்துச் சரிந்தன. கியூபாவை முன்மாதிரியாக்கி அதனுடன் இணைந்து அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பில் முன்னோக்கிச் செல்வதில் வெனசுவேலா அதிபர் சாவேஸும் பொலிவிய அதிபர் மொறாலெஸும் முன்னணியில் இருந்தனர். அவ்வேளை, தென் அமெரிக்க நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பும் அதையொட்டிய நிகழ்வுகளும் அமெரிக்காவுக்குப் பெரும் சவாலாயிருந்தன. அந்த அலையின் முக்கிய குணாம்சம் யாதெனில், உலக அரசியல் வழமைக்கு மாறாக, இடதுசாரிகள் தேர்தல்கள் மூலம் பதவிக்கு வந்தனர். அது தனியேயொரு தொழிற்சங்கச் செயற்பாட்டாலோ தனியொரு பிரச்சனையை முன்வைத்த ஒரு இயக்கத்தாலோ உருவாகவில்லை. மாறாகப் பரந்துபட்ட உழைக்கும் மக்களின் ஒன்றிணைந்த போராட்டங்களாலேயே தென்னமெரிக்க நாடுகளில் இடது சாரிகள் ஆட்சிக்கு வந்ததோடு தமது ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைத்தனர். பல தசாப்தங்களாக அமெரிக்காவின் ஆசியுடைய சர்வாதிகார ஆட்சிகள் நிறைந்த தென்னமெரிக்காவின் மக்களை நவ கொலனித்துவமும் தாராளமயப் பொருளாதார மும் பாடாய்ப் படுத்தின. பல்தேசியக் கம்பெனிகள் அளவின்றி வளங்களைச் சுரண்டியதோடு பல தென்னமெரிக்க, மத்திய அமெரிக்க அரசு களை நேரடியாகக் கட்டுப்படுத்தின. குறிப்பாக மத்திய அமெரிக்க நாடுகளின் வாழைத் தோட்டக் கம்பெனிகள் அந்நாடுகளை மறைமுகமாக நிர்வகித்தன. அதனாலேயே வாழைப்பழக் குடியரசு (Banana Republic) என்ற பதம் தோன்றியது. இப் பின்னணியிற் தென்னமெரிக்க மக்கள் பல தடைகளையும் உடைத்துத் தங்கள் வாக்குகளால் மக்கள்நல அரசாங்கங்களை நிறுவினர். இது தென்னமெரிக்க வரலாற்றில் முக்கியமான திசை மாற்றமாகும்.

வெனசுவேலாவில் சாவேஸ், பொலிவியாவில் மோறாலெஸ், நிக்கராகுவாவில் ஒட் டேகா, ஆர்ஜென்டீனாவில் கிர்ஷ்னர் என நவ தாரளவாதத்தைத் துணிந்து எதிர்த்து அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு சவால் விடும் நிலைக்குத் தென்னமெரிக்கா வளர்ந்தது. இந்நாடுகள் பெரிய அந்நியக் கம்பனிகளைத் தேசியமயமாக்கின அல்லது அவற்றின் ஆதிக்கத்தை முடக்கின. தமகெதிரான மிரட்டல்களைத் துணிந்து எதிர் கொண்டன. இது முற்போக்கானது. இந்நாடுகள் இணைந்து உருவாக்கிய அல்பா (ALBA என்னும் அமெரிக்க அரசுகளின் தாபனத்துக்கு (OAS) மாற்றான பொலிவாரிய அமைப்பு, அமெரிக்காவுக்கும் அதன் கூட்டாளிகளுக்கும் எதிரான வலுவான அமைப்பாக பிராந்திய ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் கட்டி வளர்க்க முன்னிற்கிறது.

தென்னமெரிக்க இடதுசாரி அலையைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து முயன்றுள்ளது. 2009இல் ஹொண்டூராஸில் சதிப் புரட்சி மூலம் வெற்றிகரமான ஆட்சிமாற்றமொன்றை அமெரிக்கா நடத்தியது. 2012 யூலையில் பரகுவாயின் இடது சார்பு ஜனாதிபதி பதவி நீக்கப்பட்டார். அடுத்து சாவேஸ் ஐயத்துக்குரியவாறு நோய்பட்டு இறந்த பின், பிராந்தியமெங்கும் பாரிய பின்னடைவு நேர்ந்தது. அடுத்து ஆர்ஜென்டீனாவிலும் பிரேசிலிலும் நிகழ்த்திய மாற்றங்கள் ஜன ரஞ்சக வலது— தேசியவாதத்தின் விளைவானவை.

இந்நூல் இடதுசாரி அலை எழக் காரணமாயிருந்த சூழலையும் அதையண்டிய மக்கள் போராட்டங்களையும் கோடுகாட்டி இலத்தீனமெரிக்க மக்கள் விழிப்படைந்த கதையைக் கூறுகிறது. அதே வேளை, இந்நாடுகளில் எவ்வாறு எதிர்ப்புரட்சி மெது மெதுவாகச் சாத்தியமானது என்பதைக் காரணங்களுடன் விளக்குகிறது. ஆர்ஜென்டீனாவில் இடதுசாரி ஜனாதிபதி கிர்ஷனருக்குப் பின் வலதுசாரி ஜனரஞ்சக அலை எவ்வாறு வென்றது என்பதையும் ஏகாதிபத்தியம் எவ்வாறு ஜனரஞ்சகத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது என்பதையும் இந்நூல் விளக்குகிறது. இப்பின்புலத்தில் பிரேசிலின் கடந்தாண்டு தேர்தல் முடிவுகளையும் வெனசுவேலாவில் திட்டமிட்டு அரங்கேற்றப்படும் சதியையும் காணவியலும்.

தென்னமெரிக்க மக்கள் தங்கள் உரிமைகட்காகப் போராடத் தொடங்கிய பின்புலம், அதை இயலுமாக்கிய இடதுசாரி அரசாங்கங்களின் உருவாக்கத்தின் கதை, அவ்வரசாங்கங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்னிலைப்படுத்தி நவதாராளவாதத்தை நிராகரித்த விதம், வளங்களும் சேவைகளும் தேசியமயமாகி அரசுடைமையானதன் பயனை மக்கள் அடைந்தமை, சர்வதேச நாணய நிதியம் தென்னமெரிக்காவில் தனது கோரப் பிடியை இழநதமை ஆகியவற்றை இந்நூல் விரிவாகக் கூறுகிறது. அத்துடன், கடந்த பத்தாண்டுகளில் இளஞ்சிவப்பு அலை உருவாக்கிய இடதுசாரி அரசாங்கங்களின் சரிவையும் பின்னடைவையும் அதற்கு ஜனரஞ்சகத்தின் பங்கையும் அது விளக்குகிறது

இது மற்ற நூலின் தேவையைச் சுட்டுகிறது. இடதுசாரி அரசாங்கங்கட்கு ஜனரஞ்சகம் சவாலாகும் போது அச்சவாலை எதிர்கொள்வது எவ்வாறு என்ற கேள்வி எழுகிறது. 'இடது ஜனரஞ்சகத்துக்காக' (For a Left Populism) என்ற நூல் எழுந்த கேள்விக்கு ஒரு விளக்கத்தை முன்வைப்பதோடு ஜனரஞ்சகத்தை இடதுசாரிகள் எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற ஆலோசனையை முன்மொழிகிறது. ஷன்தல் மூஃப் (Chantal Mouffe) என்ற பெல்ஜிய அரசியற் கோட்பாட்டாளர் எழுதிய இந்நூல் ஜனரஞ்சகம் குறித்த சில முக்கிய கருத்துக்களை முன்வைக்கிறது.

அடிப்படையில் தோல்வியடைந்துவரும் நவதாராளத்திற்கு எதிரான மனநிலையின் விளைவே ஜனரஞ்சகம் என மூஃப் வாதிடுகிறார். உலகை ஆண்டுவந்த நவதாராள, திறந்த சந்தைப் பொருளாதார விதிகள் மக்களுக்கு விளைத்த இன்னல்களின் பயனாக மக்கள் அதற்கு எதிரான தெரிவை நோக்கி நகர்கிறார்கள். இம்மாற்றத்தால் ஏற்பட்ட இடைவெளியை வலது தேசியவாதிகள் நாட்டுக்கு நாடு வேறுபடும் பல்வேறு உச்சாடனங்களால் நிரப்புகிறார்கள். இடதுசாரிகள் தங்கள் செயலின்மையினால் அதை இயலுமாக்குகிறார்கள் என மூஃப் கூறுகிறார்.

மக்களுக்கும் ஆட்சியாளர் குழுவுக்கும் இடையிலான முரண்பாட்டில் மக்கள் பக்கம் நிற்கும் இடதுசாரிகள் இச்சூழலைப் பயன்படுத்த முன், ஆட்சியாளர் குழுவில் இருக்கின்ற சிறிய பகுதி தங்கள் மக்கள் அனுதாபிகளாகக் காட்டிக் கொண்டு ஜனரஞ்சகவாதத்தைக் கையிலெடுக்கிறார்கள். இதற்கு எதிராக இடதுசாரிகள் செயலாற்ற வேண்டும் என்று மொவ் கோருகிறார்கள். ஆட்சியாளர் குழுவுக்கு எதிராக உருவாகின்ற ஜனரஞ்சக அலையை இடதுசாரி ஜனரஞ்சக அலையாக மாற்ற வேண்டும் என்றும் அது தவிர்க்கமுடியாதது என்றும் இந்நூல் வாதிடுகிறது.

வலதுசாரி ஜனரஞ்சகம் பலவழிகளில் மக்களை ஒதுக்கிறது, ஜனநாயக மறுப்பை ஆயுதமாக்குகிறது, வெறுப்பை உமிழ்கிறது. இவையனைத்தையும் இடதுசாரி முற்போக்கு சக்திகள் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் தீவிர வலது ஜனரஞ்சகம் தோன்றுவதைத் தடுக்கவியலும் என்று இந்நூல் சொல்லிச்செல்கிறது. வாசிப்பதற்கு கொஞ்சம் சிரமமமானதாக இருந்தாலும் இடதுசாரிச் செயற்பாட்டாளர்கள் படிக்க வேண்டிய நூல்.

(மிகுதி அடுத்த இதழில்)





புத்தூர் சோமஸ்கந்த வித்தியாலயத்தில் 15.01.2019இலும் காரைநகர் இந்துக் கல்லூரியில் 16.02.2019இலும் தேசியகலை இலக்கியப் பேரவையின் நாடக கொண்டாட்டம் நிகழ்வுகளில் குழந்தை ம சண்முகலிங்கத்தின் உறவுகள், தான் விரும்பாத் தியாகி நாடகங்களின் காட்சிகள்




அரச நாடக விழாவில் கொழும்பு மருதானை எல்பின்ஸ்டோன் அரங்கில் அன்புமுதூறும் அயலார் நாடகத்தின் காட்சிகள்




ஹட்டனில் பெண்கள் விடுதலைச் சிந்தனை அமைப்பு 09.03.219 இல் நடாத்திய சர்வதேச மகளிர் நிகழ்வில்




கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை முருகையன் கேட்போர் கூடத்தில் 9.12.2018இல் நிகழ்ந்த பேராசிரியர் கைலாசபதி அவர்களின் 36 வது ஆண்டுநினைவு கருத்தரங்கு நிகழ்வில் சில பதிவுகள்

தேசிய கலை இலக்கியப் பேரவை கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுவரும் சமூக விஞ்ஞான படிப்புவட்டத்தின் கலந்துரையாடல்களின் சில பதிவுகள்



யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் பெண்கள் விடுதலைச் சிந்தனை அமைப்பு, சமூக மேம்பாட்டுக் கழகம், சமூக மேம்பாட்டு இணையம் இணைந்து நடாத்திய சர்வதேச மகளிர் தின விசேட கூட்ட பதிவுகள்



தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக வெளிவந்த மாதவி உமாசுதசர்மாவின் 'அவளும் நானும்' கவிதை நூல் வெளியீட்டு விழா 30.09.2018 இல் கொக்குவில் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் சில பதிவுகள்



எழுத்தாளர் ஐ. சாந்தனின் படைப்புலகம் அரசியல், சூழல், அழகியல் பற்றிய பிரக்ஞைகள் விசேட கலந்துரையாடல் 16.12.2018இல் தேசியகலை இலக்கிய பேரவை முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் சில பதிவுகள்

